# உதயன்

www.uthayan.com

விலை ரூபா 15.00

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 03 வியாழக்கிழமை (17.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 203


17 JUN 2010

# தமிழ்க் கூட்டமைப்பினருடன் யசூசி அகாஷி நாளை பேச்சு

## வன்னியில் மீள்குடியமர்வு, அரசியல் தீர்வு முக்கிய இடம்பெறும்



கொழும்பு, ஜூன் 17

ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி நாளை வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்துவார்.

இச்சந்திப்பின்போது வன்னி மக்கள் மீள் குடியமர்வு மற்றும் அரசியல் தீர்வு என்பன முக்கிய இடம் வகிக்கும் என்று தெரியவருகிறது. நாளை இரவு 7.00மணிக்கு இச்சந்திப்பு கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தில் நடைபெறும்.

இது குறித்து நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அகாஷி இந்தத் தகவலை வெளியிட்டார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் கூறியவை வருமாறு:-

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் வெளிநாடு சென்றுள்ளார். எனவே, ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளோம். நான் இலங்கையில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் மனித உரிமை அமைப்புகளையும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளேன்.

ஜப்பான், இலங்கைக்கு 39 பில்லியன் யென்களை (24ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதரகத்தில் இலங்கையர் மோதல்

கொழும்பு,ஜூன் 17

நோர்வேயில் உள்ள இலங்கை தூதரக ஊழியர்களுக்கும் நோர்வேயில் உள்ள தமிழர்கள் சிலருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தனிப்பட்ட காரணத்திற்காக இடம்பெற்றுள்ளதாக நோர்வே தூதரகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி இரவு உணவகம் (24ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே 06ஆம் பக்கத்தில்

ஜனதா விமுக்தி பெரமுனவின் பேச்சாளரும் எம்.பியுமான அனுரகுமார திஸநாயக்கா உதயனுக்கு வழங்கிய செவ்வி


# நீங்கள் மீண்டும் வழமையான வாழ்க்கைக்குத் திரும்ப ஐ.நா. சகல உதவிகளையும் செய்து வருகின்றது

## வற்றாப்பளை மக்களிடம் ஐ.நா. அதிகாரி லியன் பாஸ்கோ

கொழும்பு,ஜூன் 17

கோரமான போர் முடிந்துவிட்டது. நீங்கள் மீண்டும் வழமையான வாழ்க்கைக்குத் திரும்புவதற்குத் தேவையான உதவிகளை ஐக்கியநாடுகள் சபை செய்துவருகிறது.

முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளையில் உள்ள சுகாதார நிலையத்தில் சிறு குழந்தைகளுடன் தாம் சந்தித்த தாய்மாரிடம் இவ்வாறு கூறினார் ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிப் பொதுச் செயலாளர் லியன் பாஸ்கோ.

அவர் அங்கிருந்து, கூட்டுறவுச் சங்கக் கடையில் ஐ.நா. வழங்கிய உணவுப் பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதையும் பார்வையிட்டார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள லியன் பாஸ்கோ அரசியல் நல்லிணக்கம், மனித உரிமைகள் பேணப்படும் நிலைமை (24ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஐ.நா.சபையின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிப் பொதுச்செயலாளர் லியன் பாஸ்கோவை ஜனாதிபதி தலைமையிலான அரச உயர் மட்டக்குழு சந்தித்த போது....

## கிளிநொச்சியில் பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்ற இன்று வருகிறார் நாமல்

கிளிநொச்சி,ஜூன் 17

ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ இன்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றவிருக்கின்றார்.

இளைஞர் அலுவல்கள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இளைஞர் அலுவல்கள் பிரதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் சகிதம் வரும் நாமல் ராஜபக்ஷ காலை முதல் மாலை வரை அடுத்தடுத்து ஒன்பது நிகழ்வுகளில் பங்குபற்றவிருக்கின்றார்.

அக்கராயன்குளத்தில் 2 லட்சம் மீன்களை விடுதல், (24ஆம் பக்கம் பார்க்க)

## நாடுமுழுவதும் குடிசன மதிப்பீட்டை அடுத்த வருடம் நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 17

முப்பது வருடங்களின் பின்னர், முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் 14 ஆவது குடிசன மதிப்பீட்டை 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் (24ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி வைபவங்களில் கூட்டமைப்பினர் அரச தரப்பால் திட்டமிட்டுப் புறக்கணிப்பாம்

கிளிநொச்சி,ஜூன் 17

கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட வன்னியில் அரச அமைச்சர்கள், எம்.பிக்கள் கலந்துகொள்ளும் விழாக்கள், வைபவங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி தமிழ் மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இவ்விழாவில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தார். இவ்வைபவத்தில் நாமல் ராஜபக்ஷவும் கலந்துகொண்டார். ஆனால், இந்த வைபவத்துக்கு யாழ்., வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் எவருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

ஒரு மாவட்டத்தில் அரச அமைச்சர்கள் கலந்துகொள்ளும் வைபவங்களுக்கு அம்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்படுவது நடைமுறை ஆகும். இருந்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் அமைச்சர்கள் கலந்துகொள்ளும் வைபவங்களுக்கு அந்த மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுவதில்லை. இது திட்டமிட்ட புறக்கணிப்பு என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

இதேவேளை, இன்று ஜனாதிபதியின் (24ஆம் பக்கம் பார்க்க)

### யுத்தம் முடிந்து 13 மாதங்கள் கடந்துவிட்டபோதும்

## மீளக்குடியமர்ந்தோரின் அடிப்படைத் தேவைகள் கூட மஹிந்த அரசினால் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை

### யாழ்.நகரில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஜே.வி.பி. தலைவர்

யாழ்ப்பாணம்,ஜூன் 17

யுத்தம் முடிவடைந்து 13 மாதங்கள் கடந்த நிலையிலும் மஹிந்த அரசாங்கம் தமிழ்மக்களுக்கான எந்தவித அடிப்படைத் தேவைகளையும் பூர்த்திசெய்யவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் (ஜே.பி.வி.) சோமவன்ஸ அமரசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஜே.வி.பியினர் நேற்று ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினர்.

அந்த ஊடகவியலாளர் மாநாட்டில் சோமவன்ஸ அமரசிங்க மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விற்பனைக்கு

பேக்கரிகளுக்குத் தேவையான
50 கிலோ மா குழைக்கக்கூடிய மிசின்
விற்பனைக் குண்டு.
தொடர்பு: 0217200440



## காணவில்லை

கட்டைவாலுடைய முகத்தில் சடையுடைய பிறவுண், வெள்ளை நிறமுடைய பெண்நாய் இலந்தையடி, உடுவிலில் காணாமல் போய்விட்டது. இதைக் கண்டவர்கள் அல்லது பிடித்து வைத்துள்ளவர்கள் தயவு செய்து V.ஜெகநாதன், இலந்தையடி வீதி என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தொ.பே. இல. 0771552539. தகுந்த சன்மானம் வழங்கப்படும.



## கொனிகா கலர் லாப்
### தேவை

1) கணக்குப் பதிவாளர்கள்(ஆண்,பெண்)
2) கிராபிக்ஸ் டிசைனர்(ஆண்,பெண்)
3) மேற்பார்வையாளர்(ஆண்)
4) கலர்லாப் ஸ்ரூடியோ பயிலுநர்கள்

14,ஸ்ரீ வேங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம். 0212223493



## தேவை

புடைவை வியாபாரம் பழக விரும்புபவர்கள் அல்லது அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை.
அபிராமி புடைவையகம்
155, 156, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 0212228627


# ஆழிப்பேரலையால் வீடு இழந்தோர் கல்முனையில் நேற்று ஆர்ப்பாட்டம்

## பிரதேச செயலகம் முற்றுகை; பணிகள் ஸ்தம்பிதம்




கொழும்பு, ஜூன் 17
2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கல்முனைக்குடி மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் அவர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து அந்த மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை கல்முனை முஸ்லிம் பிரதேச செயலக அலுவலகத்தை அந்த மக்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் செயலகத்தின் பணிகள் முற்றாகத் தடைப்பட்டன. அவர்களின் இறுக்கமான முற்றுகை காரணமாகச் செயலகத்தைத் திறக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் செயலகத்தின் முன்பாகப் பாய்களை விரித்து அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆண்களும், பெண்களுமாகப் பெரும் எண்ணிக்கையானோர் இதில் கலந்துகொண்டனர்.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியவை வருமாறு:-

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஐந்தரை வருடங்கள் ஆகிவிட்டன. இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எமக்கு இன்னும் வீடுகள் வழங்கப்பட வில்லை.

எமக்காக கல்முனை இறைவரிக் கண்டத்தில் 456 வீடுகள் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளன. அவற்றை எமக்கு இன்னும் வழங்காது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இழுத்தடிக்கின்றனர்.

நாம் இப்போது நிரந்தர வீடுகள் இல்லாமல் துன்பப்படுகின்றோம். அரசியல்வாதிகளிடம் இது தொடர்பாகப் பல தடவைகள் முறைப்பாடு செய்தும் எந்தப் பலனும் கிட்ட வில்லை. எமக்காக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வீடுகளைக்கூட எமக்கு வழங்காது அரசு இழுத்தடிக்கின்றது.

இனிமேலும் எம்மால் பொறுமையாக இருக்க முடியாது. எமக்கு உடனடியாக வீடுகள் வழங்கப்பட வேண்டும். வீடுகள் வழங்கப்படும்வரை எமது போராட்டம் தொடரும் - எனக் கூறினர். (சி)


## தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம்
### பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. எழுதுநர் - க.பொ.த. சா/த. பரீட்சையில் சித்தி, கணக்கு எழுதும் அறிவு
2. நேரம் கணிப்பாளர்

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 21.06.2010 இற்கு முன்னர் சிற்றூர்தி சேவைகள் சங்கம், தென்மராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (சி/568236) நிர்வாகம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி அதிபர் தரம் 3 இற்குப் பதவி உயர்வு பெற்று சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலைக்கு 15.06.2010 முதல் அதிபராக நியமனம் பெற்றுச் சென்ற எமது ஆசிரியை

திருமதி
தயாசக்தி பாலசுப்பிரமணியம்

அவர்களைப் பாராட்டுவதுடன் எதிர்காலத்தில் இன்னும் பல பதவி உயர்வுகள் பெற்று உயர்ச்சி அடையவும் வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.
(99611)



## தேவை

* கணனி அறிவுடைய பெண் * புகைப்படம் பிடிப்பு அனுபவம் உள்ள ஆண் (பழக ஆர்வம் உள்ள ஆண்).
* முச்சக்கர வண்டி (ஓட்டோ) செலுத்தக்கூடியவர் தேவை. யாழ்.நகரத்திற்குள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகள்: 0214901352, 0789147363



## காணி விற்பனைக்கு

கண்டி வீதியில் புங்கங்குளம் சந்திக்கும் மாம்பழம் சந்திக்கும் இடையில் கிணற்றுடன் கூடிய 5 நிலப்பரப்புக் காணி விற்பனைக் குண்டு. (சின்னக்கிணற்றடி ஒழுங்கைக்குப் பக்கத்தில் உள்ளது). தொடர்பு: 0212221454
(2pm to 6pm வரை)



## கண்ணீர் அஞ்சலி

எங்கள் ஆலயத்தின் ஆஸ்தான தவில் வித்துவான் இராமமூர்த்தி முருகானந்தன் (நடுவிலான்) அவர்களின் அன்புத் தாய்

### திருமதி பொன்மாணிக்கம் இராமமூர்த்தி

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா இறைவனடியில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!
சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில். (99603)
பரிபாலனசபை, மத்தனைக் கந்தசுவாமி கோயில்



## வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கியில் 38 ஆண்டுகள் அளப்பெரிய சேவையாற்றி
இன்று தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து இளைப்பாறிச் செல்லும்
அனைவருக்கும் அன்பாளன் - இன்னாசெய்யா இனியவன் - ஆன்மீகவாதி
யாழ்.பிராந்திய உதவிப் பிராந்திய முகாமையாளர்

### உயர் திரு. எஸ்.ஹென்றி

அவர்களை இந்நாளில் மனதார வாழ்த்துகின்றோம்.

அ.சதீஸ், ரி.ஆனந்த், எஸ்.சுபசீலன்,
எம்.கலிஸ்ரா.
(சி/568234)


## கிளி.மாவட்ட ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர் கவனத்துக்கு

கிளிநொச்சி, ஜூன் 17

இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இது வரை தோற்றாமலும், இம்முறை பதிவு செய்யாத காரணத்தால் விண்ணப்பம் நிராகரிக் கப்பட்டுள்ள 21 வயதிற்கு உட்பட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளை இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திற்குச் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவர்களை மாகாணத்தில் பதிவு செய்து, பதிவு இலக்கம் வழங்குவதற்காகப் பதிவுக்கட்டணமாக 575 ரூபா பணத்தையும், நிராகரிக்கப்பட்ட கடிதத்தையும் தம்முடன் கொண்டு வருமாறும், பதிவு செய்யத் தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)


## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் தர்மகர்த்தா சபைப் பொருளாளர் வடிவேலு சிவஞானம் அவர்களின் அன்புத் தாய்



### திருமதி வடிவேல் பராசக்தி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனு தாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதியைப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபை
ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்
(பன்றிக்கோட்டுப்பிள்ளையார்)
(99621)



## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி வடிவேல்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி வடிவேல் நேற்று (16.06.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேல்(Retd. Chief Clerk - Public Works Dept.), அவர்களின் அன்பு மனைவியும் சிவஞானம்(Retd. Production Manager, Paranthan Chemicals Company Ltd. ), மனோரஷிதா, பிரியதர்சினி(Retd. Principal உயரப்புலம், குணபாலன் வித்தியாலயம்); சசிரூபனி, யோகேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சௌபாக்கியலக்ஷ்மி(சங்கீத வித்துவான்) அவர்களின் அன்பு மாமியாரும் தசஷாயணி(Office Administrator - GTZ PIP)யின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (17.06.2010) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கரையாம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.சிவஞானம்
(மகன்)
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (99619)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நியாயமான செயற்பாடா இது.....?

தன்னார்வத் தொண்டு நிறுவனச் செயலகத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளது அரசாங்கம்.

உள்விவகார அமைச்சின் கீழ் இயங்கிய தன்னார்வத் தொண்டு நிறுவனச் செயலகம் புதிய நாடாளுமன்றம் செயற்படத் தொடங்கிய போதே பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுவிட்டது. ஆனால் அது பற்றிய தகவல் இப்போதுதான் வெளிப்பட்டுள்ளது.

தன்னார்வத் தொண்டு நிறுவனச் செயலகம் அதன் ஆரம்பத்தில் உள்துறை அமைச்சின் கீழ் இயங்கியதாகவும் அதன்பின்னர் வேறு அமைச்சுகளின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிக உன்னிப்பாக நோக்கினால், மக்களுக்குத் தொண்டு செய்யும் நிறுவனங்களைக் கையாளும் மேற்சொன்ன செயலகத்திற்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி எவரிடமும் எழுவது இயல்பு.

வன்னியில் போர் நடைபெற்ற காலத்தில் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற முடிவைப் பாதுகாப்பு அமைச்சே மேற்கொண்டது. அதற்கான காரணம் அந்த நிறுவனங்களில் பணியாற்றுவோர் மூலம் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட தகவல்கள் - அதாவது உண்மையான நிலைமை - வெளியே தெரிய வந்துவிடும் என்பதுதான்.

அத்தருணத்தில் அங்கு வாழ்ந்த மக்களைக் காப்பாற்றுவதில் காட்டப்பட்ட அக்கறையின்மை, யுத்தகளத்தில் உண்டான பாதிப்புக்கள் மற்றும் ஏற்படுத்தப்பட்ட நஷ்டங்கள் என்பன குறித்த விவரங்கள் சம்பந்தமான சரியான, உண்மையான தகவல்கள் தெரிய வந்துவிடும் என்ற அச்சமே சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் வன்னியில் இருந்து வெளியேற்றப்பட்டதற்குப் பிரதான காரணம்.

அந்த வேளையே, வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களையும் சரி, உள்நாட்டு தொண்டு நிறுவனங்களையும் சரி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நிச்சயித்திருப்பார்; தீர்மானித்து இருப்பார். இப்போது அந்த எண்ணம் நிறைவேறி இருக்கிறது; செயல் வடிவம் கண்டுள்ளது.

சரி, போர் நிகழ்ந்த காலத்தில் தொண்டு நிறுவனங்களை மஞ்சள் கண்ணோடு பார்த்தது பல்வேறு விவகாரங்களை மறைத்து விடும் நோக்கத்தைக் கொண்டதாக இருந்திருக்கலாம். ஆனால் போர் ஓய்ந்து அமைதி நிலவுகின்ற இவ்வேளையில் தொண்டு நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் அல்லது கண்காணிக்கும் பாத்தியதை பாதுகாப்பு அமைச்சுக்கு உரியதா?

அவை இலங்கையில் இருக்கும் பொக்கிஷங்களை அள்ளிக் கொண்டு போய்விடும் என்ற அச்சத்தினாலா, அல்லது அவை இங்கு கொடி கட்டிய வாகனங்களில் பயணம் செய்யக்கூடாது என்பதற்காகவா இந்த நடவடிக்கை? பாதுகாப்புத் துறைக்கும் மக்களுக்கு நலன் செய்யும் போக்குடன் இயங்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் என்ன விதத்தில் சம்பந்தம் உண்டு? அவர்கள் இந்த நாட்டின் நிதியை அல்லது இயற்கை வளங்களை எடுத்துச் செல்கின்றன; அவற்றைத் தடுக்கும் பலம் பாதுகாப்பு அமைச்சுக்கு மட்டும்தான் உண்டு என்று அரசு நினைப்பதாலா? இது மொட்டந் தலைக்கும் முழங்தாளுக்கும் முடிச்சுப் போட்ட கதையாகவே முடியும்.

சர்வதேச தொண்டு நிறுவனங்களும் சரி, உள்நாட்டுத் தொண்டு நிறுவனங்களும் சரி எல்லாமே நேர்மையானவை என்றோ, மோசடியில் ஈடுபடாமல் கண்ணியமாகச் செயற்படுபவை என்றோ அல்லது உள்நோக்கங்கள் இன்றி இயங்குபவை என்றோ நாம் சொல்ல வரவில்லை.

தொண்டு நிறுவனங்கள் என்ற பெயரில் ஒரு சில தத்தமது இலாபங்களையும் சொந்த இலக்குகளையும் நோக்கிச் செயற்படுகின்றன என்பதற்காக -

நொந்து கிடக்கும் மக்களுக்காகத் தம்மால் இயன்ற அளவு உதவி, அவர்களின் வாழ்வாதாரங்களைச் செம்மைப்படுத்த உழைக்கும் நிறுவனங்களுடன் சேர்த்துப் பார்த்து அவற்றைக் கலைத்துவிட அல்லது குலைத்துவிட முனையலாகாது.

மொத்தத்தில் இந்த நாட்டின் பாதுகாப்பில் அல்லது அது சம்பந்தமான விடயங்களில் தலையிடும் நோக்கத்துடன் தொண்டு நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன என்று கொள்வதும் ஏற்கக்கூடியது அல்ல.

நிதிப்பற்றாக்குறையால் சுருண்டு போயுள்ள அரசுதான் மக்களுக்குத் ஆற்ற வேண்டிய, இடைவெளி விட்டுள்ள சேவைகள் பலவற்றையும் ஆற்றும் தொண்டு நிறுவனங்கள் மீது கைவைக்க நினைக்கக் கூடாது. அதுவும் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பில் அவற்றினைக் கொண்டு வருவது ஆரோக்கியமானதல்ல. இறுதியில் மக்கள் நலன்களே பெரிதும் பாதிப்புறும்.

# படையினரின் இடையூறுகளுக்கு மத்தியிலும் வன்னி மக்களைச் சந்தித்துப் பேசினோம்

## ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

பாதுகாப்புப் படையினரின் சில இடையூறுகளுக்கு மத்தியிலும் நாம் மீள்குடியமர்ந்த மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு அறிந்துகொண்டோம்.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். நகரில் நேற்று நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

நாட்டின் சகல இடங்களுக்கும் அரசியல் கட்சிகள் சென்றுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பிரதமர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி வன்னியில் மீள்குடியமர்ந்த மக்களைச் சந்திக்கச் சென்றிருந்தோம்.

அங்கு சென்றிருந்த வேளையில் ''ஏ-9 பாதையால் செல்வதற்கு மட்டுமே அனுமதி. உள்பகுதிகளுக்குச் செல்ல அனுமதி இல்லை'' என்று இராணுவத்தினர் கட்டுப்பாடுகளை விதித்தனர்.

அந்தக் கட்டுப்பாடுகளை மீறி எமக்கு இராணுவம் அனுமதி வழங்காத பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினோம்.

அங்கு நாம் சந்தித்துக் கலந்துரையாடிய வீட்டின் குடும்பத் தலைவர் இராணுவ முகாமுக்கு அழைத்து விசாரிக்கப்பட்டதாக நாம் அறிகிறோம்.

இத்தகைய நெருக்கடிகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் எடுத்துக் கூறவுள்ளோம் - என்றார். (ஒ-9)

# வெளியிடங்களுக்குச் செல்லும் பஸ்கள் பிரதான வீதி வழியாகவே செல்லும்

## போக்குவரத்துச் சபை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் சேவையிலீடுபடும் பஸ்கள் அனைத்தும் பிரதான வீதி ஊடாகவே சேவையிலீடுபட வேண்டும் என இலங்கை போக்குவரத்து சபை அதிகாரி யாழ்ப்பாணம் இ.போ.ச. டிப்போ நிர்வாக அதிகாரிக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

வெளி மாவட்டங்களுக்கும், குடாநாட்டின் பகுதிகளுக்கும் கண்டி வீதி ஊடாக நடத்தப்பட்டுவரும் இ.போ.ச. பஸ் சேவைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதி, வேம்படி வீதி, பிரதான வீதி, கண்டி வீதி ஊடாகவே நடத்தப்பட வேண்டும்.

அதேபோல வெளிமாவட்டங்களிலிருந்தும் குடாநாட்டின் பகுதிகளிலிருந்தும் கண்டி வீதி ஊடாக யாழ். மத்திய பஸ் நிலையத்தை நோக்கி வரும் பஸ் வண்டிகள் பிரதான வீதி, யாழ். நூல் நிலைய வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதி வழியாகவே வந்தடைய வேண்டும் என அந்த அதிகாரி மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த இரு வழிகளிலும் சேவையிலீடுபடும் இ.போ.ச. பஸ் வண்டிகள் கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி ஊடாகவே சென்று வருகின்றன. இதனால் பிரதான வீதி, சுண்டுக்குளி, சின்னக்கடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக இப்பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் இ.போ.ச. தலைமைப்பீட முறைப்பாட்டுப்பிரிவு அதிகாரியிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்தே இ.போ.ச. தலைமையக முறைப்பாட்டுப்பிரிவு அதிகாரி கண்டி வீதி ஊடாக இடம் பெற்றுவரும் சகல இ.போ.ச. பஸ் வண்டிகளும் பிரதான வீதி ஊடாகவே இடம்பெற வேண்டும் என்றும் அதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் இ.போ.ச. யாழ். டிப்போ அதிகாரிக்கு அறிவுறுத்தியுள்ளார். (50-236)

## விக்னேஸ்வரா ஆரம்ப பிரிவு அங்குரார்ப்பண விழா நாளை

கரவெட்டி, ஜூன் 17

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆரம்பப்பிரிவு பாடசாலையின் புதிய அமைவிடத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நாளை நடைபெறவுள்ளதாக அதன் அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் முதல் செயற்படும் இந்த ஆரம்பப்பிரிவு பாடசாலையின் புதிய அமைவிடத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (க)

## நாடகமும் அரங்கியலும் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 17

செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தும் நாடகமும் அரங்கியலும் பாடநெறிக்கான உயர்தர பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமையும், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இரு தினங்களும் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ். மத்தியகல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் அனுபவம் பெற்ற விரிவுரையாளர்கள் விளக்கமளிப்பார்கள்.

இக்கருத்தரங்கிற்கான மேலதிக விவரங்களை திருநெல்வேலி ஆடிய பாதம் வீதி, அருளகம் எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-236)

# 106 குடும்பநல மருத்துவ மாணவிகள் விரிவுரைகளில் பங்கேற்க அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். தாதியர் கல்லூரியின் குடும்பநல மருத்துவ மாது பயிற்சியாளர்களுக்கு இடம்பெறும் விரிவுரைகள் மற்றும் செய்முறைப் பயிற்சிகளில் பங்கேற்க 106 மாணவிகளுக்கு கல்லூரி நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளமை குறித்து பாதிக்கப்பட்டுள்ள மாணவிகள் தரப்பில் கடும் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

கல்லூரியின் பெண் விரிவுரையாளர் ஒருவரின் அதிருப்தியான நடவடிக்கையைக் கண்டித்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குக் கடிதம் எழுதிக் கையெழுத்திட்ட மாணவிகளும், யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் கையெழுத்திட்ட மாணவிகளும் என 106 பேர் தற்போது விரிவுரைகளிலும், செய்முறைப் பயிற்சிகளிலும் பங்கேற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கடந்த 10ஆம் திகதியிலிருந்து இந்த அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

தற்போது கல்லூரியில் 13 மாணவிகள் தமது பயிற்சியைத் தொடர்ந்து வருகின்றனர். இவர்களில் 106 மாணவிகளுக்கு விரிவுரைகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாணவிகளுக்கு வழமை போன்று விரிவுரைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பகுதி - I பரீட்சைக்கு இன்னும் 2 மாதங்களே உள்ளபோதிலும், தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மாணவிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (50-14)

## இலகு வேலைத்திட்ட நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலகு வேலைத்திட்டத்தை மேற்கொண்ட பயனாளிக்கான உலர் உணவுப் பொருள்கள் இந்த வாரத்தில் விநியோகிக்கப்படவுள்ளது.

மார்ச் மாதத்துக்கான பொருள்களை இந்த வாரத்தில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி ஒரு நாள் வேலை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரம் வருமாறு :-

அரிசி - ஒரு கிலோ, மா - ஒரு கிலோ, பருப்பு - 300 கிராம், சீனி - 100 கிராம், சமையல் எண்ணெய் 0.108 மில்லி. லீற்றர். (50-224)

# ஆலயத்துக்குச் சென்ற பக்தர்களுடன் ரகளை; இளைஞர்களுக்குப் படையினர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17

கோப்பாய் தெற்கு தனிப்பனை வீரபத்திரர் ஆலயத்துக்குக் கடந்த சில நாள்களுக்கு முன்னர் திருவிழாவுக்குச் சென்ற பக்தர்களுடன் ரகளையில் ஈடுபட்ட ஏழு இளைஞர்களை இராணுவத்தினர் பிடித்து எச்சரிக்கை செய்த பின்னர் விடுவித்தனர்.

இதுகுறித்துத் தெரியவருவதாவது :-

இந்த ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா தற்போது இடம்பெற்று வருகின்றது. ஆலயத்துக்குச் சென்ற பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இந்த இளைஞர்கள் வீதியில் ஒளிர்ந்து கொண்டிருந்த மின்குமிழ்களிற்கான மின்சாரத்தைத் துண்டித்துள்ளனர். இதனைத் தடுக்கச் சென்ற பொதுமகன் ஒருவரையும் அவர்கள் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்துக் கேள்வியுற்ற இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அந்த இளைஞர்களைப் பிடித்து நையப்புடைத்தனர். மறுநாள் காலை அவர்களைப் பெற்றோருடன் இராணுவமுகாமுக்கு வருகைதருமாறு கூறி விடுவித்தனர். மறுநாள் பெற்றோருடன் சென்ற அந்த இளைஞர்கள் இராணுவத்தினரால் கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். (50-6)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 04 | 18.06.2010 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி | : சப்தமி |
| | பி.இ. 02.17 வரை |
| நட்சத்திரம் | : பூரம் |
| | பி.இ. 01.07 வரை |
| சுபநேரம் | : 05.53 - 07.23 |
| ராகுகாலம் | : 10.23 - 11.53 |

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு புதிய அத்தியட்சகராக நந்தகுமாரன்

வடமராட்சி, ஜூன் 17

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் புதிதாக உருவாக்கப்பட்ட வைத்திய அத்தியட்சகர் பதவிக்கு வைத்திய கலாநிதி கனகராஜா நந்தகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையின் நிர்வாகப் பொறுப்பு அதிகாரிப் பதவியாக இதுவரை காலமும் மாவட்ட வைத்திய அதிகாரி பதவியே இருந்துவந்தது. அத்துடன் நிர்வாகப் பொறுப்பதிகாரி பதவிக்கான மாவட்ட வைத்திய அதிகாரி பதிவு பலவருடங்களாக நிரப்பப்படாமல் இருந்துவந்தது. அதற்குப் பதிலாக பதில் மாவட்ட வைத்திய அதிகாரியே கடமையாற்றிவந்தார்.

தற்போது மாவட்ட வைத்திய அதிகாரிக்கான ஆளணி பதில் வைத்திய அத்தியட்சகராக உயர்த்தப்பட்டு அப்பதவிக்கு வைத்திய கலாநிதி நந்தகுமாரன் நியமனம் பெற்றுள்ளார்.

இப்பதவியை அவர் பொறுப்பேற்பதற்கு முன்னர் யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பணியாற்றிவந்தார். (50-236)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எனது குருவாகிய பிரபல வயலின் வித்துவான்

### எஸ்.சர்வேஸ்வர சர்மா

அவர்கள் 16.06.2010 புதன்கிழமை இயற்கையெய்தியமை குறித்து நான் மிகுந்த கவலையடைகின்றேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

நாச்சிமார் கோயிலடி. (99620)

அன்னாரின் மாணவன்
வயலின் வித்துவான்
அ.ஜெயராமன்

---

EUROPA Bildungsforum

## 2010/2011 ஆண்டுக்கான மாணவர் அனுமதி

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மாணவர்கள் அனுமதியைப் பெற்று மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடவும் குடியேறவும் அரிய சந்தர்ப்பம்!!!

2010/ 2011 ஆண்டுக்கான கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பல்கலைக்கழகங்களிலும் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் அனுமதி பெற்றுக்கொள்வதற்கான அனுமதி எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மாணவர்கள் G.C.E (O/L), G.C.E (A/L) சித்தியடைந்திருத்தல் வேண்டும். மிகக் குறைந்த செலவில் மாணவர்கள் அனுமதி பெற்றுத் தரப்படும்.

மேலதிக விவரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்புகொள்ளவும்.

**தொடர்புகொள்ள வேண்டிய இடங்கள்:**

Colombo Office:
No. 27/1, Hulugoda Road,
Mount Lavinia,
Sri Lanka.
T.P.: 0113088961
Fax: 0112722125
mobile -0771770162
Email : mtsram@yahoo.de

Jaffna Office:
இல. 29, பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
T.P.: 0217200157
Fax: 021 222 7542
mobile - 0771770162

(99610)

---

## German, Swiss மொழி வகுப்புகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. (Germany இலிருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது). தொடர்புகளுக்கு:
10, Palaly Road, Jaffna. T.P.: 0771604823

## தவறிவிட்டது

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் எனும் முகவரியுடைய நா. விறோஜன் என்பவரது தே.அ.அ. (930863750V) திருநெல்வேலிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தொ.பே.: 0771910729

## STUDY & WORK IN U.K.

A Rated U.K. உயர்கல்லூரி Principals அடுத்த மாதம் வருகை தர இருக்கிறார்கள். Spot Admission பெற்றுக்கொடுக்கப்படும். பதிவுகளுக்கு முந்துங்கள். மற்றும் Student Visa வுக்கான ஆவணங்கள் யாவும் செய்து கொடுக்கப்படும்.

யாழ்ப்பாண தொடர்புகளுக்கு:
0113042949,
07775099996

## தவறிவிட்டது

மண்டைதீவு, 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவசம்பு உதயகுமாரின் தே.அ.அட்டையும் உள்நாட்டு, வெளிநாட்டு சாரதி அனுமதிப்பத்திரமும் பேர்ஸுடன் பண்ணைப் பாலத்துக்கும் மண்டைதீவு வழிப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும்.

சு.கனகரத்தினம்,
333, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சி.உதயகுமார்,
6 ஆம் வட்டாரம், மண்டைதீவு.
0777491939

## ஆள் தேவை

பலதரப்பட்ட அலுவலக, தோட்ட வேலைகளுக்கு ஆள்கள் தேவை. ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆவணங்களுடன் 19.06.2010 சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுமளிக்கவும்.

தொடர்பு: Bio Tec International Ltd.
131/2, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P.: 021 4590907

## விற்பனைக்கு

Toyota Sprinter (Diesal) Car 64 - உடனடி விற்பனைக்கு. அத்துடன் Brand New Laptop core 2 Duo Computer for sale.

தொடர்பு: 0779460966 / 0113042949

---

## காணவில்லை

### அப்புப்பிள்ளை ரவீந்திரராணி

வன்னியில் இடப்பெயர்வின் போது முள்ளிவாய்க்காலில் வைத்து காணாமற் போய்விட்டார். (வயது - 52)

### அப்புப்பிள்ளை சூரியமலர் (மனநோயாளி)



ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து காணாமற்போய்விட்டார். (வயது -49) இவர்கள் இருவரும் எனது பிள்ளைகளாவர். இவர்கள் பற்றிய விவரம் அறிந்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும்.

ந.அப்புப்பிள்ளை,
165, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே.: 021 226 3236

(இருவரும் இந்தியா பிரஜாவுரிமை உடையவர்கள்)

(ஓ-568231)

---

## 35 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆன்மா ஈடேற்ற பூசை வழிபாடும்

மலர்வு
19 - 04 - 1928



உதிர்வு
14 - 05 - 2010

### அமரர் வேலுப்பிள்ளை சுந்தரம்பிள்ளை

நீங்கள் கற்பகனடி சேர்ந்தாலும்
உங்கள் குடையின் கீழ் வாழ்ந்த
எங்கள் நெஞ்சங்களில் சுந்தரமாக
தங்கியிருப்பீர் என்றும் - ஐயாவே!

தனது 82 ஆவது அகவையில் அமரர் அவர்கள் லண்டனில் காலமான செய்தியறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (17.06.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வட்டு.வடக்கு கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் அன்னாரது ஆன்மா ஈடேற்றம் வேண்டி நடைபெறவுள்ள பூசை வழிபாட்டிலும், ஆலய அன்னதான மண்டபத்தில் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

திருமதி ம.சுந்தரம்பிள்ளை
குடும்பத்தினர்,
லண்டன். (ஓ-568229)

அ.வீரசிங்கம்,
வட்டுக்கோட்டை வடக்கு.
நி.இராசரத்தினம்,
நாயன்மார்கட்டு.

---

## அங்குரார்ப்பண வைபவம்

### *Sri Lankan Airlines Cargo Services*

ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் கார்கோ விமான சேவையின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக விளங்கும் எமது ஸ்தாபனமாகிய

### 'விஜயா என்ரர்பிரைசஸ்'

அதன் யாழ்.கிளை நிறுவனம் நாளை 18.06.2010 மு.ப. 9 மணிக்கு ஸ்ரீ லங்கன் கார்கோ விற்பனை முகாமையாளர் திரு.மகிமன் யாப்பா அவர்களால் இல.225, கஸ்தூரியார் வீதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

அன்றைய தினத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏற்றுமதியினை மேற்கொள்ள விரும்புவோர் ஏற்றுமதி பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள மு.ப. 9.30 மணிமுதல் 12.30 மணிவரை ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அதிகாரிகளுடன் கீழ்வரும் முகவரியில் கலந்துரையாடலாம்.

***Vijeya Enterprises***
No.225, Kasthuriyar Road,
Jaffna.
Tel/Fax: 021 222 4338




---

## ஆங்கிலதின போட்டிகள்

தென்மராட்சி கல்வி வலயத்தினால் நாளைமறுதினம் சனிக்கிழமை நடத்தவிருந்த ஆங்கில தினப் போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-207)

---

## மரண அறிவித்தல்

### கந்தன் பொன்னுத்துரை



நுணாவில், வேரக்கேணி முன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் பொன்னுத்துரை நேற்று(16.06.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தன் தம்பதியரின் மகனும் முத்துப்பிள்ளையின் பாசமிகு கணவரும் அற்புதமலர், தங்கமலர், சாந்தமலர், ஜெயந்திமலர், இராசமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்லப்பா (சுவிஸ்), நாகராசா, செல்வராசா, பாலகிருஷ்ணன், சிறிதர் ஆகியோரின் பாசமிகு மாமனும் கோகுலராஜ், உதயராஜ் (லண்டன்), அருள்ராஜ் (லண்டன்), ஜீவிதராஜ், விஜயரூபன், மதனரூபன், ராஜதீபன், கஜதீபன், பவித்திரன், தனுஜன், சலோமி, சாருஜன் ஆகியோரின் பேரனாரும் காலஞ்சென்ற நாகநாதன் மற்றும் சங்கரப்பிள்ளை, தங்கமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாரம்பிட்டி இந்து மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (99617)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு
16 - 04 - 1943



உதிர்வு
08 - 07 - 2008

### கதிரவேலு அப்பாத்துரை (அப்பாண்ணை)

(முன்னாள் இ.போ.ச. மின்சாரப் பகுதி, இரத்தினம் லைட், விநாயகா லொறி உரிமையாளர்)

அன்பின் சிகரமாய் ஆனந்த ரூபமாய்
என்பை யுருக்கும் இனிய பேச்சினாய்
துன்பம் போக்கித் தெம்போ டெமை யணைத்தீர்
இன்று மட்டுமிலையென்று இடிந்து போனோம்
ஆண்டிரண்டானாலும் அகலவில்லை உம் நினைவு
ஆண்டவனைத் தொழுகின்றோம் உம் சொர்க்கத்தின் நுகர்வுக்காய்

'ஈஸ்வரி பவனம்',
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய். (99609)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுளம்புப் பெருக்கம் ஏற்படக் கூடிய வகையில்

# வீட்டு வளவை அசுத்தமாக வைத்திருந்த 15பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 17

சண்டிலிப்பாய் பிரதேச வைத்திய அதிகாரி பிரிவில் நுளம்புப் பெருக்கம் ஏற்படக் கூடிய வகையில் வளவினைத் துப்புரவின்றி வைத்திருந்த 15 பேருக்கு எதிராக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் ரயர்கடை உரிமையாளர் ஒருவர் உட்பட இருவருக்குத் தண்டப்பணம் அறவிடப்பட்டது. 13 பேர் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜராகவில்லை. அதனால் அடுத்தமாதம் 21ஆம் திகதி அவர்கள் மீதான வழக்கு விசாரரணை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மானிப்பாய், சுதுமலை ஆகிய பகுதிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போது பற்றைகள் வளர்ந்து காணப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்குப் பல தடவை எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் துப்புரவு செய்யுமாறு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

காணிகளைத் துப்புரவு செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்பட்ட போதும் அதனை உதாசீனம் செய்தமையால் குறிப்பிட்ட 15 பேருக்கும் எதிராக நேற்று முன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ப.அரியநாயகம் வழக்கிற்கு ஆஜராகியிருந்த இருவருக்கும் தண்டப்பணம் விதித்ததுடன் அவர்களை எச்சரித்து விடுதலை செய்தார்.

இதில் 13 பேர் நீதிமன்றில் ஆஜராகவில்லை. அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை அடுத்த மாதம் 21ஆம் திகதி இடம்பெறும்.

(50-9)

## முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள்

கொழும்புத்துறை, ஜூன் 17

அரச சேவையில் பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 2மணிமுதல் 4 மணிவரை வண்ணை நாவலர் மாகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி விரிவுரைகளை காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியமூர்த்தி வழங்கவுள்ளார்.

எனவே அரச சேவையில் அலுவலகப் பணியாளர்களாகக் கடமையாற்றி பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தெரிவு செய்யப்படுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் இவ் வகுப்புக்களில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(50-16-121)

## ஈச்சமோட்டை விதானையார் வீதிக்கு மின்குமிழ்களை பொருத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17

ஈச்சமோட்டை விதானையார் வீதிக்கு மின் விளக்குகளைப் பொருத்தி இரவில் மக்கள் பயமின்றிப் பயணம் செய்வதற்கு வழி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அதிகமாகப் பயணம் செய்யும் இந்த வீதிக்கு மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக யாழ்.மாநகர சபை உறுப்பினர் ஒருவருக்குத் தெரியப்படுத்திய போதும் இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(50-23)




## 'காட்டுமலைக் கந்தன் பாமாலை' இறுவட்டு வெளியீடு 26ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூன் 17

பத்திரிகையாளர் திருமதி உமாராணி பிரேமச்சந்திரன் இயற்றி, பிரபல தென்னிந்திய பாடகர் ரி.எம்.எஸ். செல்லக்குமார் பாடிய 'காட்டுமலைக் கந்தன் பாமாலை' இறுவட்டு வெளியீட்டு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

அச்சுவேலி காட்டும்மலைக் கந்தசுவாமி கோயில் முன்றலில் இளைப்பாறிய ஆசிரியர் வைகுந்தநாதன் தலைமையில் இவ்விழா இடம்பெறும்.

மூத்த பத்திரிகையாளர் அமரர் வீரகேசரி செல்லத்துரையின் கனிஷ்ட புதல்வியான உமாராணி பிரேமசந்திரன் காட்டு மலைக் கந்தசுவாமி மீது எழுதிய 13 பாடல்களையும் பிரபல தமிழ்திரைப் படப் பாடகர் ரி.எம்.சௌந்தரராஜனின் மகன் ரி.எம். எஸ்.செல்லக்குமார் பாடியுள்ளார்.

(50-236)

## உப்புக்குள அணை உடைந்து வீழ்ந்தது

அண்மையில் பெய்த கடும் மழையின் போது கொழும்புத்துறை கிழக்கு உப்புக் குளத்தின் அணைக்கட்டு இடிந்து குளத்தினுள் அமிழ்ந்துள்ளது.

கொழும்புத்துறை கிழக்கு, பிள்ளையார் கோயில் தெற்கு வீதிக்கு அருகே அமைந்திருந்த இந்த நீண்ட அணைக்கட்டு இடிந்து வீழ்ந்துள்ளமையால் ஆலய தெற்கு வீதியின் நிலப்பகுதிகள் எதிர்வரும் மழை காலங்களில் கரைந்து குளத்தினுள் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

சேதமுற்ற அணைக்கட்டுப் பகுதியை சீர்செய்து தருமாறு நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(50-135)

## ஏப்ரல், மே மாதங்களுக்கான உலருணவு விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

கடந்த ஏப்ரல், மே மாதங்களுக்கான இலவச உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விநியோகத்திற்கான கட்டளைகளைச் சமர்ப்பித்து உடனடியாகப் பொருள்கள் விநியோகத்தை ஆரம்பிக்குமாறு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி யினர் அறிவித்துள்ளனர்.

அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் இந்த நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

நிவாரண விநியோக விவரம் வருமாறு:

ஏப்ரல் மாதம்

| | | ஒரு அங்கத்தவர் | 2 அங்கத்தவர் | 3 அங்கத்தவர் | 4 அங்கத்தவர் | 5 அங்கத்தவர் |
|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை | அளவு | அளவு | அளவு | அளவு | அளவு |
| அரிசி | 53.60 | 2.400 | 4.950 | 7.425 | 9.150 | 11.700 |
| மாவு | 51.90 | 2.000 | 3.000 | 4.000 | 5.000 | 6.000 |
| சீனி | 78.94 | 1.000 | 2.000 | 2.500 | 2.500 | 3.000 |
| பருப்பு | 120.50 | 0.200 | 0.300 | 0.300 | 0.500 | 0.700 |

மே மாதம்

| | | ஒரு அங்கத்தவர் | 2 அங்கத்தவர் | 3 அங்கத்தவர் | 4 அங்கத்தவர் | 5 அங்கத்தவர் |
|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை | அளவு | அளவு | அளவு | அளவு | அளவு |
| அரிசி | 57.52 | 2.200 | 4.825 | 7.750 | 8.700 | 11.000 |
| மாவு | 49.95 | 2.000 | 3.000 | 4.000 | 5.000 | 6.000 |
| சீனி | 78.94 | 1.000 | 2.000 | 2.000 | 2.500 | 3.000 |
| பருப்பு | 120.50 | 0.250 | 0.250 | 0.300 | 0.500 | 0.750 |

## கண்நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை தினமும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். மாவட்டத்தில் கண்நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகின்றது.

தற்போது வீசும் கடும் காற்று மற்றும் வெப்பம் போன்றவையே கண்நோய் தீவிரமாகப் பரவுவதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

கண்நோயினால் பாதிக்கப்படும் மக்கள் தினமும் யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (50-224)

## இலகு வேலைத்திட்ட நிவாரணத்தை அந்தந்த மாதங்களில் வழங்க வேண்டும்

## பயனாளிகள் தரப்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17

இலகு வேலைத்திட்டத்தில் ஈடுபடும் பயனாளிகள் தமக்குரிய நிவாரணப் பொருள்களை அந்தந்த மாதத்தில் விநியோகிக்க ஏற்பாடு மேற்கொள்ள வேண்டும் என நிவாரணம் பெறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


தற்போது மார்ச் மாதத்துக்கான இலகு வேலைத்திட்ட நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் பின்னர் ஏப்ரல், மே மாதங்களுக்கான பொருள்கள் விநியோகிக்கப்பட வேண்டும் .

அந்தப் பொருள்களையும் விரைவாக விநியோகிப்பதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்

உச்சி வெயிலில் கால் கடுக்க வேலை செய்யும் எமக்கு உரிய நிவாரணத்தை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பயனாளிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(50-224)



இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு நீர்விநியோகத் திட்டத்தினை துரிதப்படுத்துவது தொடர்பான கருத்துப் பரிமாற்றக் கூட்டம் கடந்த சனிக்கிழமை யூரோவில் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் அமர்த்திருப்பதை முதற்படத்திலும், இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் வடபிராந்திய தலைவர் என்.முத்துரட்ணானந்தன், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் எந்திரி கி.பாரதிதாசன், யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்டோரை இறுதிப்படத்திலும் காணலாம்.

(50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு கிடையாது



மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜிதஹேரத் மற்றும் அனுர குமார திஸநாயக்கா ஆகியோர் நேற்று உதயன் அலுவலகத்துக்கு விஜயம் செய்திருந்தனர். மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் பேச்சாளருமான அனுர குமார திஸநாயக்க உதயனுக்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வி இங்கு தரப்படுகின்றது.

கேள்வி: இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்று வழங்கப்படுவதை ஆரம்பத்தில் இருந்தே மக்கள் விடுதலை முன்னணி எதிர்த்து வருவதாக அல்லது ஒத்துழைப்பு வழங்க மறுப்பதாகத் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாகச் சந்தேகம் இருந்து வருகிறதே?

அது பற்றித் தாங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

பதில்: நாம் ஒரு போதும் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர். இந்த நாடு சிங்களவர், தமிழர், முஸ்லிகள் மட்டுமல்லாது ஏனைய இனத்தவர்களுக்கும் சொந்தமானதே. இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிட்டும் வகையிலான அரசியல் நடைமுறை அமைய வேண்டுமென்பதே மக்கள் விடுதலை முன்னணியின் குறிக்கோள் ஆகும். சகல இன மக்களும் சமத்துவமாக நடத்தப்பட வேண்டும். தாம் இந்த நாட்டில் சுதந்திரமாக - ஏனைய இனத்தவர்களுக்குக் கிட்டும் உரிமைகளை அனுபவிக்கும் விதத்தில் வாழ்கிறோம் என்ற உணர்வு தமிழ்மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். இலங்கையின் வரலாற்றில் மக்கள் விடுதலை முன்னணி தொடர்புபட்ட இரு கிளர்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. ஆயினும் அவை ஆட்சி அதிகாரத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டவையேயன்றி எந்த விதத்திலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டதல்ல என்பதனைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவது அதிகாரப் பகிர்வு யோசனையை நாம் ஏற்காததற்குக் காரணம் அதிகாரப் பகிர்வின் மூலம் ஒரு போதும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டமாட்டாது என்பதேயாகும். இதற்கு நிறையவே உதாரணங்களை முன்வைக்க முடியும். ஏற்கனவேயுள்ள மாகாண சபைமுறையை எடுத்துக் கொண்டால் முதலமைச்சர்கள், அவர்களது புதல்வர்கள் என்றவாறு இன்று நாடாளுமன்றத்துக்குச் சந்ததிகளைக் கொண்டு செல்வதற்கே அந்த அதிகாரப் பகிர்வு வகை செய்துள்ளதோடு அத்தகைய தரப்பினரை மேன்மேலும் உச்சப்படுத்திவிடவும் அவர்களது சந்ததி தொடர்ச்சியாக அரசியலில் நிலை கொள்வதற்கும், வாய்ப்பு, வசதிகள் வரப்பிரசாதங் களை ஆண்டனுபவிப்பதற்குமே பேருதவி செய்துள்ளது. முன்னாள் அமைச்சர்கள், இன்றைய அமைச்சர்கள் என அவர்களுள் முதலமைச்சர்களும் உள்ளடங்கும். அமைச்சர்களின் புதல்வர்கள் அதாவது 30 வயதுக்கு உட்பட்ட 35 இளைய சந்ததியினர் இன்றைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். இந்த வழமை தனவந்தர்களை உருவாக்கும் முதலாளித்துவத்தையே உச்சப்படுத்துவதாகும். சாதாரண பொதுமக்களுக்கு இதனால் பயன் எதுவும் கிட்டப்போவதில்லை. அவர்கள் தமிழர்களானாலும் சரி சிங்களவர், முஸ்லிம்கள் உள்ளிட்ட ஏனைய இனத்தவர்களானாலும் சரி அவர்களின் தராதரங்கள் மேன்மையடைவதில்லை. கீழ் மட்ட மக்கள்

## தமிழ் இளைஞர்களை இனியும் தடுத்துவைப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது

என்றும் அதே நிலையிலேயே வாழ்க்கையின் அவலங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இந்த அதிகாரப் பகிர்வின் மூலம் அத்தகையதொரு மேல்மட்ட சமுதாயத்தை உருவாக்கிவிட வழி அமைகிறதேயன்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் சமத்துவம் வழங்கும் நிலைமை அமைவதற்கு இங்கு இடமில்லை. எனவே தான் நாட்டின் அனைத்து மக்களும் சமமாகக் கருதப்படும் சமஉரிமை அல்லது சமத்துவம் அமைய வேண்டியுள்ளது என்ற எமது கொள்கைக்காக நாம் போராடி வருகிறோம். எமது இந்தக் கருத்து நிலைப்பாடு சரியாக உணரப்படாமையினாலேயே தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எம்மைக் குறித்த சந்தேக வித்து வளர்ந்துள்ளது. அதை இல்லாதொழிக்கத் தென்பகுதிக்கும் வடபகுதிக்கும் இடையில் நெருக்கமான பரஸ்பர உறவும் அதன் மூலமான நல்லெண்ணம் வளர்ச்சியடைய வேண்டியுள்ளது. அதற்கு நாம் பெரிதும் முயல வேண்டியுள்ளது என்பதையே நாம் வலியுறுத்தி நிற்கிறோம். இன்று அதற்கான நல்வாய்ப்பு அமைந்துள்ளது. அந்த நோக்கை இலக்கு வைத்ததாகவே வடக்குக்கான எமது இப் பயணம் அமைந்தது.

கேள்வி: சரி, அதிகாரப்பகிர்வு இல்லாது தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படுவதற்குத் தங்கள் தரப்பு முன்வைக்கும் யோசனைகள் எந்த விதமானவை என விளக்க முடியுமா?

பதில்: இதற்கான முதலாவது நடவடிக்கையாக போரின் கடைசிக் கட்டத்தில் கைது செய்யப்பட்டும் சரணடைந்துமுள்ள தமிழ் இளைஞர்களின் முழுமையான விவரங்கள் மக்கள் முன் வைக்கப்பட வேண்டியுள்ளது. எனது சகோதரனுக்கோ சகோதரிக்கோ அத்தகைய நிலை ஏற்பட்டிருப்பின் என்க்கு ஏற்ப[illegible] தாக்கமும் தமிழ் மக்களின் உணர்வுக்கும் தாக்கத்துக்கும் சமமானதே.

உணர்வுகள், தாக்கங்களுக்கு இன மத பேதம் கிடையாது. அவற்றை எம்மால் மிக நன்றாகவே உணர முடிகிறது. இவ்விதம் கைது செய்யப்பட்ட, சரணடைந்த உறவுகள் உயிருடன் இருக்கிறார் களா? இல்லையா? என்று எதுவுமே அறியாத அவர்களது உறவினர்கள் படும் மன அவஸ்தைகள் சொல்லும் தரமன்று. எனவே தான் அவர்கள் பற்றிய முழுமையான விவரங்கள் வெளியிடப்பட வேண்டியுள்ளன என்பதில் நாம் உறுதியான கருத்துக் கொண்டுள்ளோம்.

இரண்டாவதாக சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவும் விரிவான விசாரணைகள் பாரபட்சம் காட்டப்படாது மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்விதம் குற்றவாளிகளாகக் காணப்படுவோர் தண்டனைக்கு உட்படுத்தப் படுவதோடு ஏனையோர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி அவர்கள் இனியும் தடுத்து வைக்கப்படுவது எந்த விதத்திலும் நியாயமோ, நீதியோ அல்ல.

### யாழ்ப்பாணம் சிங்கள மக்களால் நிரம்பிவழிகின்றது; ஆனால் தெற்கிற்கு தமிழர்கள் வருவதில்லையே

அடுத்த விடயம் தமிழ் பேசும் மக்கள் சுமுகமாகவும் சுதந்திரமாகவும் சந்தேகமோ பயமோ இன்றி வாழ்வதற்கு வகை செய்யப்பட வேண்டும். தமிழ் மக்களின் மனங்களில் பீதியும் சந்தேகமும் நிலவுகின்றது என்பது இன்றும் கூடத் தெளிவாகப் புலப்படுகின்றது. உதாரணமாக ஏ-9 பாதை பொதுப் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டதன் பின்னர் தினமும் நூற்றுக்கணக்கில் தெற்கிலிருந்து பேரூந்துகள் சிற்றூர்திகள் உள்ளிட்ட பல தரப்பட்ட வாகனங்கள் வடபுலம் நோக்கி சாரி சாரியாக வருவதைக் காண முடிகிறது. ஆனால் வடபுலத்து மக்கள் அவ்விதம் தெற்கை நோக்கிச் செல்கிறார்களா என்றால் இல்லையென்றே கூற வேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் சிங்கள மக்களால் நிரம்பி வழிகிறது. ஆனால் தென்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களைத் தவிர இங்கிருந்து புதிதாக அவ்விதம் பெரும் எண்ணிக்கை தமிழ் மக்கள் அங்கு செல்வதில்லை. வெஸாக் விழாவின் போது மட்டும் மூன்று நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட சிங்கள மக்களை யாழ்ப்பாணத்தில் காணமுடிந்துள்ள போதிலும் தமிழ் மக்கள் அவ்விதம் கொழும்பில் திரளவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் சந்தேகத்துடனும் பீதியுடனும் தென்புலத்தை நோக்குவதேயாகும். அந்த நிலை களையப்பட வேண்டும். சமத்துவம் வ்ழங்கப்பட வேண்டும். சிங்கள மக்கள் வடபுலத்தில் காணிகளை [illegible]பாடுகின்றனர். ஆனால் குருநாகலில் அல்லது கேகாலையில் காணியொன்றை வாங்கத் தமிழ் மக்கள் பின் நிற்கிறார்கள். பெரிதும் தயங்குகிறார்கள். இந்த நிலை மாற வேண்டியுள்ளது. இலங்கை மண் இந்நாட்டின் அனைத்து மக்களுக்கும் சொந்தமானது. எங்கும் எவரும் வாழலாம் என்ற நிலையை உருவாக்கி விடுவதற்கே நாம் எம்மை அர்ப்பணித்துப் போராடி வருகின்றோம்.

இதற்கு மேலாக தமிழ் மக்களின் அடிப்படை வசதிகள் பாரபட்சமின்றிக் கட்டமைத்து வழங்கப்பட வேண்டியுள் ளது. குறிப்பாக இடம்பெயர்ந்து சென்று மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் இன்று தங்கி வாழத் தகுந்த இருப்பிடங்கள் இன்றி அவை அழிவுற்றுப் போன நிலையில் என்ன செய்வோம் ஏது செய்வோம் என அவலப்படுகிறார்கள். எமது இப்பயணத்தில் நாம் வன்னி மாவட்டத்திற்கும் குறிப்பாக கிளிநொச்சிப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்கும் சென்றிருந்தோம்.

### கிளிநொச்சியில் நாம் பார்த்த காட்சிகள் எமது மனங்களை உலுக்கிவிட்டன

கிளிநொச்சியின் கிராமங்களில் இடம் பெயர்ந்து முகாம்களில் குடியிருந்த மற்றும் உறவினர்கள் நண்பர்களிடம் தஞ்சமடைந்து வாழ்ந்து வந்த மக்களும் மீளக்குடியமர்த்தப்பட்டதாக அறிந்து அக்கிராமங்கள் பலவற்றுக்கும் சென்றோம். ஆனால், அங்கு நாம் கண்ணுற்ற காட்சிகள் எம் மனங்களை உலுக்கி விட்டிருந்தன. அவர்களின் முன்னைய வசிப்பிடங்கள் முற்றாக இடிந்து தூர்ந்து போயும் சில இடங்களில் சிற்சில சுவர்கள் மட்டுமே எஞ்சியிருந்த காட்சிகளும், அங்கு சிறு குடில்கள், சிதைந்து போன

தொகுப்பு: சரா

கூடாரத் துணிகளை மறைவிடமாக்கிக் கொண்ட வாழ்விடங்களும் மரங்களின் அடியில் மேற்கூரைகள் இன்றி வாழும் மக்களையுமே எம்மால் காண முடிந்தது.

## மீளக் குடியமர்ந்தோருக்கு வசதி என்பது; அரசாங்கத்தின் அப்பட்டமான பொய்

இவ்வளவுக்கும் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் தமது வாழ்க்கையை ஆரம்பிக்க அரசு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்துள்ளதாகப் பத்திரிகைகளில் பெரிதுபடுத்திக் கூறப்பட்டிருந்தது. அது அப்பட்டமான பொய் என்பதை எம்மால் நேரடியாக உணர்ந்துகொள்ள முடிந்தது.

நாம் கண்ட காட்சிகளே எமக்கு அதனைஉணர்த்தியிருந்தன. இவை மட்டுமல்ல அவர்களது வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்வது பெரும் பிரச்சினையாகவும் சிக்கல்கள் பல நிறைந்ததாகவும் காணப்பட்டதே எம்மைப் பெரிதும் தாக்கியது. தமக்குப் பாரபட்சம் காட்டப்படுவதான எண்ணத்தை உருவாக்கிவிடும் இந்த நிலைப்பாடு எந்த வித்திலும்

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘100 நண்பர்களின் பயணம்’ என்ற இலக்குடன் தெற்கு - வடக்கு பெண் சாரணியர் ஒன்று கூடுவர்

## ஒகஸ்ட்டில் யாழ்ப்பாணத்தில் என்கிறார் பிரதம ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 17

தெற்கில் இருந்து 100 பெண் சாரணிய வழிகாட்டுநர்களும் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் 100 பெண் சாரணிய வழிகாட்டுநர்களும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடுகின்றனர்.

ஒருவாரம் தெற்கு பெண் சாரணிய வழிகாட்டுநர்கள் இங்கு தங்கியிருந்து பெண்சாரணியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பெண் சாரணிய வழிகாட்டுநர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் காந்தி பெர்னாண்டோ மேற் கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

உதயன் அலுவலகத்துக்கு வருகை தந்து பெண் சாரணிய வழிகாட்டுநர் சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அவர் பேட்டியளித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் கூறியவை வருமாறு:-

சர்வதேச மட்டத்தில் தொண்டு நிறுவனமாகச் செயற்படும் எமது அமைப்பு நூற்றாண்டை இவ்வாண்டு கொண்டாடுகிறது.

145 நாடுகளில் 10 மில்லியன் அங்கத்தவர்களைக் கொண்டு இயங்கும் எமது அமைப்பில் இலங்கையில் 35 ஆயிரம் பேர் அங்கத்துவம் வகிக்கிறார்கள். 7 வயது முதல் 70 வயதுவரையான பெண்களை மாத்திரமே கொண்டது எமது அமைப்பு.

நூற்றாண்டு நிறைவை ஒட்டி பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளோம். பிரதான நிகழ்வு இம்மாதக் கடைசியில் கடவத்தையில் இடம்பெறவிருக்கின்றது. அதில் முக்கிய நிகழ்ச்சியாக பெண்சாரணிய வழிகாட்டுநர் அங்கம் பெறும் விளையாட்டு விழா இடம்பெறுகின்றது.

நூற்றாண்டு காலத்தில் மேலும் கூடுதலான பெண்களை இணைப்பதற்காக விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்த வகையில் ‘‘100 நண்பர்களின் பயணம்’’ என்ற தொனிப் பொருளில் யாழ்ப்பாணத்தில் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளோம். பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தெற்கில் இருந்து வரும் 100 பெண் சாரணியர்கள் யாழ்ப்பாணத்தில் ஒருவாரம் தங்கியிருந்து இங்குள்ள 100 பெண் சாரணியர்களுடன் இணைந்து செயற்படவுள்ளனர். இருபிரதேச பெண்களிடையே நட்புறவை வளர்க்க இந்த விழிப்புணர்வு உதவும்.

விசேடமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட குடத்தனையில் உள்ள பாடசாலையில் நூலகப் புனரமைப்புப் பணியில் இவர்கள் ஈடுபடுவர். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடி இந்தப் பாடசாலையைத் தெரிவு செய்துள்ளோம்.



பெண் சாரணிய வழிகாட்டுநர் யாழ்.மாவட்ட ஆணையாளர் திருமதி ந.தர்மகுலசிங்கத்துடன் தாய் சங்கப் பிரதிநிதிகள்.

ஏழு லட்சம் ரூபா செல வில் இந்தப் பாடசாலையில் நூலகத்தை ஒரு வாரத் தில் புனரமைத்து பாட சாலை நிர்வாகத்திடம் கையளிக்கவுள்ளோம்.

வடக்கும் - தெற்கும் இணைந்து இந்தப் பணியை பூர்த்தி செய்து உறவுப் பாலம் ஒன்றை உருவாக்க விருக்கிறோம்.

இதைத் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை யாழ்ப்பாணத்தில் மேற் கொள்ள முடிவு செய்துள்ளோம். எதிர்காலத்தில் அந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்படும்.

பெண்சாரணியர்கள் தலைமைத்து வத்தைப் பேண உதவும் பெண் சாரணியர் வழிகாட்டுநர் சங்கம், அவர்களை சமூகப் பணியில் ஊக்குவித்து வருகின்றது - என்றார் அவர்.

பிரதம ஆணையாளருடன் நூற்றாண்டு விழாத் தூதர் வஜிர சில்வா, பயிற்சியாளர் கஜனி திஸநாயக்க ஆகியோரும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். (1)

## தேர்த்திருவிழா நாளை

யாழ்ப்பாணம்,ஜூன்17

கோப்பாய் தெற்கு தனிப்பனை பத்திர காளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும். (204)

## பேராசிரியர் சுசீந்திரராஜாவுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம்



யாழ்ப்பாணம், ஜூன்17

பேராசிரியர் சுவாமிநாதன் சுசீந்திரராஜாவுக்குமொழியியலில் ‘சாகித்திய சக்கரவர்த்தி’ என்றகௌரவ கலாநிதிப்பட் டத்தை களனிப் பல்கலைக் கழகம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் மேற்படி பட்டம் வழங்கப்படவுள்ளது. 2000 ஆம் ஆண்டில் கௌரவ கலாநிதி பட்டத்தை யாழ்.பல்கலைக்கழகம் வழங்கிக் கௌரவித்திருந்தது. (50-201)

# குடாநாட்டில் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு; மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் இன்று வருகிறார்

## முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வார்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நேரில் ஆராய்வதற்காக மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் இன்று மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை அமைச்சர் பெர்னாண்டோ யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினரான பி.ஏ.எஸ்.சுபியான் மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய்- பெர்ணாண் டோவை அவரது அமைச்சில் சந்தித்து யாழ், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக் களின் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் யுத் தத்தினால் பாதிக்கப் பட்டு தற்போது மீள் குடியேறியுள்ள தமிழ் மக்கள் எதிர்நோக் கும் பல்வேறு பிரச் சினைகளையும் தேவைகளையும் பற்றி எடுத்துவைத் திருந்தார். அம் மக்களின் நிலையை நேரில் கண்டறிய வருமாறும் அழைப்பு விடுத்திருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஒ-1-6)

# சுன்னாகத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை சகல வசதிகளுடனும் இயங்கி வருகிறது

## மாணவர் மன்றம் தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம்,ஜூன் 17

சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியசாலை சகல வசதிகளையும் கொண்டதாகவே உள்ளது.

வைத்தியசாலை அங்கு இயங்குவதால் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ மாணவர் மன்றம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் ‘‘ சித்த ஆயுள்வேத வைத்தியசாலை மீண்டும் ஸ்ரான்லி வீதியில் இயங்கும்’’ என்ற செய்தி தொடர்பாக மருத் துவ மாணவர் மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேமேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் மாணவ மன்றத்தின் கூட்ட அறிக்கையின் முடிவின்படி, சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் இயங்கிவரும் கல்லூரிக் கும், வைத்தியசாலைக்கும் அருகிலுள்ள மின் நிலையத்தின் கழிவுகளினால் அதிகம் பாதிப்பில்லை எனவும் அப்புதிய கட்டடத்திலேயே வைத்தியசாலையும் கல்லூரியும் இயங்குவதற்கு அனுமதிப்பது என்பதையும் அறிக்கை மூலம் மாணவர்களது ஒப்பத்துடன் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள அதிகாரிக்கும் வட இலங்கை சுதேச வைத்தியசாலைக் கும் அனுப்பியிருந்தோம்.

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் மாணவர்கள் எந்தவிதமான முறைப்பாடுகளையும் எவருக்கும் செய்யவில்லையென்றும் மாணவர் மன்றம் சுட்டிக்காட்டுகிறது.

கடந்த 01.02.2010 ஆம் திகதி முதல் இன்று வரை எவ்வித குறைபாடுகளும் இன்றி லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியும் அதன் வைத்தியசாலையும் யாழ். மக்களுக்கு தனது இலவச சேவையினை வழங்கி வருகின்றது என்பதை யும் மாணவர் மன்றத்தின் சார்பில் தெரி வித்துக் கொள்கிறோம் என்று அதில் உள்ளது. (1-9)

## துண்டி ஐயனார் கோயிலில் விரைவில் பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம்,ஜூன்17

கொழும்புத்துறை துண்டி ஐயனார் கோயிலில் விரைவில் பாலஸ்தாபனம் இடம் பெற்று ஆலயப் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்த இந்த ஆலயம் அண்மையில் பொதுமக்கள் சென்று வழிபடுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இதனையடுத்து பிரதான வீதியும் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (50-224)




## வடிகால்கள் துப்புரவு

யாழ்ப்பாணம்,ஜூன்17

யாழ்.ஆரியகுளத்துக்கு முன்பாகவுள்ள வடிகால்கள் துப்புரவாக்கப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளன.இந்த வடிகால்களில் பெருகிக் காணப்பட்ட புற்கள், பற்றைகள் என்பன வெட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

இதனால் ஆரியகுளத்துக்குப் பாய்ந்து செல்லாது தடைப்பட்டிருந்த கழிவு நீர் ஒருவாறு வழிந்தோடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. (50-224)



யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் வாரம் நிகழ்வை முன்னிட்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஜேர்மன் தூதுவர் ஜென்ஸ் புளொட்னர் திருமதி மீகி புளொட்னர் உட்பட விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் ஜேர்மன் தூதுவர் மங்கள விளக்கேற்றுவதையும் முதலிரு படங்களிலும்-

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத் தலைவர் சு.இளம்பிறைநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் கல்லூரியின் விளையாட்டு அணித் தலைவர்களிடம் ஜேர்மன் தூதுவரும் அவரது பாரியாரும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதையும் அடுத்துவரும் படங்களில் காணலாம். (படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பரராஜ சேகரப் பிள்ளையார் கல்யாண மண்டபத்தில் அண்மையில் ஸ்ரீதரன் டிலுக்சனின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்நிகழ்வில் இசைத் தென்றல் சி.முத்தழகு இசைப்பதனையும் மிருதங்க அரங்கேற்ற நாயகன் ஸ்ரீதரன் டிலுக்சன் மிருதங்கம் வாசிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்:எஸ்.கதிரவேல்)*

# மாகாண மட்டத் தமிழ் மொழித்தின போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

வலி.வடக்கு,ஜூன் 17

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்டக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற தமிழ் மொழித்தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

**விசேட பிரிவு 1**

சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து

எஸ்.கே.சஜீகா தில்ஹானி (காமினி மகா வித்தியாலயம் - வவுனியா தெற்கு).

**பிரிவு 2**

சாருகா பிரியதர்சினி (காமினி மகாவித்தியாலயம் - வவுனியா தெற்கு).

**திறந்த போட்டி**

**வட மோடிக் கூத்து**

கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (யாழ்ப்பாணம்), புதுக்குளம் மகா வித்தியாலயம் (வவுனியா தெற்கு), முருங்கன் மகா வித்தியாலயம் (மன்னார்).

**தென் மோடிக் கூத்து**

கொக்குவில் இந்துக் கல்லூரி (யாழ்ப்பாணம்), புதுக்குளம் மகா வித்தியாலயம் (வவுனியா தெற்கு).

**சிந்து நடைக் கூத்து**

கல்மடு மகா வித்தியாலயம் (வவுனியா வடக்கு), மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை (யாழ்ப்பாணம்), மடுக்கரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (மன்னார்).

**விசேட கூத்து**

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி(யாழ்ப்பாணம்), கனகபுரம் மகா வித்தியாலயம் (கிளிநொச்சி), முஸ்லிம் மகா வித்தியாலயம் (வவுனியா தெற்கு).

**இசை நாடகம்**

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி (யாழ்ப்பாணம்), ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை (மன்னார்), சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் (வவுனியா வடக்கு) (201-86)

(முற்றும்)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**பொன்னுத்துரை துரைச்சாமி**

மலர்வு 15★08★1933
உதிர்வு 18★05★2010

கடந்த 18.05.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு, நேரில் வந்தும்,தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தும், அஞ்சலி செலுத்தி இறுதிச் சடங்கில் ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் நினைவாக இன்று (17.06.2010) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாதரவத்தை, புத்தூர். [99436] குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

**குணசிங்கம் ரமேஸ்சிவரூபன்**



மாகியப்புலம் ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் ரமேஸ்சிவரூபன் 02.06.2010 அன்று அகால மரணமானார்.

அன்னார் குணசிங்கம்-சிவனேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு- கதிராசிப்பிள்ளை தம்பதியரின், காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கச்சியம்மா தம்பதியரின் அன்புப் பேரனும் யமுனாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் கனகம்மா தம்பதியரின் மருமகனும் பிரான்ஸை வதிவிடமாகக் கொண்ட நிதர்சன், வானதி, ஏழிலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி (பிரான்ஸ்), குணரூபன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சுதர்சரூபன், சுரேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெஷாந், சுஜாந் ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜதுர்க்கா, கஜராகவன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஜெயச்செல்வம் (பிரான்ஸ்), கஜந்தினி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஸ்ரீனிவாசன், ஸ்ரீஜெகன் மற்றும் ஸ்ரீரஞ்சன் (கனடா), கங்கா (பிரான்ஸ்), திரிவேணுகா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜீவனா, கம்ஷா, மோகனதாஸ், நந்தகுமார் ஆகியோரின் சகலனும் கௌசிகா, அபிரனன், அபிராம் ஆகியோரின் மாமனாரும் அகிம்சா, கபிலன், விகாஷ், விஜுசன், கபிலாஸ் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் இன்று (17.06.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 3மணியளவில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
இ.தங்கரத்தினம்-மாகியப்புலம், ஏழாலை.
தந்தை: க.குணசிங்கம் (பிரான்ஸ்)
மனைவி: திருமதி யமுனா ரமேஸ் சிவரூபன்
சகோதரி: சுகந்தினி
சகோதரன்- குணரூபன்
தொ.பே.இல: 0141504532

(99534)


# வெற்றி விழாக் கொண்டாட்டங்கள் ஏன்? விளக்கமளிக்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 17

எமது நாடு பயங்கரவாதத்திலிருந்து விடுபட்டதை நினைவுபடுத்தவே இராணுவ வெற்றிக் கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன - என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டமைக்காக இராணுவ வெற்றியைக் கொண்டாடவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மழைகாரணமாக இராணுவ வெற்றிக் கொண்டாட்டங்களை இம்மாதம் நடத்துவதென முடிவு செய்தோம். கொழும்பு காலி முகத்திடலில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறுவுள்ள கொண்டாட்டங்களில் 9 ஆயிரம் இராணுவத்தினர் பங்கேற்பார்கள்.

இந்த வெற்றியை நாட்டு மக்கள் அனைவரும் கொண்டாட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)


**காணி விற்பனைக்கு**
யாழ்.ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் 3 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0779968568



**OPPORTUNITY TO DEVELOP YOUR CAREER, ENGLISH LANGUAGE & ICT THROUGH ASAP TRAININTG**



*Young Workers Capacity Development - 30 Hrs
*Training for Young Entreprenedes - 30 Hrs

பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால்:.....

★உங்கள் தொழில் திறனை வளர்த்துக்கொள்ள விசேட பயிற்சிகள்....
★ஆங்கில மொழித்திறன் விருத்திக்கான விசேட பயிற்சிகள்.....
★வசதியான நேரத்துக்கு வகுப்புகளை அமைத்துக்கொள்ள....
★வகுப்புகளில் வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர் (10-15 பேர்)..
★40-60 மாணவர்கள் மட்டும் முதல் 6மாத கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுவர்.....

பதிவுகளை 25.06.02010 இற்கு முன் மேற்கொள்ளவும்.

**ALLIANCE INSTITUTE,**
NO 55, SOMASUNDARAM AVENUE,
CHUNDIKULI, JAFFNA,
TEL: 0212228193/0215670350/0773296407

(99544)


## வீரமாகாளியின் மஞ்சம் வெள்ளியன்று வெள்ளோட்டம்

கொழும்புத்துறை, ஜூன்17

வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்திற்கு புதிய திருமஞ்சம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதியதிருமஞ்சத்தின் வெள்ளோட்ட விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல்11மணிக்கு நடைபெறவுள்ளது.

(1-135)

**மஹஜன சம்பத** (මහජන සම්පත) **Mahajana Sampatha** 15.06.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2253

வெற்றி எழுத்து: C  வெற்றி எண்கள்: 8 0 2 2 8 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | C | 8 | 0 | 2 | 2 | 8 | 3 | ரூபா.18,211,215/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 0 | 2 | 2 | 8 | 3 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 0 | 2 | 2 | 8 | 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 2 | 2 | 8 | 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 135 |
| 4 பரிசுகள் | | | | | 2 | 8 | 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1260 |
| 5 பரிசுகள் | | | | | | 8 | 3 | ரூபா. 100/= | பரிசுகள் 12717 |
| 6 பரிசுகள் | | | | | | | 3 | ரூபா. 20/= | பரிசுகள் 126039 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 0 | 2 | 2 | 8 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 10 |
| 8 பரிசுகள் | | 8 | 0 | 2 | 2 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 120 |
| 9 பரிசுகள் | | 8 | 0 | 2 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1293 |
| 10 பரிசுகள் | | 8 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12626 |
| 11 பரிசுகள் | C | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 50431 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 13,591,700.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 18,345,925.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000. Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளை உணர்வது எப்படி?

ஒளி பொருந்திய குருநாதரை அணுகினான் ஒருவன். " கடவுளைப் பற்றி எனக்கு பேசிப் புரியவையுங்கள். நான் புரிந்து கொள்ளும்படி சொல்லுங்கள்" என்றான். குரு மவுனமாக இருந்தார். பிறகு முடியாது என்பது போல தலை அசைத்தார். " ஏன் முடியாது" என்றான். " பேச்சின் மூலம் புரிய வைக்கும் விடயமல்ல அது. மவுனத்தின் மூலம் உணர வேண்டிய அனுபவம் அது" என்றார். " கேள்வியின் மூலமே கடவுளைப் புரிய வைக்க முடியாதா?" என்றான் அவன்.



" கண்ணில்லாத பிறவிக் குருடருக்கு நிழல் என்பதைப் புரியவைக்க முடியுமா? ஒளி என்பதையே அவர் உணராதபோது நிழலையும் அவரால் உணரவே முடியாது. அதுபோல் மவுனத்தை நீங்கள் உணராமல் கடவுளையும் உணரமுடியாது" என்றார். புத்தர் கடவுளைப் பற்றி பேசாமைக்கு இதுவே காரணம்.

ஒரு பௌத்தத் துறவி, ஆற்றின் இசையை அனுபவித்துக் கொண்டு காற்றின் நாதத்தையும் கேட்டுக் கொண்டு நதிக்கரையில் உட்கார்ந்திருந்தார். ஒருவர் அவரிடம் வந்து, " ஒரே வார்த்தையில் உங்களுடைய மதத்தின் சாராம்சத்தைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

ஞானி மௌனமாக இருந்தார். அந்தக் கேள்வியே அவர் காதில் விழவில்லையோ என்று நினைக்கவைக்கும் அளவுக்கு ஓர் ஆழ்ந்த மௌனம். வந்தவர், " நீங்களென்ன செவிடரா?" என்று இரைந்தார்.

ஞானி, " உன் கேள்விகளைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். பதிலைத்தான் சொல்லிட்டேனே. மௌனமாகக் கழிந்த அந்தக் கணங்களே உன் கேள்விக்கான பதில்" என்றார்.

வந்தவரோ, "புதிரான பதில்களையெல்லாம் என்னால் புரிந்து கொள்ள முடியாது. இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்லலாமே" என்றார்.

ஞானி மணலில், 'தியானம்" என்று எழுதிக் காண்பித்தார்.

" ஓ...! படிக்க முடிகிறது. முன்பைவிடப் பரவாயில்லை. ஒன்றுமில்லாததற்கு ஒரு வார்த்தையாவது இருக்கிறதே. அதை வைத்துக்கொண்டு சிந்திக்கலாம்தான். ஆனால் இன்னமும் கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்லுங்களேன்" என்றார் வந்தவர்.

மீண்டும் தியானம் என்ற வார்த்தையையே பெரிய எழுத்துக்களில் எழுதிக் காண்பித்தார். கேட்டவருக்குக் கொஞ்சம் தர்மசங்கடமாகிவிட்டது. கோபம் கூட வந்தது. "மறுபடியும் தியானம் என்றுதானே எழுதியிருக்கின்றீர்கள்? எனக்காக இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லக்கூடாதா?" என்றார்.அவரோ மறுபடியும் இன்னும் பெரிய எழுத்துக்களில் நன்றாக இடம்விட்டு தியானம் என்று எழுதிக் காண்பித்தார்.

வந்தவர், " உங்களுக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்க வேண்டும்" என்றார். ஞானியோ," ஏற்கனவே வெகுதூரம் இறங்கி வந்துவிட்டேன். முதல் பதில் சரியான பதில். இரண்டாவது பதில் அவ்வளவாகச் சரியான பதில் அல்ல. மூன்றாவது பதில் தவறான பதில். நான்காவது பதில் மிகவும் தவறாகிப் போன பதில். ஏனென்கிறாயா? தியானம் என்று பெரிய எழுத்துக்களில் எழுதும் போது அதனையே கடவுளாக்கி விடுகிறாய்" என்றார்.

அதனால்தான் கடவுள் என்ற வார்த்தையை ஆங்கிலத்தில் எழுதும் போது முன்னெழுத்தைப் பெரிய எழுத்தாக்குகிறீர்கள். உயர்வைக் குறிக்கப் பெரிய எழுத்துக்கள்.ஞானி, " நான் ஏற்னவே பாவமிழைத்துவிட்டேன்" என்றார். தான் எழுதிய வார்த்தைகளை அழித்துவிட்டு, " என் முதல் பதிலை மட்டுமே வைத்துக் கொள்" என்றார்.

சு.கிசிஸாம்.

# சிலரைக் காப்பாற்றவே முடிவதில்லை

ஒருவன் தன்னை எப்போதுமே புழுவாக நினைத்துக் கொண்டிருந்தான். கோழி களைப் பார்த்தாலே பயந்து ஓடுவான். கேட்டால் "கொத்தித் தின்று விடும் என்பான்" உளவியல் மருத்துவரிடம் காட்டி மருத்துவம் செய்தனர். தான் புழு இல்லை. மனிதன் என்று அவரிடம் ஒப்புக்கொண்டான். மீண்டும் கோழிகளைப் பார்த்து பயந்து ஓடினான். ஏன் எனக் கேட்டதற்கு "நான் புழு இல்லை என்று எனக்குத் தெரிந்து விட்டது. ஆனால் கோழிகளுக்குத் தெரியாதே" என்றான். தெளிவு முழுமையாக இல்லை என்றால் பிரச்சினைதான்.



# பரதத்திற்கு ஒரு விளக்கம்



ஒருமுறை பரதநாட்டிய அரங்கேற்ற விழாவில் கலந்து கொண்ட டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பரதநாட்டியத்திற்குப் புதுமையான விளக்கத்தை அளித்தார்.

" பரதம்" என்ற சொல்லில் 'ர' என்கிற எழுத்தில் கீழேயுள்ள நீட்டலை நீக்கினால் "பாதம்" ஆகிறது.

பாதம்தானே நடனத்திற்கு உயிர்.

'ப' வை எடுத்துவிட்டால் 'ரதம்' ஆகிறது. இங்கு நடனமாடும் பெண்கள் தங்களை ரதம் போன்று அலங்காரம் செய்து கொண்டால்தானே நடனம் சிறக்கிறது.

முன்னால் உள்ள இரண்டு எழுத்துக்களையும் நீக்கிவிட்டால் 'தம்' என்று ஆகிறது.

'தம்' இல்லாமல் போனால் எப்படி நடனம் ஆட முடியும்?

கலைஞரின் இந்த விளக்கத்திற்கு அங்கிருந்த மக்கள் அனைவரும் ரசித்துக்

# கஷ்டங்களே சுகம்



எதிர்பாராத திருப்பங்கள்தானே ஒரு வாழ்க்கையைச் சுவையாக அமைத்துத் தரமுடியும்.

கடவுளிடம் ஒரு விவசாயி கடுமையாகச் சண்டைக்குப் போனான்.

" உனக்குப் பயிர்களைப் பற்றி என்ன தெரியும்? நீ நினைத்த போது மழையை அனுப்புகிறாய். தப்பான சமயத்தில் காற்றை வீசுகிறாய். உன்னால் பெரிய தொந்தரவாக இருக்கிறது.பேசாமல், அந்த வேலைகளை விவசாயி ஒருவனிடம் ஒப்படைத்துவிடேன்!"என்றார்.

கடவுள் உடனே," அப்படியா? சரி, இனிமேல் வெளிச்சம், மழை, காற்று, எல்லாம் உன் கட்டுப்பாட்டிலேயே இருக்கட்டும்" என்று வரம் அருளிவிட்டுப் போய்விட்டார்.

"மழையே, பெய்" என்றான். பெய்தது. நிறுத்தச் சொன்னபோது நின்றது. ஈரமான நிலத்தை உழுதான். தேவையான வேகத்தில் காற்றை வீசச் செய்து, விதை தூவினான். மழை, வெயில், காற்று எல்லாம் அவன் சொன்ன பேச்சைக் கேட்டன. பயிர் பச்சைப் பசேலென்று வளர்ந்தது. வயல்வெளியைப் பார்க்கவே ரம்மியமாக இருந்தது.

அறுவடைக் காலம் வந்தது. விவசாயி ஒரு கதிரை அறுத்தான். திறந்து பார்த்தான். அதிர்ந்தான். உள்ளே தானியத்தைக் காணவில்லை. அடுத்தது, அதற்கடுத்தது என்று ஒவ்வொரு கதிராக வெட்டி எடுத்துத் திறந்து பார்த்தால், ஒன்றிலுமே தானியம் இல்லை.

" ஏ கடவுளே!" என்று கோபத்தோடு கூப்பிட்டான். " மழை, வெயில், காற்று எல்லாவற்றையுமே மிகச் சரியான விகிதத்தில்தானே பயன்படுத்தினேன்! ஆனாலும், பயிர் பாழாகிவிட்டதே, ஏன்?"

கடவுள் புன்னகைத்தார் " என் கட்டுப்பாட்டில் இருந்தபோது காற்று வேகமாக வீசும். அப்போது கதிர்களெல்லாம், அம்மாவை இறுக்கிக் கொள்ளும் குழந்தைகளைப் போல பூமிக்குள் தங்கள் வேர்களை மிக ஆழமாக அனுப்பிப் பிடித்துக்கொள்ளும். மழை குறைந்தால் தண்ணீரைத் தேடி வேர்களை நாலாபக்கமும் அனுப்பும். போராட்டம் இருந்தால்தான் தாவரங்கள் தங்களைப் பாதுகாத்துக்கொண்டு, வலுவாக வளரும். எல்லாம் வசதியாக அமைத்துக் கொடுத்ததில் உன் பயிர்களுக்குச் சோம்பேறித்தனம் வந்துவிட்டது. தளதள வென்று வளர்ந்ததே தவிர, ஆரோக்கியமான தானியங்களைக் கொடுக்க அவற்றுக்குத் தெரியவில்லை."

"வேண்டாமடா, உன் மழையும், காற்றும்! நீயே வைத்துக் கொள்" என்று கடவுளிடமே அவற்றைத் திருப்பித் தந்துவிட்டான் விவசாயி.

ஆம்.. வாழ்க்கை எல்லாவிதத்திலும் சௌகரியமாகவே அமைந்துவிட்டால், அதைப் போன்றதொரு வெறுமை வேறெதுவும் இல்லை.

(சொன்னவர் : சத்குரு. ஜக்கி வாசுதேவ்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் அச்சமின்றி வாழ அரசு விரும்பினால் சட்டவிரோத ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

## நாடாளுமன்றத்தில் ஸ்ரீ ரங்கா எம்.பி. கோரிக்கை

கொழும்பு,ஜூன் 17

தமிழ் மக்கள் அச்சமின்றி வாழ வேண்டும் என அரசு விரும்பினால், சட்ட விரோதமாக ஆயுதங்கள் வைத்திருக்கும் அரசியல் கட்சிகளிடம் இருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும்.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருண நாயக்க கொண்டுவந்த சட்டவிரோத ஆயுதபாவனை தொடர்பான பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் ஒரு சட்டம் இருக்கிறது என்று சொன்னால், அந்த சட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கு இந்தச் சபையிலே உரிய உரிமை வழங்கப்படவேண்டும். ஆயுதம் எடுத்தவர்கள் எல்லாம் ஆயுதங்களை வைத்துக்கொண்டு கப்பம் வாங்குவதை நிறுத்தவேண்டும். இன்று எல்லா நீதிமன்றங்களிலும் கப்பம் சம்பந்தமான வழக்குகள் நிரம்பிவழிகின்றன.

ஆனால் இவற்றைப் பற்றிப் பேசினால் அல்லது இவற்றைப் பற்றி தீர்ப்புக் கொடுத்தால் அவர்கள் மிரட்டப்படுகின்றனர். இன்று நீதிபதி ஒருவர் மிரட்டப்படும் அளவுக்கு இந்த விடயம் முன்னேறியிருக்கிறது.

வடக்கு, கிழக்கிலே இன்று சுமுகம் ஏற்பட்டிருக்கின்றது, யுத்தம் முடிவடைந்திருக்கின்றது என்று அரசு கூறுகிறது. உண்மையில் யுத்தம் முடிந்து மக்கள் சமாதானமாக வாழவேண்டுமென்று அரசு நினைத்தால் ரவி கருணாநாயக்க கொண்டு வந்த பிரேரணை போன்று அதாவது ஆயுததாரிகள் அனுமதி பெற்றே ஆயுதங்களை வைத்திருக்கவேண்டும் என்ற பிரேரணை தேவைப்பட்டிராது.

தடிதூக்கினவர்கள் எல்லாம் தண்டக்காரர்கள் என்ற மாதிரி நினைத்தவர்கள் எல்லாம் ஆயுதங்களைத் தங்கள் கைகளில் வைத்துக் கொண்டு அங்கு வியாபாரம் செய்ய முடியாது. அரசியல் செய்யமுடியாது. இப்படியே சென்றால் எங்கே ஜனநாயகம்? இதை மாற்ற வேண்டும். ஆனால் ஏற்கனவே எனக்கு அருகில் இருக்கின்ற விஜயகலா தனது உரையிலே இப்படியாக ஆயுதங்களைத் தரித்த குழுக்கள் அங்கே கப்பங்களை வாங்கிவிட்டு அரசின் மீதே பழி போடுகின்றது என்று இந்தச் சபையில் கூறியிருந்தார்.

இது உண்மையில் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இன்று யுத்தம் முடிந்திருக்கிறது. இந்த யுத்தம் முடிவடைந்த கால கட்டத்திலே இனி என்றாலும் மக்களை நிம்மதியாக வாழவிடுங்கள். உங்களுடைய சுயநலன்களுக்காக ஆயுதங்களைத் தரித்து இந்த மக்களிடம் கப்பம் வாங்குவதை நிறுத்துங்கள். இன்று இவ்வளவு நாளும் இலங்கை சட்டத்தில் நீங்கள் இங்கு அமைச்சராக இருக்கின்றபடியால் உங்களுடைய ஆளுமையைச் செலுத்தி வந்தீர்கள். ஆனால் இன்று நாடு கடந்து, கடல் கடந்து உங்களைத் தேடப்படுகின்ற நிலைமைக்கு நீங்கள் மாற்றப்பட்டிருக்கின்றீர்கள். இனிமேலாவது திருந்துங்கள்.

தற்போது வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஆயுதங்கள் உள்ளன. அவற்றிற்கு அனுமதிப் பத்திரங்கள் இல்லை. இலங்கையின் சட்டத்தின்படி பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் படையினருக்கு மாத்திரம் ஆயுதங்களை வைத்திருக்க அனுமதி உண்டு. அல்லது அரசின் அனுமதியுடையவர்களுக்குத்தான் ஆயுதங்களைக் கொண்டு செல்ல முடியும். எனினும் 30 வருடங்களுக்கு முன்னர் பயிற்சி பெற்றுள்ளதாகத் தெரிவித்து ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர். அவர்களுக்கு அனுமதி வழங்கியது யார்? இதனை உடனடியாக நிறுத்தவேண்டும்.

தற்போது சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒரு வழங்கு உள்ளது. அதேபோன்று நீதிபதி அலெக்ராஜாவிடம் ஒரு வழக்குள்ளது. அதனூடாக எந்தெந்த கட்சிகளிடம் ஆயுதங்கள் இருக்கின்றன. அதேபோன்று எவ்வாறு கப்பம் பெறுகின்றனர் என்பது தெரிய வருகிறது.

அதாவது இலங்கையில் ஒரு சட்டம் இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளியுங்கள். அமைச்சர்கள் பல பிரதேசங்களுக்குச் செல்கின்றனர். தற்போது சமாதானம் கிடைத்திருக்கிறது என்று மக்களிடம் கூறுகின்றனர். வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக அயராது பாடுபடும் பஸில்ராஜபக்ஷ அப்பகுதியிலுள்ள மக்கள் மகிழ்சியுடன் இருக்கினறனர் என்று கூறுகின்றார். இவ்வாறான நிலையொன்று உள்ளபோது மக்கள் எவ்வாறு மகிழ்ச்சியுடன் இருப்பது? வடக்கு, கிழக்கில் மட்டும்தான் இந்தச் சட்டம் காணப்படவில்லை. இதற்குக் கட்டாயம் அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் காணப்படும் சட்டமே வடக்கு, கிழக்கிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அரசாங்கம் எண்ணினால் கட்டாயம் அந்தப் பகுதியிலிருக்கும் நீதிபதிகளுக்குக் கப்பம் தொடர்பாக தீர்ப்பு வழங்குவதற்கு அனுமதியளிக்க வேண்டும். தற்போது வவுனியா, யாழ்ப்பாணம், வடமராட்சி ஆகிய பகுதிகளிலுள்ள நீதிபதிகள் பாதுகாப்புக் கோரியுள்ளனர். ஏனெனில் கப்பம் பெறுவதற்கான தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் தொலைபேசி மூலமாக அவர்களை அச்சுறுத்துகின்றன.

இது ஒரு நல்ல பிரேரணை என்பதால் இதை நான் இங்கு ஆமோதிக்க விரும்பினேன் என்றால் அது எங்களுடைய பிரச்சினை. உண்மையில் ரவி கருணாநாயக்க அதை பற்றிப் பேசுகின்றார். உண்மையில் அது எமது பிரச்சினை. அரசின் அனுமதியுடன் ஆயுதங்களை வைத்திருங்கள். அரசிடம் முப்படைகள் இருக்கின்றன. அரசிடம் பொலிஸார் இருக்கின்றனர். வடக்கு,கிழக்கிலே அவர்கள் அல்ல சட்டங்களை நிர்வகிப்பது. நீதிமன்றங்களையும் எல்லாச் சட்டங்களையும் நிறுவுவது யார்? கப்பம் கேட்கின்ற அரசியல் கட்சிகள். இன்று மக்கள் அங்கு எல்லோரையும் வந்து வெளிநாட்டுக்காரர்களையும் வந்து விசாரணைபண்ணுங்கள் என்று கூறுகிறார்கள். விசாரணை பண்ண முடியாது. கப்பம் செலுத்த வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பஸ் ஓடுவதென்றால் யார்? யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு மீன்வியாபாரம் செய்வதென்றால் யார்? லைசென்ஸ் இல்லாமல் ஆயுதம் வைத்திருக்கிறதுதான் இவற்றுக்குக் காரணம். யாழ்ப்பாணத்தில் டயலொக்குக்கு ஏஜென்ட் யார்? எல்லாம் அரசியல் கட்சிகள்.

இந்த ஆயுத கலாசாரம் உண்மையில் மாற்றமடைய வேண்டும். இன்று தங்கள் பெயரிலே தமிழீழம் என்று பெயர்களை வைத்துக்கொண்டு தமிழ் மக்களுக்காகப் போராடிய குழுக்களாகக் கூடியவர்கள் இந்த ஆயுதங்களை தமிழ் மக்களுக்கு எதிராக திருப்புகிறார்கள்.

எனவே நிச்சயமாக ஆயுதங்கள் களையப்படவேண்டும். இந்த ஆயுதங்கள் களையப்படும் வரை தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது. தமிழ் மக்கள் நிம்மதியாக இந்த நாட்டிலே வாழவேண்டுமென்று சொன்னால் தமிழ் மக்களுக்காக போராடியவர்கள் என்று கூறிக்கொண்டிருக்கின்ற பொய் கூறுகின்ற இந்த ஆயுத குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களைப்பட வேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பிரதேசத்திலிருந்து ஒருவரும் முன்னேற முடியாது. இன்று அந்த பிரதேசங்களைவிட்டு நீதிபதிகளே விலகும் அளவுக்கு அவர்களுக்குப் பயமுறுத்தல் நடைபெற்றிருக்கின்றது.

எனவே இந்தச் சபையில் ரவி கருணாநாயக்க கொண்டுவந்த 'பிரேரணைக்கு உண்மையில் இந்தச் சபை கவனம் செலுத்த வேண்டும். ஆயுதங்களை அனுமதி இல்லாமல் வைத்திருப்பவர்களிடம் இருந்து பறிக்கப்பட வேண்டும். இந்த நாட்டில் முப்படைகள் இருக்கின்றன. இந்த நாட்டிலே பொலிஸார் இருக்கின்றனர். சிவில் நிர்வாகம் இருக்கின்றது. எனவே அதன்படி இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்குநிலை நாட்டப்பட வேண்டுமென்பதற்கு அப்பால் வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற நீதிபதிகளுக்கு தங்கள் தொழில்களைச் செய்வதற்கு தயவுசெய்து இடங்கொடுங்கள் அவர்களை மிரட்டாதீர்கள்-என்றார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் புதிய அதிபராகப் பொறுப்பேற்றிருக்கும்

**திரு.சு.தியாகலிங்கம்**

(B.A.SP.Trd, Dip in Edu, MEd, SLPS)

அவர்கள் மென்மேலும் பணிசிறக்கப் பணியாற்றிப் பார்புகழ வாழ நெடுந்தீவு கரமத்தைக் கந்தனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கில்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.சு.நடராசலிங்கம்
குடும்பத்தினர் மற்றும் சகோதர, சகோதரிகள்.

## வேலையாள்கள் தேவை

யாழ்.குடாநாட்டின் நகர அலங்கரிப்பு செயற்றிட்ட நிறுவனத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

★ வெல்டிங் ★ மேசன் ★ பெயின்ரர்
★ மரவேலை ★ உதவியாளர் ★ சமையல்வேலை
★ மேற்பார்வையாளர் ★ தோட்ட வேலையாள்
★ சாரதி

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விரும்பியவர்கள் வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் (18.06.2010, 19.06.2010) நேரில் உரிய ஆவணங்களுடன் வரவும்.

WORLD WIDE CREATION DEVELOPMENT CENTER.
176, கண்டிவீதி,
சுண்டுக்குழி.
தொ.பே: 0215670042

## திருமண சேவை

B.A, B.Sc., M.Sc. பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், கணனி பட்டதாரிகள், வங்கியாளர்கள், விரிவுரையாளர்கள், வர்த்தகர்கள் எனப் பலதுறை சார்ந்த இருபாலாரின் ஜாதகங்களும் எம்மிடம் உள்ளன. உள்நாட்டு, வெளிநாட்டு திருமணத்தை எதிர்பார்த்திருப்போர் மணமக்களைத் தெரிவுசெய்ய ஜாதகம், புகைப்படத்துடன் நேரில் தொடர்புகொள்ளலாம். த.சிவானந்தன் (பிரபல சோதிடர்)
"சிவாசோதிட நிலையம்", 100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
[யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக]

## மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்
## Mc Leod Hospital, Inuvil

### முக்கிய அறிவித்தல்

யாழ். போதனா வைத்தியசாலையில் நிபுணத்துவ வைத்தியசேவை புரிந்து கொண்டிருக்கும் மகப்பேற்று வைத்திய நிபுணர் (V.O.G) Dr.S.ஜெயக்குமார் M.B.B.S, M.S (Obstetrics and Gynaecology) அவர்கள் இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கு மகப்பேற்று வைத்திய நிபுணத்துவ சேவை வழங்குவதற்காகப் பிரதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வருகை தந்து கொண்டிருக்கிறார் என்பதை அறியத்தருகிறேன்.

அநேக ஆண்டுகளாக வைத்திய சேவைகள் வழங்கிக் கொண்டிருக்கும் பழைமை வாய்ந்த இணுவில் மக்லியோட் வைத்தியசாலை 1898 ஆம் ஆண்டு அமெரிக்க மிஷனரி வைத்திய நிபுணர்களால் ஸ்தாபிக்கப்பட்டதென்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

தொ.பே. இல.
021 222 7669
0776171451, 0772132517.

வைத்திய மேலதிகாரி
Medical Superintendent


## புலன்களைக் கட்டுப்படுத்தி மனதை சரியான பாதையில் செலுத்துதல் அவசியம்

ஒவ்வொரு ஆத்மீக சாதகரும் தன்னை அறிய முயலவேண்டும். ஆத்மீக பயிற்சிகள் அனைத்திற்கும் ஒதுக்கும் நேரத்தில் நான்கில் மூன்று பங்கு நேரத்தை தன்னை அறிய ஒதுக்கவேண்டும். அப்போதுதான் உங்களுக்கு முழுப்பலன் கிட்டும். காலத்தை முறையாகப் பயன்படுத்தி உங்கள் உடலைப் புனிதப்படுத்தி உங்கள் செயல்கள் அனைத்தையும் தூய்மையாக்கினால்தான் நீங்கள் குறிக்கோளை அடைய முடியும். துன்பங்கள் அனைத்திற்கு முரிய மிகமிக முக்கியமான காரணம் புலன்களின் பலவீனமே. புலன்களை உறுதியுடன் கட்டுப்படுத்துங்கள். மனதைச் சரியான பாதையில் செலுத்துங்கள். நீங்கள் எடுக்கும் தீர்மானம் வலிமையுடையதாக இருக்கட்டும்.

உன் இதயம் துடிக்கிறது. அவ்வேளையில் உன்னுடைய பங்கு என்ன? ஒன்றுமில்லை. அதுவே இறைவனின் திருவுள்ளம். நான் நினைக்கின்றேன் நான் செய்கின்றேன் என்ற அகந்தைக்கு இடமேது? இதயத் துடிப்பில் நீ செய்வது ஏதுமில்லை. நாடித்துடிப்பில் நீ செய்வது ஏதுமில்லை. நீ ஒன்றும் செய்வதில்லை. இறைவனே இதயத்தை அமுக்கி விரிவடையச் செய்கிறார். இரத்தத்தை எல்லா இடங்களுக்கும் அனுப்புகிறார். நுரையீரலை இயக்கி இரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறார். உடலிலுள்ள இறக்குமதி ஏற்றுமதி இரண்டையும் நடத்துகிறார். தெய்வத்துவம் உள்ளே இல்லாது உன்னால் எதுவுமே செய்ய இயலாது. ஆகவே இந்தத் தெய்வத்துவத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். நீ நம்பினாலும், நம்பாவிட்டாலும் இறைவன் தனது செயலை நிகழ்த்திக்கொண்டே இருக்கிறார். ஆனால் நீ நம்பிக்கையுடன் இவற்றைப் புரிந்துகொண்டால் உனக்கு ஆனந்தம் அதிகரிக்கும். உனது பிரார்த்தனைகள் அனைத்தையும் முழு உணர்வுடன் செய். (நடப்பவற்றை இறைவன் நடத்துபவற்றை) நாம் அனுபவிக்க வேண்டும்.



### சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை



வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை அமைத்துள்ளது. யாழ்ப்பாணம் - அச்சுவேலி பிரதான வீதியின் மேற்குப் புறத்தில் வீதியோரத்தில் பொருத்தமான அமைவிடத்தில் வைத்தியசாலை அமைந்திருப்பது நோயாளருக்கு மட்டுமல்ல சகல தரப்பினருக்கும் வசதியாகவே உள்ளது. இந்த அமைவிடம் வலி.கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி மக்களும் இயல்பு நிலையில் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்து தமது வைத்தியத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வாய்பாகவுள்ளது.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையாக இன்று உயர்ந்து நிற்கும் இதன் ஸ்தாபிதம் ஒரு தனிமனிதனின் மக்கள் சேவையின் தீர்க்க தரிசன சிந்தனையின் வெளிப்பாடாகும். அச்சுவேலி மேற்கு அச்சுநகர் வாசியும் அகில இலங்கை ரீதியில் தனது உழைப்பாலும் சேவையாலும் உயர்ந்த சேர். சிற்றம்பலம் காடினர் அவர்களினால் இந்த வைத்தியசாலை 1946 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வைத்தியசாலைக்கென அவரால் கொள் வனவு செய்யப்பட்ட 3 ஏக்கர் நிலத்தில் 06.01.1946 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு 30.06.1946 ஆம் திகதி வைத்தியசாலை திறப்பு விழா நடைபெற்றது.

வைத்தியசாலையின் ஆரம்ப கால கட்டடமானது தற்பொழுதும் முழுமையான பாவனையில் (ஆண்கள் விடுதியாக) உள்ளது. வைத்தியசாலையின் ஆரம்பக் கட்டடத் தொகுதியில் ஆண்களுக்கான விடுதி, பெண்களுக்கான விடுதி, வைத்தியருக்கான அலுவலகம், நிர்வாக அறை, மருந்தகம், சமையல் கூடம் ஆகிய கட்டுமான வசதிகளுடன் 40 பேர் வரையில் தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய நிலையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 1946 ஆம் ஆண்டில் இருந்து 1983 வரையும் ஸ்தாபகரினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தொகுதியிலேயே வைத்தியசாலை செயற்பட்டது. இன்றும் அவை முழுமையான பயன்பாட்டில் உள்ளன.

கிராமிய வைத்திய சாலையாக, சுற்றயல் கூறாக இருந்து தற்பொழுது பிரதேச வைத்திய சாலையாக மாடிக்கட்டடத் தொகுதியுடன் உயர்ந்து நிற்கும் இதன் வளர்ச்சி மக்களுக்கான வைத்திய சேவை வழங்குவதிலும் உயர்ந்து நிற்கின்றது.

தற்பொழுது காணப்படும் கட்டுமானங்களில் மலேரியாத்தடை சேவை அலகு, தாய் சேய்- சிறுவர் பிரிவு மற்றும் பிரசவவிடுதி, பல்வைத்தியப் பிரிவு, பெண்களுக்கான விடுதி, புதிய நிர்வாக அலகு என்பன காலத்துக்காலம் நிர்மாணிக்கப்பட்டு வந்தனவாகும். அத்துடன் பொதுமக்களின் நிதி உதவியுடன் 10 பரப்பு நிலம் 10 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.




வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர்கள் என்ற வகையில் டாக்டர் எஸ். செல்லையா, டாக்டர் எஸ்.சிவபாலன், டாக்டர் ஸ்ரீபிரியதர்சன், டாக்டர் திருமதி தனேந் திரன் , டாக்டர் எஸ்.இராசலிங்கம், டாக்டர் திருமதி கு.பத்மராணி, டாக்டர் எஸ்.தர்மலிங்கம், டாக்டர் எஸ்.விமலேந்திரன், டாக்டர் திருமதி எஸ்.ஆனந்தி உள்ளிட்ட பலர் காலத்துக்கு காலம் தமது சேவையை வைத்தியசாலையின் வளர்ச்சி கருதியும் மக்களுக்கான சேவை கருதியும் மேற்கொண்டு வந்துள்ள போதிலும் தற்பொழுது வைத்திய சாலைப் பொறுப்பதிகாரியாக டாக்டர் சி.விமலேந்திரன் , டாக்டர் திருமதி எஸ். ஆனந்தி, பல்வைத்திய அதிகாரியாக டாக்டர் திருமதி கு.பத்மராணி ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர்.

(தொடரும்).



# யாழ்.மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

350 இற்கும் மேற்பட்ட நெசவாளரைக் கொண்டு 24 மணி நேரமும் புடைவை நெசவை மேற்கொண்ட நிறுவனம் கடந்த சில வருடங்களாக 12 நெசவாளர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கி வருகின்றது. 12 தறிகள் மட்டும் தான் செயற்படுகின்றன. ஏனைய நெசவு இயந்திரங்கள் "எங்களை யார் இயக்குவார்கள்'' என ஏங்கிய நிலையில் காத்துக்கிடக்கின்றன. இந்தவகையில் 60 இற்கு மேற்பட்ட இயந்திரங்கள் இருப்பதை அவதானிக்க முடிகிறது. நூல்களைப் பதப்படுத்தி சாயமிடும் கூடத்தில் மிகப் பெரிய நாற் சதுரப்பெட்டி ஒன்று திறக்கப்படாத நிலையில் உள்ளது. அதில் உள்ளடங்கியிருப்பது என்ன? ஒப்புநோக்கப்படாத நிலையில் உள்ளது.




சங்கத்தின் நிர்வாகப் பொறுப்புக்கள் 2002 ஆம் ஆண்டு கூட்டுறவு உதவி ஆணையாளரினால் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அவர்களிடம் தற்போதைய செயற்பாட்டுடன் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட பணிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. (தலைவர் ப.இராசரத்தினம் உறுப்பினர்கள் த. கந்தசாமி, செ. கந்தையா).

தற்பொழுது 12 நெசவாளர்களும் பதில் முகாமையாளர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் பணியாளர்கள் என்ற வகையில் 8 பேருமாக 20 பேர் கடமை புரிகின்றனர்.

யாழ். மாவட்ட நெசவாளர் சங்கம் 1942 ஆம் ஆண்டு யாழ். மணிக்கூட்டு வீதியில் நெசவாளர் நூல் விற்பனை நிலையமாகவும் பின்னர் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார நெசவு சங்கமாகவும் செயற்பட்டு 1973ஆம் ஆண்டில் இருந்து யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டு வந்தது. இது தற்பொழுது தனது சகல செயற்பாடுகளையும் முழுமையாகச் செயற்படுவதற்குரிய எதிர்காலம் இல்லாமல் முடக்கப்பட்ட நிலையில் உள்ளது.

சங்கம் தனது பணியை உச்சநிலையில் மேற்கொண்ட 1987 இற்கு முந்திய காலப் பகுதியில் 26 வகையான தயாரிப்புக்களை மிக உயர்ந்த ரகத்தில் உற்பத்தி செய்தது. யாழ். மாவட்டம் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியிலும் இந்த தயாரிப்புகளுக்கு தனிப்பட்ட தர நிலையுடன் கூடிய மரியாதை இருந்தது. மக்களால் விரும்பிப் பயன்படுத்தப்பட்டது. 508 உறுப்பினர்கள் நூல்வகைகளை சங்கத்தில் கொள்வனவு செய்து தமது இல்லங்களில் கைத்தறி நெசவு வேலைகளை மேற்கொண்டனர். அத்துடன் 117 கைத்தறி நெசவுசாலைகளுக்கு நூல் வகைகளும் துணைச்சாதனங்களும் வழங்கப்பட்டன.

சங்கத்தின் விற்பனை நிலையங்கள் சாவகச்சேரி, சுன்னாகம், நெல்லியடி, பளை, வேலணை, சித்தங்கேணி போன்ற இடங்களில் செயற்பட்டன. யாழ். நகரிலும் வியாபார நிலையம் செயற்பட்டது. தற்பொழுதும் ஜி.எஸ். துவாய், வைத்தியசாலை கட்டில் விரிப்புக்கள், பெற்சீற்றுக்கள் என்பன தனித்துவத்துடன் உற்பத்தி செய்யப்படுவதால் வைத்தியசாலைகளின் பாவனைக்கு விருப்பத்துடன் கொள்வனவு செய்யப்படுவதாக பதில் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

தற்போதைய பதில் பொது முகாமையாளர் கணபதிப்பிள்ளை ஜெயக்குமார் சங்கத்தின் சமகாலச் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், தாம் 1991 ஆம் ஆண்டிலிருந்து கடமையாற்றுவதாகவும் அங்கு கடமை புரியும் அனைத்து ஊழியர்களும் மிக மிகக் குறைவான சம்பளத்துடன் கடமை புரியும் நிலையில் (ரூபா. 4500 இல் இருந்து 10 ஆயிரத்துக்குக் குறைந்தது) உள்ளன என்றார்.

சங்கத்தின் உற்பத்திகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளவேண்டியுள்ளது. நெசவாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் அடிப்டையில் ஊதியம் வழங்க வேண்டியுள்ளது. குறைந்த ஊதியத்தில் வேலை செய்ய நெசவாளர் முன்வராத நிலை, சங்கத்தின் உற்பத்திப் பொருள்களை வெளியிடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பதற்கு வாகனம் இல்லாத நிலை இருந்தும் கூட வருமானத்தைப் பொறுத்தவரையில் ஊழியர்களின் சம்பளத்துடன் முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படையினர் வருகையுடன் சங்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் முடக்கப்பட்டது. இந்த வகையில் சங்கத்தின் இழப்பீடு களுக்கு எந்தவிதமான நட்டஈடும் வழங்கப்படவில்லை. சங்கத்தின் ஆதனம் பெரு மளவு தொகைக்கு மக்கள் வங்கியிடம் கடன்பட்ட நிலையில் உள்ளது எனத் தெரி வித்த அவர், மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

"அரசாங்கம் உரிய நட்டஈடும் வழங்கி பொருத்தமான நிவாரணமும் வழங்கினால் சங்க செயற்பாடுகளை மீண்டும் உயிர்ப்படையச் செய்யலாம். ஆனால் இதுவரை எமக்கு எந்த விதமான உதவியும் கிடைக்கவில்லை. வடக்கின் வசந்தம் கூட எமது சங்கத்தின் பக்கம் வீசவில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கண்காட்சிகள்- விற்பனைகளில் எமது காட்சி அறை பலரையும் கவர்ந்ததுடன் இத்தகைய நிறுவனம் ஒன்று செயற்படுகின்றது என்பது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது. எமது சங்கத்தின் செயற்பாடுகளை நேரில் பார்வையிட வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி வாக்குறுதி வழங்கியுள்ளார். சமகால அரசியல் சமூக சூழல் எமது சங்கத்தின் வளர்ச்சிப் போக்கிலும் வசந்த காலமாக மாறும் எனக் காத்திருக்கிறோம்'' எனப் பலத்த எதிர்பார்ப்புடன் அவர் மேலும் தெரிவித்தார்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



பயணங்களால் அனுகூலம் உண்டு. சில நாள்களுக்கு முன்னர் பாதியில் விட்ட வேலை ஒன்றை இன்று வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். பண விவகாரங்களில் உறவினர்களுடன் சிறு மனக்கசப்புகள் ஏற்படலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். புதியவர்கள் சிலரின் நட்பு கிடைக்கும்.

### இடபம்




முயற்சிகளில் முத்தான வெற்றி பெறும் நாள். பழைய பொருள் ஒன்றை மாற்றி புதிய பொருள்கள் வாங்குவீர்கள். நண்பர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பெரிய மனிதர்களைச் சந்தித்து உதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் உண்டு. மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

### மிதுனம்



எதிர்பாராத தடை, தாமதங்களால் எரிச்சல் அடைவீர்கள். சிலருக்காக பிணை கொடுக்க நேரிடலாம். மனைவி, குழந்தைகளுடன் சிறு மனஸ்தாபங்கள் ஏற்படலாம். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். பணிபுரிவோர் திடீர் விடுமுறை எடுக்க நேரிடலாம். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

### கடகம்



எதிர்பார்த்த ஒரு விடயத்தில் ஏமாற்றத்தைச் சந்தித்தாலும் மற்றொரு விடயத்தில் திருப்திகரமான நிலைமை காணப்படும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். பெற்றோர் உங்களிடம் அதிக பாசமாக நடந்து கொள்வர். வரவுகளை எதிர்பார்த்து செலவு ஒன்றைச் செய்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

### சிங்கம்



ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் அலைய நேரிடலாம். பண விவகாரங்களில் சிலரிடம் சாக்குப் போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்துகொள்ளவும்.

### கன்னி



கடனாக, கைமாத்தாக கொடுத்த பணம் திரும்ப வரலாம். சொந்த பந்தங்களுக்காக சில செலவுகளைச் செய்வீர்கள். சிலர் விமர்சனம் செய்தாலும், அதைக் கண்டு கொள்ளாமல் உங்களின் செயற்பாடுகளில் உறுதியாக இருப்பீர்கள். அலைச்சல்கள் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். பால்ய நண்பர் ஒருவரை சந்திக்கலாம்.

### துலாம்



குடும்பத்தினர் மனம் புண்படாத வகையில் அனுசரணையாக, அன்பாக நடந்து கொள்வீர்கள். வெளியூர் பயணங்கள் மூலம் விருப்பங்கள் நிறைவேறலாம். வேலையாள்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். பெண்கள் சிலரால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். சக ஊழியர் ஒருவருக்கு உதவி செய்வீர்கள்.

### விருச்சிகம்



சிலர் மீது கோபம் இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். ஒரு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே வேறு வேலைகள் வந்து தொந்தரவு கொடுக்கலாம். நண்பர்களை விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். உணவு விடயங்களில் எச்சரிக்கை அவசியம்.

### தனுசு



தொடங்கிய சில காரியங்கள் முடிவடையாமல் பாதியில் நிற்கலாம். சிலருடன் தேவையற்ற வாக்குவாதங்கள் செய்து மன உளைச்சலுக்கு ஆட்படலாம். உல்லாசமாகப் பேசி சில விடயங்களில் சிக்கலில் மாட்டிக் கொள்வீர்கள். அயலார் வேண்டாத சில விடயங்களைப் பேசி உங்களுக்கு எரிச்சல் உண்டாக்கலாம்.

### மகரம்



எண்ணக் கனவுகள் நனவாகும் நாள். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பிரியமான உறவினர் ஒருவரின் சந்திப்பு நிகழும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். சுபச் செலவு கூடும்.

### கும்பம்



தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறுவது தள்ளிப் போகலாம். பேச்சில் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். கூட்டுத் தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. சில விடயங்களில் முடிவு எடுக்க முடியாமல் தடுமாறலாம்.

### மீனம்



பிடிவாதமாக செயற்பட்டு நினைத்த வேலைகளை முடித்துக் கொள்ளும் நாள். தாய் வழி உறவுகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். உங்களுக்கு எதிராக அன்பாகப் பேசிய சிலர் மறைமுகமாக விமர்சிக்கலாம். குடும்பத்தினருக்கு பிடித்த விடயம் ஒன்று உங்களுக்கு பிடிக்காமல் போகலாம். இனம்புரியாத கவலை உண்டாகும்.


GREAT OPPORTUNITY
TO GO
ABROAD



London & Europe

spot Admission to London Meet college principals on Saturday 19th June @ 9.00 am onward......

Student VISA

All Payments After VISA

NO Need IELTS

College Payment, Embassy Fee, Sponsor Arrangement

Spot Admission to UK

சனிக்கிழமை (19.06.2010) காலை 9 மணி முதல்

யாழ்.மாணவ மாணவிகளின் நலன் கருதி....

★Londonஇல் இருந்து நேரடியாக யாழ்.மாநகரில் கல்லூரி அதிபர்களை சந்திக்கும் வாய்ப்பு.
★கல்லூரிக்கான அனுமதி உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
★கல்லூரி சம்பந்தமான சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளமுடியும்.
★நீங்கள் விரும்பும் பாடநெறியைத் தெரிவுசெய்து கொள்வதற்கு அரிய வாய்ப்பு.

★London School of Management
★Regent College
College Principals: Dr.Anton, Miss.Kakent

All "A" Grade

தற்போது உள்ள உங்களின் ஆரம்ப ஆங்கில அறிவுடனே London சென்று உயர் கல்வியை தொடர்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு

★வெளிநாட்டு அதிபர்களை சந்தித்து உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
★உங்களின் கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.
★அனுமதிகளை எமது யாழ். காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.
★பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்
★பதிவுகள் முற்றிலும் இலவசம்

இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

UK Students Visa பெற்றுக்கொள்ள IELTS தேவையில்லை

15 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த

அனி இன்டர்நேஷனல் எடியுகேஷன் கன்சல்டன்ட் சர்விஸ்
269/3, பலாலி றோட், யாழ்ப்பாணம்.
Tel: 0214921831, Tele/Fax: 0214921832, Hotline:0772949007/0772949011



24ஆவது பிறந்த தின வாழ்த்தும்
வணிகமாணிப் பட்டம் பெற்றமைக்குப்
பாராட்டும்- 17.06.2010



சாவகச்சேரி வடக்கு
மடத்தடியைச் சேர்ந்தவரும்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
பழைய மாணவரும்
அமெரிக்கா வோடன்
பல்கலைக்கழகத்தில்
(BUSINESS COURSE)
வணிகமாணிப் பட்டம்
பெற்றவருமான
தர்மபாலன்
கௌரிசங்கர்
இன்று (17.06.2010) தனது
24ஆவது பிறந்த தினத்தை
அமெரிக்காவில்
கொண்டாடுகின்றார்.
இவர் மேன்மேலும் கல்வியில்
சிறந்து விளங்க எல்லாம்
வல்ல வெள்ளைமாவடிப்
பிள்ளையார் அருள்புரிய
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா,
நர்மதா, தர்மிகா (தங்கைமார்),
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

த.தர்மபாலன்,
மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு.

(சி/568206)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட உட்கட்டமைப்பு தொடர்பான விடயங்களும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குள் அடக்கம்

## பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் விளக்கம்

நுவரெலியா, ஜூன் 17

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மூலம் நாட்டிற்கு குறிப்பாக மலையகம் உட்பட வடக்கு, கிழக்கு மக்களுக்கு சிறந்த பணிகளைச் செய்யமுடியும் - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமாக மக்கள் சந்திப்பொன்று நடைபெற்றது. இதன்போதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தோட்ட உட்கட்டமைப்பு பிரிவும் இந்த அமைச்சிலேயே உள்ளது. தோட்ட உட்கட்டமைப்பு என்று தனியாக இல்லையே தவிர, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் அனைத்து வேலைத்திட்டப் பிரிவுகளும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதுபற்றித் தெரியாத அரசியல்வாதிகள் சிலர் தங்கள் பெயர், பத்திரிகைகளில் வரவேண்டும் என்பதற்காக பொய்யான தகவல்களைப் பத்திரிகை மூலமும், நாடாளுமன்றத்திலும் தெரிவித்து மக்களைக் குழப்பமடையச் செய்கின்றனர்.

இவ்வாறான செயல்கள் இவர்களின் அரசியல் காழ்ப்புணர்ச்சியைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன. எனது அரசியல் பணி மலையக மக்களின் நல்வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளது. அவர்களது வாழ்க்கை மேம்பாடே எனது பேச்சும் மூச்சுமாகும்.

இ.தொ.கா. அரசுடன் இணைந்து பெருந்தோட்டத்துறை மக்களின் மேம்பாட்டுக்காக உழைத்து வருகின்றது. அரசின் கடந்த ஆட்சிக்காலத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகக் கடமையாற்றினேன். தற்போதைய அதே அரசில் பொருளாதாரப் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளேன். இதனூடாக சிறுபான்மை இனத்தின் நம்பிக்கைக்குரியவனாகப் பணிசெய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்துள்ளது.

நான் தலைமை வகிக்கும் கட்சியான இ.தொ.கா. மலையகத்தில் வளர்ந்து - விரிந்து நிற்கும் பழைமை வாய்ந்த மாபெரும் விருட்சம். அத்துடன் இது ஒரு மூத்த தொழிற்சங்கம்.

மலையக மக்களின் வாழ்வின் சிறப்புக்கு அமரர் தொண்டமான் காலத்தில் இருந்து இது காலவரை காலமும் இ.தொ.கா. ஆற்றி வந்துள்ள பணி வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இன்று மலையக மக்கள் தலை நிமிர்ந்து வாழவும், அவர்கள் தமது கௌரவத்தைப் பேணவும் இ.தொ.கா. காத்திரமான பங்களியைச் செய்துள்ளது.

காலத்துக்குக் காலம் மலையக மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து, அவர்களின் உணர்வுடன் கலந்து ஒன்றி வளர்ந்த அமைப்பு இ.தொ.கா.

கடந்த காலங்களில் நான் தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராகப் பணி புரிந்து மலையகக் கல்வி மேம்பாட்டுக்கு நிறையவே சேவை செய்துள்ளேன்.

மக்களின் சுகாதார வாழ்விற்கும், அபிவிருத்திக்கும் எனப் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறேன். தோட்ட வீடமைப்புப் பணிகளைத் துரிதப்படுத்தி பல்லாயிரம் மலையக மக்கள் பயன் பெறுவதற்காகப் பாடுபட்டுள்ளேன். இவை அனைத்தும் ஆளும் அரசுடன் இணைந்து செயற்பட்டமையால் கிடைத்த நன்மைகளே.

அதேபோன்று, இப்போது பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

நமது நாட்டில் பொருளாதாரத்தைச் சீரழித்த முப்பதாண்டு கால யுத்தம் முடிவடைந்துள்ளது. இனிமேல் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியே இன்றைய தலையாய பணியாக உள்ளது. அத்தகைய பணியில் பங்களிப்புச் செய்ய எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இச்சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கிய ஜனாதிபதிக்கும், எமது கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

பொருளாதரத்தைக் கட்டியெழுப்பும் மாபெரும் சிக்கலான பணியை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி, பஸில் ராஜபக்ஷவை அமைச்சராக நியமித்துள்ளார். சிறந்த தலைமையும், திறமையும், விடாமுயற்சியும், திட்டமிட்டுச் செயலாற்றும் பாங்கும் கொண்ட அமைச்சர் பஸிலுடன் இணைந்து பணியாற்றுவது எனக்குத் திருப்தி தருகின்றது - இப்படி பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் மேலும் தெரிவித்தார். (ஏ)

# இருபது வருடங்களாக புனரமைக்கப்படாத நுவரெலியா ஒலிபன்ட் கீழ்ப்பிரிவு தோட்டப் பாதை

## சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

நுவரெலியா, ஜூன் 17

நுவரெலியா மாவட்டத்தின் ஒலிபன்ட் கீழ்ப்பிரிவுத் தோட்டத்திற்குச் செல்லும் பிரதானபாதை சுமார் இருபது வருடங்களுக்கும் மேலாக எவ்வித புனரமைப்பும் இன்றிக் காணப்படுகின்றது எனப் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

குண்டும் குழியுமாகக் காணப்படும் இவ் வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள், நோயாளர்கள் மற்றும் வாகனச்சாரதிகள் எனப் பலதரப்பினரும் பயணிக்கின்றனர். இவர்கள் தாம் பாரிய சிரமங்களுக்கு முகம்கொடுக்கின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

மழைக்காலங்களில் நிலைமை மிக மோசமடைகின்றது.

தேர்தல் காலங்களில் வாக்குக்கேட்டு வரும் அரசியல்வாதிகள் இவ்வீதியைப் புனரமைத்துத் தருவார்கள் எனக் கூறுவர். எனினும், தேர்தல் முடிவடைந்தவுடன் எவரும் இந்தப்பக்கம் எட்டிகூடப் பார்ப்பதில்லை.

இதேவேளை, இவ்வீதியின் புனரமைப்பு பணிகள் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை செப்பனிடப்பட்டு பின்னர் அது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. என்று தோட்டத் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே,சம்பந்தப்பட்ட வீதியை விரைவில் புனரமைத்து தமது சீரான போக்குவரத்திற்கு வழி ஏற்படுத்துமாறு தொழிலாளர்கள் தரப்பில் கோரப்படுகின்றது. (ஏ)




# வரட்சிக்காலச் சிரமங்களைப் போக்குவதற்கு மத்திய மாகாணத்தில் மழைநீர்த் தாங்கிகள்

கண்டி, ஜூன் 17

மத்திய மாகாணத்தில் வரட்சிக் காலங்களில் ஏற்படக்கூடிய தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக மத்திய மாகாண அமைச்சு மழைநீர்த் தாங்கிகளை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு சேமிக்கப்படும் தண்ணீரை வரட்சிக்காலங்களில் விவசாய மற்றும் வீட்டுப் பாவனைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக 16 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் பல்வேறு பிரதேசங்களில் 52 தாங்கிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)

# சம்பூரில் இடம்பெயர்ந்த அகதி மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை!

## மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 17

''2006 ஆம் ஆண்டு சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு சம்பூரில் வீடுகளை அமைத்துக் கொடுக்க முடியாது போனால் பிறிதொரு இடத்திலாவது வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்''

- இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சரும், பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரனும் சம்பூர் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களை சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் பின்னரே மீள்குடியேற்ற அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இறுதிக்கட்ட யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தமாகவே பலரது கவனமும் உள்ளது. எனினும் அதற்கு முன்னர் வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்கள் தொடர்பாக ஆராய்ந்து அவர்களுக்கும் தீர்வு பெற்றுக் கொடுப்பதில் நாம் கவனம் செலுத்திவருகிறோம். அந்த வகையில் சம்பூர் மக்களின் பிரச்சினைக்கும் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களை விரைவில் வீடுகளை நிர்மாணித்து குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இது தொடர்பில் பேச்சு நடத்தி விரைவில் இவர்களுக்கு நிரந்தர தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

சம்பூரில் வீடுகளை நிர்மாணித்து வழங்க முடியாது போனால் அதற்கு அயலிலுள்ள பிரதேசமொன்றிலாவது அம்மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த நான்கு வருடகாலமாக சம்பூரிலிருந்து 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்கின்றன. இப்படி மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவித்தார். (ஏ)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்து கலாசாரத்துறையை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக ஆணைக்குழு அனுமதி


மட்டக்களப்பு, ஜூன் 17

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்து கலாசாரத்தை ஒரு துறையாக ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதனை அடுத்து மேற்படி துறையை ஆரம்பிப்பதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை கிழக்குப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்து கலாசாரப் பீடத்தை ஆரம்பிக்குமாறு மட்டக்களப்பு காந்தி சேவா சங்கம், இந்து இளைஞர் பேரவை ஆகிய அமைப்புகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தன. காந்தி சேவா சங்கத் தலைவர் இலக்கிய கலாநிதி வ.சிவசுப்பிரமணியம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கும் இந்த விடயத்தை கொண்டு வந்தார். அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் சி.ரவீந்திரநாத்துடனும் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த நடவடிக்கைகளை அடுத்தே இந்து கலாசாரத்தை ஒரு துறையாக ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஏ)




# கடந்த கால அவலங்கள் எம்மைத் தொடரக்கூடாது

## கிழக்குப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 17

''மக்கள் கடந்த காலங்களில் அனுபவித்த துன்ப, துயரங்கள் எண்ணிலடங்காதவை. இந்த நிலை எதிர்காலத்தில் தொடரக் கூடாது.''

- இவ்வாறு கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் எடிசன் குணதிலக தெரிவித்தார்.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வைபவம் ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்துனில் தலைமையில் செங்கலடி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

பொது மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதற்காக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தினால் முதன்முதலாக நடத்தப்படுகின்ற நடமாடும் சேவையில் கலந்து கொள்வதற்காக செங்கலடிக்கு வந்துள்ளேன்.

இங்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் சமுகம் தந்துள்ளனர். அத்துடன், அவர்கள் சிரித்த முகத்துடன் நிற்பதைக் காணும்போது நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தச் செங்கலடி கிராமத்திலே தினமும் கடை முதலாளிகளிடம் கப்பம் கேட்பது, அதைக் கொடுக்காவிட்டால் அவர்களைக் கடத்துவது, கொலை செய்வது போன்ற பயங்கரமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் பொதுமக்களைப் பாதுகாக்கவே படையினர் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர் என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது.

- இப்படிப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஐ.எம். கருணாரட்ன, ஏறாவூர் பிரதேச செயலாளர் கே.சித்திரவேல் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஏ)

# கல்முனை பிரதேச உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக விசனம்

அம்பாறை, ஜூன் 17

கல்முனை மாநகரப் பிரதேசத்திலுள்ள உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு அதிகரித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை உட்பட பல கிராமங்களிலுள்ள பிரதான வீதிக்கடைகளிலும் உள்ளூர்க் கடைகளிலும் இந்த சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வீதிகளிலும் வடிகான்களிலும் பொதுமக்கள் குப்பைகளைக் கொட்டி அசுத்தப்படுத்துவதும் அதிகரித்து வருகிறது.

இது தொடர்பாக கல்முனை மாநகர சபையின் சுகாதார சேவைப் பிரிவினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன் 17

நவாலி, அட்டகிரி முருகன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

(204-302)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 17

ஆனைக்கோட்டை, கரப்பிரான் ஆதி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம் பெறும்.

(204-302)

* * *

கொழும்புத்துறை, ஜூன் 17

கச்சேரி கிழக்கு கடுக்காயம்பதி ஸ்ரீஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிமுதல் சங்காபிஷேகமும் பூஜையும் இடம்பெற்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் திருவீதியுலாவும் நடைபெறும். (135)

* * *

கொழும்புத்துறை, ஜூன் 17

சுண்டிக்குளி, புனித யுவானியார் ஆலய திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திரு சொருப பவனியும் இடம் பெறும்.

(135)

---

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

## கோப்பாய் தனிப்பனை வீரபத்திர சுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு

வலி.கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றம் நடத்தும்

## சமயச்சொற்பொழிவு- புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

**10.06.2010 முதல் 19.06.2010 வரை**

மேற்படி ஆலய மஹோற்சவத்தையொட்டி தினமும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை சைவப் புலவர் கந்தசத்தியதாசன் அவர்களால் "சிவனருட்செல்வர்" பொருள்பற்றி தொடர் சொற்பொழிவு நடத்தப்படும். நிகழ்வின் இறுதியில் தினமும் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான பதில் அளிப்போருக்கு விழா முடிவில் (20.06.2010) அன்று பரிசில்கள் வழங்கப்படும். அனைவரும் போட்டியில் பங்குபற்றலாம். புத்தகக் கண்காட்சி 10.06.2010 பகல் விழா முடிவில் திறந்து வைக்கப்பட்டது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம்,
கோப்பாய். (சி/568192)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**காசிப்பிள்ளை ஆறுமுகம் (V.C)**
(முன்னாள் கணக்காளர்- அப்பையா-அன்கோ புடைவை நிலையம், யாழ்ப்பாணம்)
திதி: 17.06.2010
பூர்வபக்கபஞ்சமி

பிறப்பு 10★07★1924
இறப்பு 18★05★2010

அன்பாய் எம்மை வளர்த்தெடுத்து
அறிவை பெரிதாய் ஊட்டி வைத்து
கனிவாய் இனிதாய் கதை பல கூறிய
கண்ணே மணியே என் இனிய அப்பாவே!
மறைந்து சென்றனையோ இறையடி தொழுகிறோம்.

18.05.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.06.2010) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி. [99512] குடும்பத்தினர்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 16.07.1969



மறைவு: 18.05.2010

**அமரர் செல்வம் ஜெனற்மேரி**

இல்லறம் என்கின்ற இனிய வாழ்வில்
இறை துணையோடு இணைந்து
வாழ்ந்த அன்புத் தெய்வமே!

கரம்பிடித்த கணவரும் தொட்டிலில் நீ வளர்த்த உன் அன்புச் செல்வங்களும் - உன் உடன் பிறந்த உடன் பிறப்புக்களும் உன் பிரிவுத் துயரில் வாழ்ந்து கொண்டிருக்க கல்லறைத் தோட்டத்தில் அமைதியாக - துயில் கொள்ளும் உன் ஆன்மா அமைதி அடைய - அணையா தீபமேற்றி உன்பாதம் மலர் தூவிப் பணிகின்றோம் தாயே!

உன்பிரிவால் துயருறும்
கணவர் செல்வம், பிள்ளைகள், சகோதரர்கள்.

..1,சுவாஸ்லேன், ..டுக்குழி. (99493)

---


# VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.


---


யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக
மல்டிமீடியா ஸ்கொலர்ஷிப்
Join the India's No.1 Animation Academy
CSC Softview Visual Communication
ISO 9001 : 2000 CERTIFIED TRAINING CENTRE
WIN 60% SCHOLARSHIP





அனிமேஷன்-கிராபிக்ஸ்-மல்டிமீடியா தொழில் கல்வி

மல்டிமீடியா புலமைப்பரிசில்
- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- மும்மொழிகளிலும் பரீட்சை
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே
- கலை,இலக்கியம்,திரைப்படத்துறை பற்றிய வினாக்கள்
- 60% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு)
- இலவச பாடநூல்கள் (இந்தியா)
- தவணைமுறை கட்டண வசதி
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்திய சான்றிதழ்கள்

இலவச அனுமதியை இன்றே பெற்றிடுங்கள்

பரீட்சை June 26th & 27th சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை

100% Particles

Digital Pre-Press | Video Editing | Web Animation | Audio & Film Editing | Graphic Design | 2D & 3D Animation | Visual Effects | Cartoon Animation | CBT Technology | Mastering Multimedia

விபரங்கள் மற்றும் இலவச பரீட்சை அனுமதிகள் கீழ்க்கண்ட நிலையங்களில்

ASIAN COMPUTER EDUCATION

| | | |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | கொடிகாமம் வீதி, நெல்லியடி | 230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி |
| T.P : 021-222 5677 | T.P : 021-3734088 | T.P : 021-3213390 |


---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 ★ 01 ★ 1949 — இறப்பு 28 ★ 06 ★ 2009



**திருமதி மகாதேவா தனபூபதி**

அம்மா ஓராண்டு ஆகியும்
ஆறவில்லை எம் துயரம்
ஆற்றுவார் பலர் இருந்தும்
ஆறவில்லை எம் மனங்கள்
உன்னைப் போல் அம்மா உலகில்லை
உறங்காத விழிகளுடன் நாங்கள் இங்கே
உன் உயிர் பிரிந்த வேதனை நினைவுகள்
எங்கள் உயிர் உள்ள வரை மாறாதம்மா
என்றும் உங்கள் இருவரதும் புதியதொரு
வரவுக்காகக் காத்திருக்கும்....

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

கணவர், பிள்ளைகள், மருமகன்.

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

எழுகதிராக 29 ★ 01 ★ 1984 — உதிர்மலராக 30 ★ 08 ★ 2003



**அமரர் மகாதேவா தனரூபன் (செல்வா)**

அன்புச் செல்வாவே!
ஆறாத்துயரில் நீள நினைவுகளை
நெஞ்சில் பதித்து சென்று விட்டாய்
கண்ணீரால் ஏழு ஆண்டுகள்
கரைந்து மறைந்ததுவோ
விட்ட கண்ணீர் காயவில்லை
இனி விழிகளிலோ நீரும் இல்லை
உத்தமமான உன் நினைவு
எங்கள் உள்ளம் விட்டு அகலாது.

[99511]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரைப் பேணல்...



தற்காலத்தில் முதியோரைப் பேணல் என்பது முக்கியமானதொரு விடயமாக உள்ளது. முதியோர் என்பவர்கள் வயதிலேயே மட்டுமல்ல அனுபவத்திலும் முதிர்ந்தவர்கள். இன்று பல காரணங்களால் முதியவர்கள் பேணப்படாமல் உள்ளனர்.

குடும்பத்தவர் எல்லோரும் தொழிலுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை. இதனால் இவர்களைப் பராமரிப்பதற்கு வேலையாள்கள் அல்லது முதியோர் இல்லத்தில் சேர்க்கிறார்கள்.

முதியவர்கள் குடும்பத்திலோ அல்லது வீட்டிலோ இருப்பதால் அக்குடும்பம் கலகலப்பாக இருக்கும். சந்தோஷம் இருக்கும். அதுமட்டுமல்லாது சிறுவர்களுக்கு ஓய்வு நேரங்களில் சிறுகதைகள், கருத்துக்கள், பாட்டுக்கள் சொல்லிக் கொடுப்பார்கள்.

முதுமைப் பருவம் என்பது எல்லோருக்கும் ஏற்படும். ஆகையால் ஒவ்வொரு குடும்பத்தவரும் தம் முதியோர்களைப் பேணுவதன் மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்கலாம். ஒரு நாட்டில் எவ்வளவு முதியோர் இல்லங்கள் உள்ளனவோ. அவ்வளவுக்கு மனிதாபிமானம் இல்லை என்று அர்த்தம். மனிதாபிமானம், அன்பு, இரக்கம் உள்ளவர்கள் தமது முதியோரைக் கைவிடமாட்டார்கள். முதியோரைப் பேணுவது ஒவ்வொருவரினதும் கடமையாகும். முதியோரைப் பேணுவதால் அவர்களின் அன்பையும், ஆசியையும் பெறமுடியும்.

**சா.ஜிந்துஜா, கோண்டாவில்**

# சனிக்கிரகத்தின் நிலவான டைட்டனில் உயிர்வாழும் ஏலியன்ஸ்

விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகள் சனிக் கிரகத்தின் மிகப்பெரிய நிலவான டைட்டனில் உயிர்வாழும் சாத்தியக்கூறுகளைக் கண்டுபிடித்துள்ளனர். அங்கு வாழும் ஏலியன்ஸ் டைட்டனின் வளிமண்டலத்திலிருந்து வரும் ஹைட்ரஜனை சுவாசிப்பதாக அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

விண்வெளியில் சனிக்கிரகத்தின் மீது ஆராய்ச்சி செய்து வரும் காசினி விண்கலம் மூலம் இதனைக் கண்டுபிடித்துள்ளனர். முன்னதாக 3200 மைல் அகலம் கொண்ட டைட்டன் நிலவில் ஆர்கானிக் கெமிக்கலான மீத்தேன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

தற்போது அங்கு வாழும் உயிரினம் மீத்தேனை மூலதனமாகக் கொண்டு வாழ்வதாகவும் மனிதர்களைப் போன்று தண்ணீரை மூலதனமாகக் கொண்டு வாழவில்லை என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


இது குறித்து பிரபல அறிவியல் இதழான ஜகேரஸ் எழுதியுள்ளதாவது, டைட்டனின் அட்மாஸ்பியரில் கீழே ஹைட்ரஜன் மறைவதாகவும்



இதனை ஏலியன்கள் சுவாசிக்கக் கூடும் எனவும் தெரிவித்தனர்.

இதன் மூலம் நமது சூரியக் குடும்பத்தில் பூமியைத் தவிர மற்றும் ஒரு கிரகத்தில் உயிர்கள் வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# சூரியன் பூமியை விழுங்கிவிடும்



இன்னும் 760 கோடி ஆண்டுகளில் பூமி இருக்காது. அதை சூரியன் விழுங்கிவிடும் என வானியல் நிபுணர்கள் கணித்துள்ளனர். இதுகுறித்து இங்கிலாந்தின் சஸ்ஸக்ஸ் பல்கலைக்கழகத்தின் வானியல் பிரிவைச் சேர்ந்த டாக்டர் ராபர்ட் ஸ்மித் தலைமையிலான நிபுணர் குழு ஆய்வு நடத்தி முடிவுகளை வெளியிட்டுள்ளது.

சூரியன் நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டு வருகிறது. இப்படியே போனால் இன்னும் 760 கோடி ஆண்டுகளில் அது பூமியை விழுங்கிவிடும். சூரியனின் வெப்பம் காரணமாக பூமியில் எதுவும் இருக்காது. எல்லாம் சாம்பலாகிவிடும். சூரியனின் வெப்பத்தால் கடல்கள் அனைத்தும் ஆவியாகி முற்றிலுமாக வற்றிப் போய்விடும் என்கிறார் ராபர்ட் ஸ்மித்.

இதைத் தவிர்க்க முடியாதா? பூமியைக் காப்பாற்ற முடியாதா? என்ற கேள்விக்கு ஸ்மித் பதிலளிக்கையில் இதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. வான்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் ஏதாவது ஒரு பெரிய விண்கல்லை பூமியின் புவி வட்டப் பாதைக்கு இழுத்து அதனுடன் பூமியை மோத விட வேண்டும்.

அப்படி மோதினால் நமது புவி வட்டப் பாதை மாறி வேறு பாதைக்கு நாம் வீசப்படுவோம். அப்படிச் செய்தால் சூரியனின் கோரப்பிடியில் இருந்து பூமி தப்பலாம். இன்னும் சில நூற்றாண்டுகளில் இப்படி ஒரு மோதலை ஏற்படுத்தக் கூடிய தொழில்நுட்பத்தை நமது விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே பூமி அழியலாம் என்று பயப்படுவதை விட தப்பிவிடும் என்ற நம்பிக்கையுடன் நாம் இருக்கலாம் என்கிறார் ஸ்மித். அதற்குள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள புவி போன்ற மற்றைய கிரகங்களுக்கும் மனிதன் புலம் பெயர்ந்துவிடுவான். 760 கோடி ஆண்டுகள் எதற்கு, இன்றுள்ள மனிதர் எவரும் மேலும் 150 ஆண்டுகளுக்குப் பின்னர் உயிருடன் இருக்கமாட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## சுமைதாங்கி



என் இதயத்தில்
தினம் தினம் பூக்கும்
புத்தம் புது மலர்கள்
என் கண்கள் கண்ட
புலக்காட்சிகள்....

என் பேனா சிந்திய...
கண்ணீர்....

என்னை...
என் உணர்வுகளை....
தாங்கும் சுமைதாங்கி.....

**த.தர்சினி**
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

## விரும்பினேன்... பிடிக்கவில்லை...



அழகை விரும்பினேன்....
பிடிக்கவில்லை.
இசையை விரும்பினேன்....
பிடிக்கவில்லை.
இயற்கையை விரும்பினேன்...
பிடிக்கவில்லை.
ஓவியத்தை விரும்பினேன்....
பிடிக்கவில்லை.
நட்பை விரும்பினேன்....
பிடிக்கவில்லை.
வாழ விரும்பினேன்....
பிடிக்கவில்லை.
என்னை விரும்பினேன்....
என்னையே பிடிக்கவில்லை.
எனக்கே புரியவில்லை... ஏன் பிடிக்கவில்லை என்று,
உனக்குத் தெரியுமா எனக்குச் சொல்லு...
ஏன் பிடிக்கவில்லையென்று?

**ஞா.சுகந்தி** கல்வயல், சாவகச்சேரி.

## கேள்விக்கென்ன பதில்?- 74 இல் பரிசு பெறுவோர்

1. வே.குமாரசுவாமி, பரமாந்தர் வளவு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
2. செ.ரவிசாந், குறிஞ்சிக்குமரன் வீதி, வீரமனை, குப்பிளான்.
3. இ.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.

## கேள்விக்கு என்ன பதில்?-76

கேள்விக்கென்ன பதில்?- 74இன் சரியான விடை 1984

அமெரிக்க நாட்டில் எத்தனை மாநிலங்கள் அடங்கியுள்ளன?
(சரியான விடையை 25.06.2010 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

### இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தென்துன்னையம்பதி ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் தேவஸ்தான

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

## சிறப்பிதழ் -17.06.2010







### மகிழ்ச்சியைத் தருகின்றது



காலத்தை உருவாக்கும் காரணன் ஆன சிவபூத நாதேஸ்வரனுக்கு கோடி நமஸ்காரம்.
எம்பெருமானுக்குப் புதிய சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்டம் விடும் நிகழ்வு மகிழ்ச்சியைத் தருகின்றது. வடமராட்சியிலே பல தேர்களை உருவாக்கிய நான், சிவபெருமானின் தேரினையும் மிக அழகுற அமைத்திருக்கின்றேன். இப்புனிதமான கைங்கரியத்தில் இணைந்த மதிப்பிற்குரிய குருக்கள் ஐயா. ஆலய குரு, தர்மகர்த்தாக்கள், சிற்ப ஓவியக் கலைஞர்கள்,அடியவர்கள் யாவருக்கும் அருள்கிடைக்கவும் ஆலயம் மேலும் பல உயர்வு நிலைகளை அடைய எம்பெருமானை வணங்கி வாழ்த்தி ஆசிகூறி அமைகின்றேன்.

ரதகலாஞானி ஸ்தபதி விஸ்வப்
பிரம்மஸ்ரீ செல்லையா பாலச்சந்திரன்

### வாழ்த்துரை

எமது ஆலயத்தின் வளர்ச்சியில் இன்று ஒரு திருப்பு முனையாகும். புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு இடம்பெறுகின்றது. இவ்விழா எம் அனைவரினதும் உள்ளங்களில் மகிழ்ச்சி தரும் நிகழ்வாகும். இதுவரை காலமும் அலங்கரிக்கப்பட்ட கட்டுத் தேரினில் வீதிவலம் வந்து எமது பக்தர்களுக்கு அருள் பாலித்துவந்த எம்பெருமான், இன்று முதல் அழகிய சித்திரத்தேரேறி அருள்பாலிக்கவுள்ளார். இவ்விழாவில் இந்த ஆலயத்தின் தர்மகர்த்தா சபையாகிய நாம் இச்சித்திரத்தேரினை அமைப்பதற்கு முன்னின்ற தேர்த் திருவிழா உபயகாரர்கள், ஏனைய மகோற்சவ உபயகாரர்கள், வடிவமைத்த சிற்பாசாரியர்கள், தேர் மண்டபம் வடிவமைத்த ஸ்தபதிகள் அனைவருக்கும் எம்பெருமான் சகல ஐஸ்வரியங்களையும் வழங்கி அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

ஸ்ரீ பூதேஸ்வரர் சிவாலய
தர்மகர்த்தா சபை.

## மஹோற்சவ குருவின் ஆசியுரை



தென்துன்னையம் பதியில் வேண்டுவோர்க்கு வேண்டுவன சாலப் பரிந்து தருகின்ற சைவசமயத்தின் முழுமுதற் தெய்வம் ஸ்ரீ கௌரியம்பாள் சமேத பூதேஸ்வரசிவன் ஆலயம். இவ்வாலயம் துன்னாலைப் பதிக்கு பூரணத்துவம் கொடுக்கும் அற்புதக் கூடமாகும். துன் - நெருங்கிய ஆலயங்கள் நிறைந்த பதி என்பதால் துன்னாலயம் என்கின்ற பெயர்பெற்ற இவ்வூர், காலப்போக்கில் மருவி துன்னாலை, துன்னையூர் என அழைக்கப்படலாயிற்று. இவ்வூரில் அமைந்த பூரணத்துவமுடைய ஒரே சிவன்கோயில் என்கின்ற பெருமையுடைய பூதேஸ்வர சிவனாலயத்தில் இம்முறை புதிய சித்திரத்தேர் அமையப்பெற்ற சிறப்பால் துன்னையூர் கிராமமே பொலிவு பெறுகின்றது. 'அக்னி ஜூவாலை' வடிவினிலே அமைகின்ற தேர் வடிவம். எங்கள் மனங்களிலே இருக்கின்ற அழுக்காறுகளை அகற்றி புனிதத்துவம் கொடுக்கின்றது. சிறியவர், பெரியவர் பேதமின்றி உயர்வு, தாழ்வு நிலையின்றி அனைவரும் வடம்தொட்டு தேர் இழுக்கும் காட்சி மலபரிபாகம் செய்யும் சிறப்பு உற்சவமாகின்றது. அதிலும் சிவாலயத்தேர் மிகவும் சிறப்பும் அருளும் நிறைந்தது. உலக மாதா, பிதாவாக விளங்கும் பார்வதி பரமேஸ்வரர் சித்திரத்தேர் மீதமர்ந்து வருகின்ற காட்சி மானிட ஜென்மம் எடுத்தவர்களுக்குக் கிடைத்த அற்புதக் காட்சியாகின்றது. மரபுமுறை சிற்ப சாஸ்திர வல்லுநர் புத்தூர் ஸ்ரீ காளிகா சிற்பாலயம் 'ரதகலாஞானி' செ.பாலச்சந்திரன் தலைமையில் அமைந்த புதிய சித்திரத்தேர் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும் அழகு நிறைந்திருக்கின்றது. இந்த அற்புதப் பணியில் பங்குகொண்டுள்ள ஆலய பரிபாலகர்கள், தேர்த்திருவிழா உபயகாரர்கள் மற்றும் தேர்த் திருப்பணிக்கு வாரி வழங்கிய ஏனைய மஹோற்சவ உபயகாரர்கள், ஏதோ ஒரு வகையில் இந்த திருப்பணியில் தம்மையும் ஈடுபடுத்திக்கொண்டவர்கள் அனைவருக்கும் சிவனருள் சிறந்தோங்கும் என்பதில் ஐயமில்லை. ஆனி உத்தரத்தை தீர்த்த உற்சவமாகக்கொண்ட ஸ்ரீ கௌரியம்பாள் சமேத பூதேஸ்வரசிவன் ஆலயம் இம்முறை புதிய சித்திரத் தேரில் வலம்வந்து திருவருள் பொழிகின்ற திருப்பேறு அனைவருக்கும் அருட்பேறாக அமைய ஆசிகள்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

சிவசக்தி ஸ்ரீ கலாநிதி
ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்
(துன்னையூர்)

நாளை (18.06.2010) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 9 மணிக்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சமேதர் புதிய சித்திரத்தேரில் ஆரோகணிப்பர்.


ஹப்பி ரெக்ஸ்ரைல்
110, பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
தொ.பே: 021 226 3287

தங்கம்ஸன்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
தொ.பே: 021 226 3205

புதிய அம்பிகா
பல்பொருள் வாணிபம்
Western Union
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே: 021 226 4197

சிதம்பரப்பிள்ளை
புத்தகசாலை
நெல்லியடி, கரவெட்டி.
தொ.பே: 021 226 3223

நெல்லை சில்க்
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே: 021 226 3207

சதாபொன்ஸ்
நிறுவனம்
அல்வாய்
தொ.பே: 021 226 3206

தேவன்
வாணிப நிலையம்
சாவகச்சேரி வீதி,
துன்னாலை தெற்கு,

அம்சன் ஒளியகம்
பிரதான வீதி,
கரவெட்டி.

இந்திரா கபே
நெல்லியடி,
கரவெட்டி.

கனன்
போட்டோப் பிரதி
இல. 165, பிரதான வீதி,
பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அத்தியட்சகர் இல்லை; இதனால் நோயாளர்கள், பொதுமக்கள் பெரும் சிரமம்

## நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 17

கிளிநொச்சி மாவட்டத்தின் பொது வைத்தியசாலையில் நிரந்தர வைத்திய அத்தியட்சகர் இன்மையால் அங்கு செல்லும் நோயாளர்கள், பொதுமக்கள் தமது அலுவல்களை நிறைவேற்ற முடியாமல் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்ட இந்த வைத்தியசாலையில் இதுவரை வைத்திய அத்தியட்சகராகக் கடமையாற்றிய வைத்திய கலாநிதி இ.சிவானந்தன் தற்போது திடீரென முழங்காவில் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் நீண்ட காலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் கடமையாற்றி வருவதுடன் யுத்தத்திற்கு முன்னர் மாவட்ட வைத்திய அதிகாரியாகவும் சிறப்பாகக் கடமையாற்றியவராவார்.

இந்த இடமாற்றத்தால் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக வைத்திய அத்தியட்சகர் அலுவலகத்தில் எவ்வித பணிகளையும் மேற்கொள்ள முடியாமல் உள்ளதாக நோயாளிகள் கூறுகின்றனர்.

குறிப்பாக மருத்துவச் சான்றிதழ் பெறச் செல்லும் அரச ஊழியர்கள், சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு மருத்துவச் சான்று பெறச்செல்வோர் தமது கருமங்களை நிறைவேற்ற முடியாமல் நீண்டநேரம் காத்திருந்து திரும்பவேண்டியுள்ளது.

அத்துடன் வைத்தியசாலையில் இறந்தவர்களின் உடல்களை வெளிக் கொண்டு செல்வதிலும் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மீள ஆரம்பிக்கப்பட்டு துரிதமாக வளர்ச்சி பெற்றுவரும் இவ்வைத்தியசாலையில் பொறுப்பான பதவியில் ஒருவர் இல்லாமல் இருப்பது வைத்தியசாலையின் உடனடிச் செயற்பாடுகளுக்கு சிக்கலாக உள்ளது. வைத்தியசாலைக்கு வரும் முக்கிய பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோரும் உரியவரைச் சந்திக்க முடியாமல் உள்ளது.

அத்தியாவசிய சேவையான வைத்திய சேவையில் இவ்வாறான ஒருபதவி திடீரென வெற்றிடமாக இருப்பது பொதுமக்களிடையே பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

எனவே துறைசார்ந்த உயர் அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறைகொண்டு இவ்வெற்றிடத்துக்கு பொருத்தமான வைத்தியரை நியமித்து பொதுமக்களுக்கான சேவையினை மேம்பாடடையச் செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரியுள்ளனர். (50-405)

# மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை மன்னாரில்

மன்னார்,ஜூன் 17

மனித உரிமைகள் அபிவிருத்தி நிலையம் நடத்தும் இருநாள் பயிற்சிப் பட்டறை இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் மன்னார் குடும்ப நலப்பணியகத்தில் நடைபெறவுள்ளன.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் முன்னேற்றுவதிலும் சிவில் சமூகத்தின் பங்களிப்பு எனும் தொனிப் பொருளில் இங்கு பயிற்சிகள் இடம் பெறும்.

மனித உரிமைகளையும், நல்லாட்சியையும் மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்குமான செயற்பாட்டுக்குழுவாகவும் உறுப்பினர்களாகவும் பயிற்சியாளர்களை உருவாக்குவதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

இதில் பங்குபற்றும் பேராளர்களுக்கு பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் இதற்கான அனுசரணை வழங்குகின்றது. (50-80)

# மன்னார்- வவுனியா பஸ்சேவையை இரவு 7.30 மணிவரை நடத்துங்கள்

## சம்பந்தப்பட்டவர்களிடம் பிரயாணிகள் கோரிக்கை

மன்னார், ஜூன் 17

மன்னாரிலிருந்து சகல பேருந்துகளும் இரவு 7.30 மணிவரை சேவையிலீடுபடுகின்றன. ஆயினும் மன்னார்- வவுனியா சேவை மட்டும் மாலை 5.30 மணியுடன் நிறுத்தப்படுகின்றது. இதனால் மன்னார்- வவுனியா பாதையால் செல்லும் சகல பிரயாணிகளும் தங்களது இருப்பிடங்களுக்குச் செல்வதில் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வடபகுதி தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டது. மன்னாரிலிருந்து இரவு ''யாழ்தேவி''க்குச் செல்லும் பிரயாணிகள் வவுனியாப் பேருந்திலேயே இறங்கிச் செல்கின்றனர். இதற்காக அவர்கள் முன்னதாகவே வவுனியா செல்ல வேண்டியுள்ளது. எனவே வவுனியாவுக்கான இரவு பஸ் சேவையின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

இரவு மூன்று தனியார் பேருந்துகளும் ஒரு குளிரூட்டப்பட்ட பேருந்தும் ஒரு அரச பேருந்தும் நள்ளிரவு 12 மணிவரையில் கொழும்பு சேவையில் ஈடுபடுகின்றன. இந்தச் சேவையினூடாக வவுனியா செல்லமுடியாது. எனவே இரவு 7.30 மணிக்கு மன்னார் - வவுனியா சேவையை நடத்தி மக்களின் போக்குவரத்துக்குப் பிரச்சினையைத் தீர்க்கும்படி மன்னார் பஸ் பிரயாணிகள் சங்கம் சம்பந்தப்பட்டோரைக் கேட்டுள்ளது. (50-80)




# கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் நிறம் மாறிவருகிறது கிணற்று நீர்

கிளிநொச்சி,ஜூன் 17

கிளிநொச்சி, கணேசபுரம் பகுதியில் கிணற்று நீர் நிறம்மாறி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் பல கிணறுகளில் நீர் மஞ்சள் நிறமாகக் காணப்படுகின்றது. இந்த நீரில் இரும்பு துருப்பிடித்த மணம் வருகின்றது. இதனால் இந்த நீரினைக் குடிப்பதற்கு மட்டுமன்றி உடுப்புக்களைத் துவைப்பதற்கும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் மக்கள் குடிதண்ணீருக்காகவும் வேறு பாவனைக்காகவும் நீரைப்பெற நீண்டதூரம் அலைய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்திற்கு பின்னர் ஒருசில கிணறுகளில் நீர் இவ்வாறு காணப்பட்டது. ஆனால் மீள்குடியேற்றத்துக்குப் பின் மக்கள் கிணறுகளை இறைத்த பின்னர் இவ்வாறான மஞ்சள் தன்மையாகமாறி வருகின்றது. இது மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இது தொடர்பான வல்லுநர்களைக் கொண்டு இதற்கான காரணங்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்டவர்கள் அக்கறைகொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் முன்னர் குழாய் நீர்விநியோகம் காணப்பட்டதால் அதனைச் சீர்படுத்தி குடிதண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-405)

# 20 ஆண்டுகளின் பின்னர் விடத்தல்தீவில் மீள்குடியமர்வு

மன்னார், ஜூன் 17

20 ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெயர்ந்திருந்த விடத்தல் தீவு முஸ்லிம்கள் தற்போது யுத்தம் முடிவடைந்த பின்னர் அங்கு படிப்படியாக மீளக்குடியேறி வருகின்றனர். தற்போது சுமார் நூறு குடும்பங்கள் மீளக்குடியேறித் தங்கள் வளவுகளையும், ஜும்மாப் பள்ளிகளையும் துப்புரவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையும் புனரமைப்பு செய்யப்பட்டஜும்மாப் பள்ளி திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் வன்னி நாடாளுமன்ற அங்கத்தவர்கள், கைத்தொழில்,வர்த்தக அமைச்சர் அல்ஹாஜ் ரிஷாட் பதியுதீன், உட்பட பல அரச உயர் அதிகாரிகளும், உள்ளூர் முஸ்லிம் மீள்குடியேறியவர்களும் கலந்துகொள்ளவுள்ளதாக அறிய வருகின்றது. (50-80)

# கிளிநொச்சியில் மீண்டும் ஆதவன் முன்பள்ளி

கிளிநொச்சி, ஜூன் 17

கிளிநொச்சி நகரின் அண்மையில் கனகபுரத்தில் முன்னர் இயங்கிய ஆதவன் முன்பள்ளி மீண்டும் அதே இடத்தில் புதுப் பொலிவுடன் இயங்க ஆரம்பித்துள்ளது. பதினைந்தாவது ஆண்டில் காலடிவைத்துள்ள இந்த முன்பள்ளி 110 மாணவர்களுடனும் ஆறு ஆசிரியர்களுடனும் சிறப்பாக இயங்கி வருகின்றது.

கிளிநொச்சியில் மீள்குடியேற்றம் இடம் பெற்றுள்ள நிலையில் முன் பள்ளிகள் பல ஆரம்பிக்கப்படாத நிலையில் இந்த முன் பள்ளியின் ஆரம்பமானது மழலைகளின் கல்விக்கு மிகுந்த வாய்ப்பாக உள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முன்பள்ளியில் அடுத்த வாரமளவில் விளையாட்டு விழாவும் கலை விழாவும் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (50-405)

# கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூன் 17

கிளிநொச்சி மாவட்டத் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

யுத்தத்திற்கு முன்னர் கிளிநொச்சியில் இயங்கிய இந்த நிறுவனம் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள நிலையில் இப்போது மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்காகக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருவதுடன் பெயர்ப் பலகையும் நாட்டப்பட்டுள்ளது. இந்த நிறுவன வளாகத்தையும் 'ரிஆர்' ரெக் வளாகத்தையும் உள்ளடக்கிய பகுதியில் தற்போது கிளிநொச்சி மத்திய கல்லூரி இயங்கி வருகின்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி கிளிநொச்சிப் பகுதி மக்களின் மீள் குடியேற்றத்திற்கான இடைத்தங்கல் முகாமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் நிலையில் இவ்வளாகத்தில் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்படுவதால் கல்லூரிச் செயற்பாடுகள் தடைப்படும் அபாயம் உள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனால் கல்லூரியை அதன் மைதானப் பகுதியில் தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. (50-405)



செலான் வங்கியின் கிளை அண்மையில் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மங்கள வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும், ஜனாதிபதியின் வங்கியியல் ஆலோசகர் கலாநிதி திருமதி ராணி ஜெயமஹா மங்கள விளக்கேற்றுவதையும் முதல் இரு படங்களிலும்-

செலான் வங்கிக் கிளையை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், சர்வமதத் தலைவர்கள் அமர்ந்திருப்பதையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: கிளிநொச்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி. எம்.பிக்கள் குழு 'உதயனு'க்கு விஜயம் செய்த போது.....






மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் நேற்று 'உதயன்' நிறுவனத்துக்கு வருகைதந்தனர். விஜித ஹேரத், அநுரகுமார திஸநாயக்க, கொழும்பு மாநகரசபை உறுப்பினர் மோகன் ஆகியோர் பிரதம ஆசிரியருடன் கலந்துரையாடுவதையும், 'உதயன்' மீதான தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் படங்களையும், அச்சு இயந்திரங்களையும் விஜித ஹேரத் பார்வையிடுவதையும் ஆசிரிய பீட உறுப்பினர்களுடன் அவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (1)

## வேலை தேடி மலேஷியா சென்ற இலங்கையர் நிர்க்கதி நிலையில்

கொழும்பு, ஜூன் 17

மலேசியாவில் வேலை வாய்ப்புக்கென அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையர்கள் அந்த நாட்டில் நிர்க்கதியாகி உள்ளனர்.

இவர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி ட. ட.ரண சிங்க தெரிவித்தார்.

நிர்க்கதியானவர்கள் போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் ஊடாக மலேசியா சென்றுள்ளார்கள் என தூதுவர் சுட்டிக்காட்டினார்.

இவர்களுள் பலர் மலேசியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தங்கியிருக்கின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறிப் பணத்தை அறவிட்ட பின்னர் குறித்த இலங்கையர்கள் அநாதரவான நிலையில் கைவிடப்பட்டுள்ளனர் எனக்கூறிய அவர், தங்கள் கடவுச்சீட்டுகளையும், பணத்தையும் இழந்ததையடுத்து இவர்கள் தூதரகத்தின் தயவை நாடியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக வெளிநாடுகளுக்குச் செல்வதன்மூலமே இத்தகைய நிலைமைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார். (அ-சி)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவத் தயார் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 17

வடக்கிலுள்ள மக்கள் - குறிப்பாக மீளக் குடியமர்ந்த மக்கள்-எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஜே.வி.பி. அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பேராதனைப் பல்கலைக் கழக மாணவி ராசையா துவாரகாவின் உறவினர்களையும் மற்றும் கல்மடு பிரதேச மக்களையும் சந்தித்து உரையாடியதன் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கல்மடுக் கிராமத்தைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தபட்சம் ஒருவர் காணாமற் போயுள்ளார். அல்லது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என இக்கிராம மக்கள், ஜே.வி.பி. குழுவினரிடம் தெரிவித்தனர்.

ஜனாதிபதி, இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர், அரசியல் தலைவர்கள் உட்பட பல்வேறு தரப்பினருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதங்களின் பிரதிகளையும் இம்மக்கள், ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவிடம் கையளித்தனர்.

வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தாம் நன்றாக உணர்ந்துள்ளதாகவும் அதனைத் தீர்த்து அவர்கள் சகஜ வாழ்க்கை வாழ அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் எனவும் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிமல் ரத்நாயக்க, ராமலிங்கம் சந்திரசேகரன் உட்படப் பலர் சோமவன்ஸ அமரசிங்கவுடன் வடக்குக்கு விஜயம் செய்துள்ளனர். (ஒ-சி)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம்பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினரையும், இரண்டாமிடம்பெற்ற ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணியினரையும் மூன்றாமிடம்பெற்ற ஆனைக்கோட்டை மகா வித்தியாலய அணியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்': நேசன்)

# இறுதிச் சுற்றுவரை போராடியது வவுனியா கிடாய்ச் சூரி ம.வி.
# வடமாகாணக் கரப்பந்தாட்டச் சம்பியனானது மெதடிஸ்!

வலி.வடக்கு, ஜூன் 17

வடமாகாண கல்வித் திணைக்களம் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் வடமாகாண சம்பியனாக வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை தெரிவானது.

புத்தூர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் மகாவித்தியாலய மைதானத்தில் நடந்த இறுதியாட்டத்தில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் வவுனியா கிடாய்ச் சூரி மகாவித்தியாலயமும் மோதின.

ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தது இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை இரண்டு சுற்றுக்களையும் வவுனியா கிடாய்ச் சூரி மகாவித்தியாலயம் ஒரு சுற்றையும் கைப்பற்றின.

முதல் சுற்றில் வடமராட்சி மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை 25:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற்ற இரண்டாம் சுற்றை வவுனியா கிடாய்ச் சூரி விளையாட்டுக் கழகம் 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது சுற்றை யார் வெல்லப்போகிறார்கள் என எதிர்பார்த்திருக்க வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வடமாகாண சம்பியனைத் தன தாக்கியது. (6-86)

# 'தூய ஒளி' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 17

பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் 'தூய ஒளி' வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் அழைக்கப்பட்ட 20 விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொள்ளவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (6-23)

# வடமாகாண எல்லே போட்டியில் நாளை இடம்பெறும் ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜூன் 17

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் பெண்களுக்கான எல்லே போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ள போட்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* வவுனியா பூவரசங்குளம் மகாவித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு 3ஆம் இடம் பெற்ற அணி.
* மன்னார் சென்.லூசியஸ் மகா வித்தியாலயம் எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.
* முல்லைத்தீவு முதலாம் இடம்பெற்ற அணி எதிர் மன்னார் ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை.
* கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலம் எதிர் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
* வவுனியா கணேஸ்வரா மகா வித்தியாலயம் எதிர் மன்னார் புனித வளனார் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை.
* கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு 2ஆம் இடம் பெற்ற அணி.
* வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து வடமராட்சி மணற்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை மோதவுள்ளது.(6-86)

# தேசிய இளைஞர் கழகங்களின் உதைபந்தாட்டம்; வெற்றிக்கிண்ணம் வேள்ட் லெவன் வசம்!

யாழ்ப்பாணம், ஜூன் 17

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துச் சென்றது அளவெட்டி கணேசபுரம் வேள்ட் லெவன் இளைஞர் கழகம்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் இளைஞர் கழகமும் அளவெட்டி வேள்ட்லெவன் இளைஞர் கழகமும் மோதின.

பரபரப்பாக இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில்வேல்ட்லெவன் இளைஞர் கழகம் 2:1 கோல்கள் என்ற ரீதியில் இளவாலை சென். லூட்ஸ் இளைஞர் கழகத்தை வென்று வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. (6-86)




## மாவட்ட செயலகத்தின் கபடிப்போட்டி
# சாவகச்சேரி பி.செயலகத்தை இலகுவாக வென்று மாவட்ட சம்பியனானது பருத்தித்துறை பி.செ.!

வலி.வடக்கு, ஜூன் 17

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கபடிப் போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியின் கைகளே மேலோங்கியிருந்தன.

பருத்தித்துறைக்கு சாவகச்சேரிப் பிரதேச செயலக அணி ஈடு கொடுத்து விளையாட முயற்சித்த போதிலும் சாத்தியப்படாத நிலைமையே காணப்பட்டது.

முதல்பாதி ஆட்டத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 52:16 புள்ளிகள் என வகிக்க ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியின் வேகமான ஆட்டத்தின் மூலம் 53:15 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 105:31 புள்ளிகள் என்ற அடிப்படையில் சாவகச்சேரிப் பிரதேச செயலக அணியை வெற்றிபெற்று யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (6-86)

# ஆட்டத்தின் ஆரம்பம் முதல் அதிரடி காட்டியது யூனியன் கல்லூரி; வடமாகாண வலைப்பந்தாட்ட சம்பியனையும் தனதாக்கியது!

வலி.வடக்கு, ஜூன் 17

வடமாகாண கல்வித்திணைக்களம் வடமாகாண மாவட்டப் பாடசாலை அணி



களுக்கு இடையே நடத்திய 17 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வடமாகாண சம்பியனாகத் தெரிவானது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதின.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் முடிவுவரை மைதானத்தில் யூனியன் கல்லூரியே ஆதிக்கம் செலுத்தியது.

முதல்பாதி ஆட்டத்தை யூனியன் கல்லூரி 13:04 புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் ஆரம்பத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி யூனியன் கல்லூரிக்கு எதிர்ப்பைக் காட்டியது. ஆனாலும் யூனியன் கல்லூரி அதிரடியாக ஆடி 13:07 புள்ளிகள் அடிப்படை யில் இரண்டாம் பாதி ஆட்டத்தையும் கைப்பற்றியது.

ஆட்ட [illegible] 26.14 என்ற [illegible]



டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி [illegible] காண சம்பியனைத் தன [illegible] (6-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்பானதாக அமையமாட்டாது என்பதை நாம் அரசுத்தரப்புக்குத் தெளிவாகக் கூற வேண்டியுள்ளது. அத்தோடு அந்த அவலத்திலும் தம்மோடு முன்னர் வாழ்ந்த உறவுகள் இழக்கப்பட்டதால், அங்கவீனர் களாக்கப்பட்டதால் அவர்கள் படும் உளத்தாக் கங்களையும் எம்மால் உணரமுடிந்தது.

யாழ். மாவட்டத்தில் சில பகுதிகளுக்கு நாம் சென்றிருந்தோம். சிரமத்தைப் பாராது காரைநகர் நீலன் காட்டுக்கும் கூட நாம் சென்றோம்.அப்பிரதேசங்களில் கூட அரசு கூறும் அளவுக்கு ஆக்கபூர்வமாக எக்கருமங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கூறிக்கொள்ள இயலாது.

யாழ். மாவட்டத்திலும் சில கிராமங்களில் மக்கள் படும் அவலங்களை நேரடியாகவே கண்டு பெரிதும் துயருற்றோம். எனவே அந்த மக்களின் அத்தியாவசிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது கட்டாயமாக நிறை வேற்றப்பட வேண்டியுள்ளது. இத்தகைய அணுகு முறைகள் தாமதமின்றிக் கையாளப்படுமாயின் அவர்களது சந்தேகமும் பீதியும் இன்றைய அளவில் ஓரளவுக்கு நீங்கப் பெறுவதோடு, சிங்கள நிர்வாகம் மீது நல்லெண்ணமும் நம்பிக்கையும் கூட ஓரளவுக்கு வளர்ச்சியடையக் கூடும். இன்றைய நிலைப்பாட்டில் இவை மிக அவசியமாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ள கருமங்களே என நாம் கருதுகிறோம்.

கேள்வி: சரி, தமிழ் இளைஞர் களும் யுவதிகளும் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதற்குக் காரணமாக அமைந்த ஏதுக்களுக்கு வழி சமைத்துக் கொடுத்த அரசியல் பின்னணி பற்றி?

பதில்: முதற்காரணி எமது சிங்கள அரசியல் தலைவர்களின் பதவி ஆசை. கடந்த அறுபது ஆண்டுகாலமாகத் தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதப்படுவதற்கு சிங்கள அரசியல் வாதிகளின் பதவி ஆசையே காரணமாயிற்று என்று கூறுவதில் தவறேதும் இல்லை. தமது பதவியையும் அதிகாரத்தையும் தொடர்ச்சியாகத் தக்கவைத்துக் கொள்வது தொடர்பாக அவர்கள் பல தரப்பட்ட உத்திகள், உபாயங்களைக் கையாண்டுள்ளனர். அதற்கு வரலாற்றில் உதாரணங்கள் நிறையவே உள்ளன. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் முதலாளித்துவக் கொள்கைக்குப் பின்னால் பயணிக்கும் போக்கு, அதன் காரணமாக அமெரிக்காவோடு இணைந்து பயணித்தது. அமெரிக்க கலாசாரத்துக்குக் கதவைத் திறந்துவிட்டதும் அவர்கள் பக்கமே முழுமையாகச் சார்ந்து நின்றமையும் அன்று தமிழர்களின் கிளர்ச்சி வலுப்பெறுவதற்கு மிக நன்றாகவே வழிசமைத்திருந்தன. அவரது இந்த அமெரிக்கா சார்ந்த போக்கை இந்தியா ஜீரணித்துக் கொள்ள வில்லை. இந்த ஒவ்வாத அரசியல் பின்னணியைத் தமக்குச் சார்பானதாக மாற்றிவிடவும் ஜே.ஆருக்குப் பாடம் புகட்டுவதற்கும் இந்தியா தனது சாணக்கியத்தைப் பயன்படுத்தியது. தமிழரின் உரிமை வேட்கைகான போராட்ட முயற்சிகளுக்கு பலவிதங் களிலும் உதவியது. தனது நாட்டில் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகளை வழங்கியது. ஆயுதங்களையும் கொடுத்தது. பண உதவிகளையும் வழங்கியது. அதிலிருந்து தான் இந்த இறுதி யுத்தம் வரையிலான தமிழர்களது ஆயுதப்போராட்டம்கூர்மைபெற்றது. எவ்வாறோ அது இன்று முடிந்து விட்டது.

### யுத்த வெற்றியைக் கொண்டாடுவது தமிழர்களின் சுதந்திர உணர்வைத் தூண்டும்

புலிகளை அழித்துவிட்ட அந்த யுத்த வெற்றியை ஆண்டொன்று கடந்த பின்னரும் பெருமெடுப்பில் கொண்டாடுவது தமிழ் மக்களை மேலும் காயப்படுத்து வதாகும். அவர்கள் ஏற்கனவே பட்டுள்ள காயங்களைத் தோண்டித் தோண்டி அவர்களை மேன்மேலும் வேதனைப்படுத்துவதாகும். அவர்களின் உளத்தாக்கங்களை மேன்மேலும் அதிகரிக்கச் செய்து அவர்களின் சுதந்திர உணர்வுகளை தூண்டச் செய்வதாகும். இதே போக்கை தொடர்ந்து வரும் எந்தவொரு சிங்கள அரசியலிலும் எம்மால் காணமுடிகிறது.

எனவே சுதந்திரக் கட்சியின் நிர்வாகத்தின் கீழோ அல்லது ஐ.தே.கட்சியின் நிர்வாகத்தின் கீழோ அனைத்து இன மக்களும் சமத்துவமாக வாழத்தக்க தீர்வொன்று வழங்கப்படுமென்பதை எதிர்பார்க்க இயலாது. இடதுசாரிகளால் மட்டுமே அதைச் சாத்தியமாக்கி நாட்டை சீரானதொன்றாகக் கொண்டுவர முடிமென நாம் கருதுகின்றோம்.

அது ஒருபுறமிருக்க இந்த மஹிந்த யுகத்தில் சிங்கள மக்களிடையேயும் தமிழ்பேசும் மக்களிடையேயும் பரஸ்பர நல்லெண்ண உறவு வளர்த்துவிடப்பட வேண்டுமானால் நாட்டின் சமத்துவம் என்பது அரசமைப்பு ரீதியிலும் சட்டமய ரீதியிலும் நடைமுறையிலும் ஆக்கபூர்வமானதாகக் கொண்டு செல்லப்படுமானால் பாரபட்சம், இன, மத பேதங்கள் அற்ற தத்தமது கலாசாரங்கள் பேணப்படும். அனைத்து முகங்களிலும் புன்னகை தவழும் - அரவணைத்துக் கொள்ளும் சுமுகமான நல்லாட்சி நிலவும் நாடொன்றைக் காண முடியும் என்பதே எமது கருத்தாகும்.

கேள்வி: தங்களுடனான இச்சந்திப்பில் வடபுலத்தின் இன்றைய நிலைப் பாடுகளையும் நாம் மிகத் தெளிவாக விளக்கியுள்ளோம். தங்களுக்கு இவை பெரிதும் பயன்படுமென்றே நாம் கருதுகிறோம். சரி,இவ்வளவு தெளிவாக இருக்கும் தங்களது கட்சி சிங்கள - தமிழ் நல்லெண்ண உறவை மேம்படுத்துவதற்கு இதற்கு முன்னரே செயற்பட்டிருக்கலாமல்லவா?

பதில்: உண்மைதான் , என்றாலும் எமது கட்சியின் அரசியல் பயணத்தில் நாம் நிறையவே சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளோம். அரச அடக்கு முறைக்கும் தலையீடுகளுக்கும் கூட நாம் முகம் கொடுக்க நேர்ந்திருந்தது.

### எமது கட்சியின் நிலைப்பாட்டை வடக்கு - தெற்கு மக்களுக்கு தெளிவுபடுத்தும் வாய்ப்பு இப்போது

குறிப்பாக 1976 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரையிலும் மட்டுமே எம்மால் எமது அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ள வாய்ப்பு அமைந்திருந்தது. 1983 இன் கடைக்கூறில் ஆரம்பமான உள்நாட்டுப்போர் காரணமாக எமது செயற்பாடுகள் அரசியல் போராட்டங்கள் என்ற சிக்கல்கள் நிறைந்ததாகவே இருந்துள்ளன. அவற்றைவிடவும் எமது கட்சியின் செயற்பாட்டோடு சம்பந்தப்பட்ட எதிர்பாராத பலவும் நிகழ்ந்துள்ளன. இன்று நல்லதொரு வாய்ப்பு எமக்குக் கிட்டியுள்ளதாகவே கருதுகிறோம். எனவே எமது தெளிவான யதார்த்தத்தைத் தென்பகுதி மக்களுக்கும், வடபுலத்தின் மக்களுக்கும் தெளிவு படுத்த எம்மால் இயலும். அத்தெளிவை ஏற்படுத்துவதன் மூலம் பரஸ்பர நட்புறவை, நல்ல எண்ணக்கருவை இந்த இருதரப்புகள் மத்தியில் ஏற்படுத்திட எம்மால் இயலும். அதை நாம் ஒருபோதும் இழக்க விரும்பவில்லை. எமது இன்றைய இந்த நல்முயற்சிக்கான இப்பயணம் இனி வெற்றிகரமாக முன்னோக்கிச் செல்லும் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

நன்றி வணக்கம்.




**STUDY IN INDIA**
JAI INDIAN EDUCATION CONSULTANTS
For More Details: www.jieconline.com
(அரியசந்தர்ப்பம்)

**Available Courses:**

| Biology: | Maths: | Other Courses: |
|---|---|---|
| Medicine | Mechanical | B.SC Hotel & Catering Management |
| Dental | Civil | |
| Physiotherapy | E.C.E | |
| B.Pharma | E.E.E | |
| Biotechnology | C.S.E | |
| Bio Medical | I.T | Scholarships Available... |
| Bio Informatics | E&I | |
| B.Sc Nursing | | |

| Professional: | Commerce: | |
|---|---|---|
| MBA | B.COM | இப் பாடநெறிகள் அனைத்தும் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டவை |
| MCA | For Arts: | |
| M.PHARMA | LAW | |
| M.Tech | | |

Limited Seats Available...
Apply Before 10th of July....

FOR MORE DETAILS
J.I.E.C (Sri Lanka)
C-50, Old galaha Road
Peradeniya, Kandy
Phone: 0774138831
Mail: dharshan21@live.com
J.I.E.C

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

**மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் 2010**
அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office, 3 Months, 3500/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~22500/=~~ 4500/= | Diploma in Web Page Designing, 3 Months, ~~22500/=~~ 4500/= |
| Diploma in Graphic Designing, 4 Months, ~~22500/=~~ 4500/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~20000/=~~ 4000/= | Diploma in Auto CAD, 3 Months, ~~22500/=~~ 4500/= |
| Diploma in Accounting Package, 3 Months, ~~22500/=~~ 4500/= | Diploma in Computer Science, 4 Months, ~~22500/=~~ 4500/= | Honors Diploma in Computer Science, 3 Months, ~~32500/=~~ 6500/= |

80% Off

50% Off Advance Courses
Dip. in. Multimedia ~~10000~~ 5000/=
Dip. in. Video Editing ~~9500~~ 4750/=

Batch i - 19.06.2010 - 9Am or 3pm
Batch ii - 20.06.2010 - 9Am or 3pm
Batch iii - 23.06.2010 - 9Am or 3pm
Batch iv - 25.06.2010 - 9Am or 3pm

1 Week Courses
(Monday to Friday)
Start On 21.06.2010 At 9AM
1) Diploma in Hardware Engineering
2) Diploma in Video Editing
3) Diploma in Graphic Designing


## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை இராசையா



(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வதிவிட மாகவும் கொண்ட காசிப்பிள்ளை இராசையா 15.06.2010 செவ்வாய்க் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - காமாட்சி தம்பதி யினரின் அன்பு மகனும், உசனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியின ரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், விஜிதா (சிரேஷ்ட விரி வுரையாளர், பொருளியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்), டாக் டர் பிரதாபன் (மகப்பேற்று வைத்திய நிபுணர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவிசங்கர் (வர்த்தக வங்கி, மானிப்பாய்), டாக்டர் ஷாமினி ஆகியோரின் அன்பு மாமனும், பானுஜன், வைஷ்ணவி, பஷ்மித்திரன், சுருதிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2010) வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
டாக்டர். பிரதாபன் (மகன்),
ம.ரவிசங்கர் (மருமகன்)

492, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி/568225)

### பிரம்மஸ்ரீ சிவானந்தக் குருக்கள் சர்வேஸ்வரசர்மா



(வயலின் வித்துவான்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நீரா வியடியை வசிப் பிடமாகவும் கொண்ட சிவானந்தக் குருக்கள் சர்வேஸ்வர சர்மா நேற்று (16.06.2010) புதன் கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவானந்தக்குருக்கள் - நீலயாதாக்ஷி தம்பதியினரின் பாசமிகு மகனும், ருக் குமணிதேவியின் அன்புக் கணவரும், பிரம்மஸ்ரீ முத்துக்குமாரசாமி சர்மா, காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணிய சர்மா, சபாநாயக சர்மா, ஞானசர்மா, பரமசிவ சர்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகசபாபதிக் குருக் கள் (ராசாமணி), காலஞ்சென்ற சங்கீத வித்துவான் இராமநாதன் மற்றும் ஞானகி (சுசீலா), மங்களாம்பாள் (மங்களம்), புவ னேஸ்வரி (கமலா) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயா னத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாண வர்கள், இசைக்கலைஞர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, நடேசர் கோயில்,
கடைச்சாமி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம். (99612)

தகவல்: ருக்மணி (மனைவி),
வயலின் வித்துவான்
அ. ஜெயராமன் (மாணவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோயிஸ்ட்டுகள் பிரச்சினைக்கு மத்திய அரசுகளே மூலகாரணம்!

## உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி குற்றச்சாட்டு

பாட்னா,ஜூன் 17

தொடர்ந்து வந்த மத்திய அரசுகளின் தவறான சமூக - பொருளாதாரக் கொள்கைகளே மக்களை மாவோயிஸ்ட்களாக மாற்றியுள்ளன - என்று உத்தரப் பிரதேசத்தின் முதல்வர் மாயாவதி கூறியுள்ளார்.

நான்கு மாநில பகுஜன் சமாஜ் கட்சி நிர்வாகிகளின் மண்டல மாநாடு பாட்னாவில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

சுதந்திரத்துக்குப் பின்னர் ஆட்சி புரிந்த காங்கிரஸ், பா.ஜ.க. மற்றும் இதர கட்சிகள் தவறான சமூக - பொருளாதாரக் கொள்கைகளையே கொண்டுள்ளன. இதனாலே ஏழை மக்கள் தங்களின் நியாயங்களுக்காக வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டி நேரிட்டது.



பாட்னாவில் நடைபெற்ற கட்சி மண்டல மாநாட்டில் முதல்வர் மாயாவதி ...

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தவறான கொள்கைகளே தற்போது நிலவும் கடுமையான விலையேற்றத்துக்கு காரணமாகும். பெற்றோல், டீசல் விலைகளை உயர்த்துவதன் மூலம் மத்திய அரசு விலை உயர்வு பிரச்சினையை முக்கியமானதாக கருதவில்லை என்பது தெளிவாகிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், மக்களின் வாக்குகளைப் பெறவே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அப்போது பெற்றோல், டீசல் விலைகளை உயர்த்தவில்லை. ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் அரசு விலைகள்ளை உயர்த்திவிட்டது.

பெரிய கட்சிகளான காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. தங்களின் பொதுக்கூட்டங்களுக்கும், தேர்தல் செலவுகளுக்கும் பெரிய நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெறுகின்றன. ஆட்சிக்கு வந்த பின்னர் அத்தொகையை திரும்பக் கொடுக்கின்றன.

அத்துடன், நடைபெறவுள்ள பீஹார், மேற்கு வங்கம், ஒரிசா மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களுக்கான சட்டமன்றத் தேர்தல்களில் பகுஜன் சமாஜ்வாதிக் கட்சி தனித்து நின்று போட்டியிடும்.

பீஹாரில் உள்ள கட்சித் தொண்டர்களிடம் உத்தரப் பிரதேசத்தில் உள்ளதுபோல அனைத்துச் சாதியினரையும் ஒன்றிணைத்து தேர்தலைச் சந்திக்க வேண்டும். கட்சியின் கொள்கையை அடிதட்டு மக்களிடம் சென்று விளக்க வேண்டும்.

உத்தரப் பிரதேசத்தில் ஆட்சிக்கு வந்த பின்னர் நடைபெற்ற பல இடைத்தேர்தல்களில் சமாஜ்வாதிக் கட்சியிடமிருந்து பல தொகுதிகளை பகுஜன் சமாஜ்வாதிக் கட்சி தன் வசமாக்கியுள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## ரஞ்சிதா இப்போது அமெரிக்காவில்



பெங்களூர், கர்நாடகப் பொலிஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு அமெரிக்காவுக்கு ஓட்டம் பிடித்துள்ளார் நடிகை ரஞ்சிதா.

நித்தியானந்தாவும் நடிகை ரஞ்சிதாவும் நெருக்கமாக இருந்த விடியோ வெளியான பின்னர் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நித்தியானந்தா வழக்கில் ரஞ்சிதாவின் சாட்சியம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எனவே, அவரைக் கைது செய்வதற்காக நீதிமன்ற ஆணை வாங்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் உள்ள தந்தை வீட்டில் ரஞ்சிதா இருப்பது தற்போது தெரியவந்துள்ளது. அவர் எப்போது அமெரிக்காவுக்கு தப்பிச் சென்றார் என்பது புரியாமல் பொலிஸார் குழம்பியுள்ளனர்.

இந்த நிலையில், கர்நாடக சி.ஐ.டி. பொலிஸாருக்கு ரஞ்சிதா எழுதியுள்ள புதிய கடிதத்தில், தனக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளது எனவும், விசாரணைக்கு வர இயலாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியச் செய்திகள்

## அன்டர்ஸன் அமெரிக்கா தப்பிய விவகாரம்: ராஜீவ் மீது கம்யூ. குற்றச்சாட்டு

ஐதராபாத்,ஜூன் 17

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தெரியாமல் யூனியன் கார்பைட் நிறுவன முன்னாள் தலைவர் வாரன் அன்டர்ஸன் அமெரிக்காவுக்குச் சென்றிருக்க முடியாது - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலர் ஏ.பி.பரதன் தெரிவித்தார்.

ஐதராபாத்தில் நடைபெற்ற கட்சியின் 3 நாள் தேசிய கவுன்ஸில் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

பெரிய நிறுவனத்தின் தலைவரான அன்டர்ஸன், அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தெரியாமல் அமெரிக்காவுக்குச் சென்றிருக்க முடியாது.

இந்த விடயத்தில் ராஜீவ் காந்திக்கு அவப்பெயர் வரக் கூடாது என காங்கிரஸ் முயற்சிக்கிறது. நஷ்டஈட்டு சட்ட மூலத்தை அரசு சரியான முறையில் தயார் செய்ய இதுவே தகுந்த தருணம். போபால் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சேர்ந்துள்ள நச்சுக் கழிவுகளை அகற்ற டோவ் நிறுவனத்துக்கு அரசு அறிவுறுத்த வேண்டும்.

- இப்படி இவர் தெரிவித்தார்.

# கோவை மாநாட்டுக்கு ஊறு விளைவிக்க எண்ணுவோரின் கனவு நிறைவேறாது!

## முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை,ஜூன் 17



உண்மைகளை மூடி மறைத்து ஒரு சிலரைத் தூண்டிவிட்டு, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு ஊறுவிளைவிக்க எண்ணுவோரின் கனவு நிறைவேறாது என்பது திண்ணம் - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப் பவை வருமாறு -

இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் இருக்க வேண்டும் என்பது தி.மு.கவின் திட்டவட்டமான கொள்கை. இதற்காக பலமுறை கழக பொது குழுக்களிலும், செயற்குழுவிலும் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அதுபோலவே நீதிமன்றங்களில் வாதாடும் வழக்கு மொழியாகவும் தமிழ் இடம்பெற வேண்டுமென்று தொடர்ந்து வாதாடி வந்திருக்கிறோம். அதற்காக கழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் ஒரு அறிக்கையும் வெளியிட்டுள்ளார்.

நம்முடைய தமிழ்ப்பற்றை - தமிழின் வளர்ச்சியை - தமிழின் தாக்கத்தை - தமிழுக்கு உரிய மாண்பை - தமிழுக்கு உரிய இடத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற நமது ஆர்வத்தினை தமிழகத்திற்கு நினைவூட்ட வேண்டிய அவசியம் கிடையாது.

ஆனால், ஜூன் மாதம் 23 ஆம் திகதி தொடங்கி கோவையில் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு நடைபெறுவதை யொட்டிய செய்திகள் அன்றாடம் வெளிவருவதையும், அதற்கான ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் சிறப்பான ஏற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதையும் கண்டு மனம் பொறுக்காத ஒரு சிலர் எதையாவது காரணமாகக் காட்டி அதனை செய்தியாக் கிட படாத பாடுபடுகிறார்கள்.

உதாரணமாக மதுரை மாநகரில் சட்டத்தரணிகள் சிலர் உயர்நீதிமன்றத்தில் தமிழில் வாதாட வலியுறுத்தி உண்ணாவிரதம் இருக்கிறார்களாம்.

அந்த சட்டத்தரணிகளை அ.தி.மு.கவினரும், ம.தி.மு.கவினரும் சந்தித்து தங்கள் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்களாம். அரசுக்கு எதிராக எங்கே, யார் குரல் கொடுத்தாலும் சரி, அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்க இந்த இரண்டு கட்சியினரும் புறப்பட்டுவிடுகிறார்கள்.

கொடநாட்டுக்கு சென்றுள்ள ஜெயலலிதா, உலகத் தமிழ் மாநாடு பற்றி புலம்பியிருக்கிறார். தனக்குத்தானே தம்பட்டம் அடிக்கும் தன்னல மாநாடு என்றெல்லாம் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை நடைபெற்ற மாநாடுகளையெல்லாம் வெற்றி கொள்ளும் வகையில் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் தமிழ் ஆர்வலர்களும், அறிஞர்களும் வருகிறார்கள் என்ற செய்தியைப் படித்து விட்டு உள்ளம் வெம்பி, கோவை மாநாட்டை ஜெயலலிதா குறை கூறுகிறார்.

தி.மு.கவுக்கும், தமிழுக்கும் உள்ள உறவைப்பற்றி ஜெயலலிதா சான்று கூறத் தேவையில்லை.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவைத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் 50 நாடுகளிலிருந்து 3,000 பேர் பங்கேற்பு

## 23 அரங்க கூடங்களுக்கு தமிழ்ப் புலவர்களின் பெயர்கள்

சென்னை,ஜூன் 17

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை ஒட்டி நடைபெறவுள்ள 23 ஆய்வரங்கங்களின் அரங்கக் கூடங்களுக்கு தமிழ்ப் புலவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு ஜூன் 23 முதல் 27 ஆம் திகதிவரை நடைபெறுகிறது. மாநாட்டின் ஆய்வரங்கத்தை முதல்வர் கருணாநிதி தொடக்கி வைக்கிறார்.

ஆய்வரங்கத்தில் இந்தியா உள்பட 50 நாடுகளில் இருந்து சிறப்பு அழைப்பாளர்கள், கட்டுரையாளர்கள், நோக்கர்கள், பொழிவாளர்கள் என 3 ஆயிரத்துக்கும் மேலானோர் பங்கேற்கின்றனர்.

முகப்பரங்கம், கலந்தாய்வரங்கம், கலந்துரையரங்கம், பொழிவரங்கம், அமர்வரங்கம் என நான்கு நிலைகளில் ஆய்வரங்கம் நடைபெறுகிறது. அமர்வரங்கம் 234 அமர்வுகளில் நடைபெற உள்ளது. ஆய்வரங்க நிகழ்வுகளுக்காக 23 அரங்கக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோ, நக்கீரர், கபிலர், பரணர், ஔவை, பூங்குன்றனார், வெள்ளிவீதியார், பெருஞ்சித்திரனார், கோவூர்கிழார், சாத்தனார், காக்கைபாடினியார், அம்மூவனார், மாசாத்தியார், நக்கண்ணையார், மாமூலனார், மாங்குடி மருதனார், உருத்திரங்கண்ணனார், நப்பூதனார், பிசிராந்தையார், கல்லாடனார், கம்பர் என அரங்கக் கூடங்களுக்கு தமிழ்ப் புலவர்களின் பெயர்களை முதல்வர் கருணாநிதி சூட்டியுள்ளார்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை செல்கிறார் அசின்; தடுக்கும் முயற்சியில் விஜய்

சென்னை,ஜூன் 17

சல்மான் கானுடன் நடிக்கவிருக்கும் புதிய படத்தின் படப்பிடிப்புக்காக நடிகை அசின் இலங்கை செல்லவுள்ளார். இதனால் நடிகர் விஜய் பெரிதும் அதிருப்திக்குள்ளாகியுள்ளார்.

விஜய் - அசின் நடித்த 'காவல்காரன்' படம் ஓகஸ்டில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அசின் இலங்கைக்குப் போவது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அறிந்து அவரைத் தடுக்கும் முயற்சியில் நடிகர் விஜய் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இந்தியத் திரைப்படங்கள் தொடர்பான எந்த நிகழ்வும் இருக்கக்கூடாது. அங்குள்ள தமிழ் மக்களுக்கு அனைத்து உரிமைகளும் கிடைக்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதற்காக தென்னிந்திய திரைப்படக் கூட்டமைப்பு சில அதிரடி முடிவுகளை எடுத்தது. அதன் ஒரு பகுதியே கொழும்பில் நடந்த சர்வதேச இந்தியத் திரைப்பட விழாப் புறக்கணிப்பு.

ஆனால் சல்மான்கான், விவேக் ஒபராய், ஹிருத்திக் ரோஷன் போன்றோர் இதையும் மீறி கொழும்பு போய் கூடிக் குலாவினர்.

இதையடுத்து இவர்களின் படங்களை தென்னகத்தின் 5 மாநிலங்களில் தமிழ்த் திரைக் கூட்டமைப்பு தடை செய்துள்ளது.

அடுத்த கட்டமாக, இலங்கையில் எந்தப் படப்பிடிப்பும் நடத்தக் கூடாது என தமிழ்த் திரைக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், சல்மான் கான் தனது அடுத்தப் படத்தின் படப்பிடிப்பை இலங்கையில் நடத்தத் திட்டமிட்டுள்ளார். இந்தப் படத்தின் நாயகியாக அசின் நடிக்கிறார்.

விஜய்யின் 'காவல்காரன்' படப் பிடிப்பை முடித்த கையோடு நடிகை அசின், ஹிந்திப் படத்துக்காக இலங்கை செல்லப் போகிறாராம்.

இந்தச் செய்தி கேட்டதும் நடிகர் விஜய் பெரிதும் அதிருப்திக்குள்ளாகியுள்ளார். 'காவல்காரன்' படம் ஓகஸ்டில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அசின் இலங்கைக்குப் போவது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அறிந்து அவரைத் தடுக்கும் முயற்சியில் விஜய் ஈடுபட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீன - பாகிஸ்தான் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு அமெ. எதிர்ப்பு

வாஷிங்டன்,ஜூன்17

சீன - பாகிஸ்தான் இடையே இராணுவம் சாராத மின்சாரத் தேவைக்கான அணு சக்தி ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்க ஒபாமா நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவும், இந்தியாவும் இராணுவத் தேவைகளுக்கு அப்பாற்பட்ட மின்சார தேவைக்கான அணுசக்தி ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளன. அதன்படி மின்சார உற்பத்திக்குத் தேவைப்படும் அணுசக்தி உற்பத்திக்கு அமெரிக்கா உதவும்.

இந்த ஒப்பந்தப்படி, இதற்கான மூலப் பொருள்களை அமெரிக்கா விற்பனை செய்யும். பிற அணுசக்தி நாடுகளிடமும் இவற்றை இந்தியா வாங்கிக்கொள்ள முடியும்.

இதுபோன்ற ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் செய்துகொள்ள பாகிஸ்தான் விரும்பியது. அப்படி ஓர் ஒப்பந்தத்தை தங்களுடன் செய்துகொள்ளவேண்டும் என்று அமெரிக்காவை அது வலியுறுத்தியது. இதற்கு அமெரிக்கா சம்மதிக்கவில்லை.

பாகிஸ்தானின் அணு விஞ்ஞானி கான் அணுஆயுத தொழில்நுட்பத்தை வட கொரியா, ஈரான் ஆகிய நாடுகளுக்கு விற்பனை செய்துள்ளமையை சுட்டிக்காட்டி அணு அயுத பரவலுக்கு வழிவகுத்த நாட்டுடன் உடன்பாடு செய்துகொள்ள முடியாது என்று அமெரிக்கா கூறிவிட்டது.


இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் மாற்று வழிகளைத் தேடியது. இதற்கிணங்க, சீனாவுடனான அணுசக்தி உற்பத்திக்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை பாகிஸ்தான் செய்துகொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், பாகிஸ்தானில் 2 அணுஉலைகளை அமைக்க சீனா நிதி உதவி வழங்குகிறது. இதற்கான அந்த உலைகளையும் சீனாவே கட்டிக்கொடுத்து வருகிறது.

சீன - பாகிஸ்தான் அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்ப்பது என்ற தீர்மானத்தை அமெரிக்கா தற்போது எடுத்துள்ளது. இதற்கான நடவடிக்கைகளில் ஒபாமா நிர்வாகம் தீவிரமாக இறங்கியுள்ளது.

அணுஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடுகளுக்கு அணு சக்தி பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு சர்வதேச தடை இருக்கிறது. இந்தத் தடையை சீன - பாகிஸ்தான் ஒப்பந்தம் மீறிவிட்டது என நிபுணர்கள் தெரிவிக்கிறார் கள்.

அணுசக்தி பொருட்களை விநியோகம் செய்யும் 46 நாடுகளின் குழு கூட்டம் நியூஸிலாந்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் இந்த பிரச்சினை பற்றி விவாதிக்கப்படவிருக்கிறது.



தென் ஆபிரிக்கா வந்திருந்த பிரிட்டிஷ் இளவரசர்கள் ஹாரிஸ், வில்லியம் ஆகியோர் லேஸோதோ தேசிய பூங்காவில் உள்ள மலைப்பாம்புடன் விளையாடி மகிழ்ந்தனர்.

## மெக்ஸிக்கோ சிறையில் கலவரம்; 29 பேர் பலி!

மெக்ஸிக்கோ சிட்டி,ஜூன் 17

மெக்ஸிக்கோவில் உள்ள சினாலாவோ மாநில மசாட்லான் நகரிலுள்ள சிறையில், கைதிகளில் இரு பிரிவினருக்கிடையே ஏற்பட்ட மோதலில் 29 பேர் பலியாயினர். இரு பொலிஸார் காயமடைந்தனர்.

பலியான 29 பேரில் 18 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 11 பேர் கத்தியால் குத்தப்பட்டுள்ளனர். கலவரத்தை அடக்க இராணுவம் வரவழைக்கப்பட்டது.

சினாலோவா மாநிலத்தில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் அதிகளவில் வசிக்கிறார்கள். இதனால் அங்கு வன்முறைச் சம்பவங்கள் அவ்வப்போது இடம் பெற்று வருகின்றன.

உலக அரங்கில்

## பங்களாதேஷில் நிலச்சரிவுகளில் சிக்கி 40 பேர் பலி; பலரைக் காணவில்லை

டாக்கா,ஜூன் 17

பங்களாதேஷில் பெய்துவரும் கன மழையால், பெரும் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் சிக்கி 40 பேர் உயிரிழந்துள்ளனர். அநேகர் காணாமற் போயுள்ளனர்.

வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, பங்களாதேஷில் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, சிட்டகாங் மலைப் பகுதி, காக்ஸ் பஜார், பந்தர்பான் ஆகியவை உள்ளிட்ட நான்கு இடங்களில் பாரிய நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இவற்றில் சிக்கி 40 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஏராளமானோர் மண் சரிவுகளுக்குள் சிக்கியுள்ளனர். இதனால், பலியானோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மீட்புப் பணிகளில் இராணுவத்தினரும், தீயணைப்புப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கனரக வாகனங்கள் மூலமாக மண் சரிவுகள் அப்புறப் படுத்தப்படுகின்றன.

## கிர்கிஸ்தான் கலவரத்தில் சிக்குண்ட இந்தியர்கள் தலைநகருக்கு விமான மூலம் அனுப்பப்பட்டனர்

மாஸ்கோ,ஜூன் 17

கிர்கிஸ்தானின் உள்நாட்டுக் கலவரத்தால் பாதுகாப்பின்றித் தவித்த இந்தியர்கள், விமானத்தின் மூலம் தலைநகர் பிஷ்கெக்குக்கு பாதுகாப்பாக அனுப்பப்பட்டுள்ளனர். விரைவில் இவர்கள் தாயகம் திரும்ப உள்ளனர்.

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த கிர்கிஸ்தானின் இரண்டாவது பெரிய நகரம் ஓஷ். இங்கு வசிக்கும் கிர்கிஸ் மக்களுக்கும் உஸ்பெக் மக்களுக்குமிடையே அடிக்கடி கலவரம் நடப்பது வழக்கம்.

கிர்கிஸ்தான் ஜனாதிபதியாக இருந்த பாகியோவ், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, ஓஷ் பகுதியில் வன்முறை ஏற்பட்டது. பாகியோவ் ஆதரவாளர்கள் இங்கு அதிகம் வசிப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

இந்நிலையில், கடந்த வாரம் ஓஷ் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள ஜலாலாபாத் பகுதியிலும் கிர்கிஸ் மக்களுக்கும் உஸ்பெக் மக்களுக்குமிடையே மோதல் வெடித்தது.

ஏராளமான வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது. கத்திக் குத்து, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் தொடர்ந்தன. இதுவரை இந்தக் கலவரத்தில் 124 பேர் பலியாகியுள்ளனர்; ஆயிரத்து 685 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தாக்குதல் அதிகரித்துள்ளதை அடுத்து உஸ்பெக் மக்கள், உஸ்பெகிஸ்தனுக்குத் தப்பிச் செல்கின்றனர். இதற்காக, கிர்கிஸ்தான் - உஸ்பெக் எல்லையில் உள்ள பாதை திறந்து விடப்பட்டுள்ளது. உஸ் பெகிஸ்தானுக்குத் தப்பிச் செல்ல, பல்லாயிரக்கணக்கான கிர்கிஸ்தான் அகதிகள் எல்லையில் காத்திருக்கின்றனர்.

''இந்த அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டும்'' என, ஐ.நா., சிறப்புத் தூதர் மிரோஸ்லேவ் ஜென்கா தெரிவித்துள்ளார். ஓஷ், ஜலாலாபாத் நகரங்களில் தங்கியிருந்த இந்தியர்கள் கடந்த ஒரு வாரமாகதத் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியே வர முடியாமல் தவித்தனர்.

அங்குள்ள இந்தியத் தூதரகத்தின் மூலம் இவர்கள் ஓஷிலிருந்தும் ஜலாலாபாத்திலிருந்தும் தலைநகர் பிஷ்கெக்குக்கு விமானம் மூலம் அழைத்து வரப்பட்டு பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிர்கிஸ்தானின் இடைக்கால அரசின் துணைப் பிரதமர் குறிப்பிடுகையில், ''ஓஷ் பகுதியில் ஏற்பட்டுள்ள கலவரம், தலைநகர் பிஷ்கெக் முதல் வடக்குப் பகுதியான சூய் வரை பரவும் அபாயம் உள்ளது'' என்றார்.

## 'சீட் பெல்ட்' அணியாமல் காரோட்டிய எலிசபெத் மகாராணி!

லண்டன்,ஜூன்17

லண்டன் நகரில் கார் ஓட்டிச் செல்லும் அனைவரும் 'சீட் பெல்ட்' அணிந்து இருக்க வேண்டும். அப்படி அணியாமல் கார் ஓட்டினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

லண்டன் நகரில் வேகமாக சென்ற காரில் ஒரு வயதான பெண்மணி சீட் பெல்ட் அணியாமல் கார் ஓட்டிச்செல்வதைப் போக்குவரத்து பொலிஸார் கவனித்தனர். கார் இலக்கங்களைக் கவனித்தபோதுதான் அது பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணியின் கார் எனத் தெரிய வந்தது.

இதனால் அவருக்கு அபராதம் விதிக்கப்படவில்லை. விதிக்கவும் முடியாது. அவர் பொதுச் சாலையில் கார் ஓட்டிச் செல்லவில்லை. அத்தோடு, மகாராணியை குற்றவாளியாகக் கருதி நடவடிக்கை எடுக்கவும் முடியாது.

பிரிட்டனில் உள்ள நீதிமன்றங்கள் அனைத்தும் அவர் சார்பில் இயங்குபவை. அவர் பெயரால் இயங்கும் இந்த நீதிமன்றங்களில் அவர் மீது வழக்குத் தொடரமுடியாது. அப்படி வழக்குத் தொடர்ந்தால், மகாராணியே தன் மீது வழக்குத் தொடர்வதற்குச் சமமாகிவிடும்.

## மண் சரிவு - வெடிவிபத்துகளால் சீனாவில் 21 பேர் பரிதாபப் பலி!

பீஜிங்,ஜூன் 17

சீனாவில் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட கடும் நிலச்சரிவுகளிலும் வெடிவிபத்துகளிலும் சிக்கி 21 பேர் உயிரிழந்துள்ளனர். பதினைந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

சீனாவின் சிச்சுவான் மாகாணப் பகுதியில் பெய்த பலத்த மழையால் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. நிலச்சரிவுகளால் இப்பகுதியில் கட்டுமானப் பணிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் அழிந்தன.

இவற்றில் 17 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர். மேலும் 6 பேரைக் காணவில்லை. செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.25 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்தது.

நிலச்சரிவுகள் நடந்த பகுதிக்கு விரைந்த தீயணைப்புப்படையினர், அங்கு தீவிர மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை,ஹெனன் மாகாணத்தில் ஷியாடியன் பகுதியில் செவ்வாய்கிழமை காலை ஏற்பட்ட வெடிவிபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர். இப்பகுதியிலுள்ள ஒரு வீட்டில் வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் எதிர்பாராத விதமாக வெடித்ததில் இந்தச் சம்பவம் நடந்தது.

அலுமினிய சுரங்கத்தில் பயன்படுத்துவதற்காக இந்த வெடிபொருள்கள் வைக்கப்பட்டிருந்தன.

ஜியான்ஷி மாகாணப்பகுதியில் உள்ள இரசாயன ஆலையில் நிகழ்ந்த மற்றொரு வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவரைக் காணவில்லை.

## பாகிஸ்தான் உளவு நிறுவனம் தலிபான்களுக்குப் பயிற்சியளித்ததா?

### மறுக்கிறார் வெளியுறவு அமைச்சர்

இஸ்லாமாபாத்,ஜூன் 17

தலிபான்களுக்கு, பாகிஸ்தான் உளவு நிறுவனம் (ஐ.எஸ்.ஐ.) பயிற்சி அளிக்கிறது எனக் கூறப்படுகிறது. இது முற்றிலும் தவறான கருத்து - என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி தொலைக்காட்சிக்குத் தாம் அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

'லண்டன் ஸ்கூல் ஒவ் எகனோமிக்ஸ்' அமைப்பு அண்மையில் வெளியிட்ட ஆய்வறிக்கையில், ''தலிபான்களுக்குப் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ பயிற்சி அளிக்கிறது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''ஆப்கானிஸ்தான் உள் விவகாரத்தில் பாகிஸ்தான் எப்போதும் தலையிடுவதில்லை. தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் எத்தனையோ தியாகங்களைச் செய்துள்ளது. ஏராளமான பொருள் இழப்புகளைச் சந்தித்துள்ளது. இதை அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளும் அறியும்'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளால் லாகூர், பெஷாவர், முல்தான் ஆகிய நகரங்களிலுள்ள ஐஎஸ்ஐ அலுவலகங்கள் மீது தலிபான்கள் அண்மையில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்நிலையில், தலிபான்களுக்கு ஐஎஸ்ஐ அமைப்பு பயிற்சி அளிக்கிறது எனக் கூறுவது வேடிக்கையானது'' என்றும் அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து தலிபான்கள் வெளியிட்ட அறிக்கையில், ஐஎஸ்ஐ-இற்கும், தங்களுக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் 70 சதவீத நிலப் பரப்பு தங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் தங்களது போராட்டத்தில் வெளிநாட்டினருக்குப் பங்கில்லை என்றும் தலிபான்கள் கூறியுள்ளனர்.

இதனிடையே, நேட்டோ சர்வதேச பாதுகாப்புப் படை கொமாண்டர் ஸ்டான்லி, பாகிஸ்தான் சென்று இராணுவத் தளபதி கயானி உள்ளிட்டோரைச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார். தலிபான்களுக்கு எதிரான போர் வியூகம் குறித்தும் அப்போது விவாதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் மீள்குடியமர்வுக்கு ஜேர்மன் உதவி வழங்கத் தயாராகவுள்ளது

## கூட்டமைப்பினரிடம் அந்நாட்டு தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வதற்குத் தேவையான உதவிகளை வழங்க ஜேர்மன் அரசு தயாராக உள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் நாட்டுத்தூதுவர்-ஜென்ஸ் புளொட்னர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அ. விநாயகமூர்த்தி, எஸ். சிறிதரன் ஆகியோருடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ். கோயில் வீதியில் உள்ள ஜி.ரி. சற் அமைப்பின் விருந்தினர் விடுதியில் இச்சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு இடம்பெற்றது.

மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் அவலத்தில் உள்ளனர். அடிப்படை வசதிகள் இன்றி அவர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க ஜேர்மன் உதவ வேண்டும் என்றும் -

முகாம்களில் உள்ள மக்களின் அவலங்களைத் தீர்க்கவும் ஜேர்மன் உதவ வேண்டும் என்றும் - கூட்டமைப்பினர் கோரினர்.

மீள்குடியமர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஜேர்மன் உதவிகளை வழங்கவிருக்கிறது. அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தேவையான - அவசர உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜேர்மன் தூதர் உறுதி கூறினார். (ஒ-1)

## விஷப்பாம்பு தீண்டி படை அதிகாரி மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

விஷப்பாம்பு தீண்டி கனிஷ்ட படை அதிகாரி ஒருவர் கடந்த திங்களன்று மரணமானார்.

பளை ஆறாவது படையணி முகாமில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்தச் சம்பவத்தில் பத்துயர ஓயாவைச் சேர்ந்த லான்ஸ்கோப்ரல் ரத்நாயக்கா முதியான் கலாகே புஷ்பகுமார என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்த மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர். நீதிவானின் பணிப்பின் பேரில் கொடிகாமம் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி செல்வி இ.தவமலர் விசாரணை நடத்தினார்.

# வெளிநாடுகளுக்கு மாணவரை அனுப்பும் நிலையங்கள் குறித்து விசாரணை

கொழும்பு, ஜூன் 17

கல்வி கற்றுக்கொண்டே வெளிநாடுகளில் வேலைசெய்யலாம் என்று விளம்பரம் செய்யும் நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இப்படியான விளம்பரங்களை வெளியிடும் நிறுவனங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரி எல்.கோகுஹ்ணுகே தெரி வித்தார்.

கல்வி நிறுவனங்கள் பகுதிநேர வேலை வாய்ப்புக்காகவும் கல்வி கற்பதற்காகவும் மாணவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியாது. இது சட்டவிரோதமா கும். இவ்வாறான கல்வி நிறுவனங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணிய கத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கனடா, பிரிட்டன், நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கல்வி கற்றுக்கொண்டே-பகுதி நேர தொழில்புரியலாம் எனப் பல பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. இது சட்டவிரோதமாகும் எனவும் கோகுஹ்ணுகே தெரிவித்தார். (ஒ-சி)

# சிகிரியாவில் கைதான மல்லாகம் ம.வி. மாணவன் தம்புள்ள நீதிமன்றால் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 17

கல்விச்சுற்றுலா சென்றபோது சிகிரியாப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மல்லாகம் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் தம்புள்ள நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

சிகிரியா மலையில் உடைந்திருந்த கல் ஒன்றை எடுத்துக் கீழே போட்ட குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப மாணவன் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

வித்தியாலய அதிபர் மற்றும் மாணவனின் பெற்றோர் எடுத்த முயற்சியின் பயனாக பிரஸ்தாப மாணவன் விடுதலை செய்யப்பட்டார்.

பிரஸ்தாப மாணவனின் பெற்றோர் தம்புள்ளவில் தங்கி நிற்கவும், சட்டத்தரணியை ஏற்பாடு செய்யவும் வித்தியாலய நிர்வாகம் கூடிய அக்கறையுடன் செயற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிரஸ்தாப மாணவன் மீதான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல் தெரிவித்தது. (ஒ-1)

## சம்பளப் பட்டியலில் கையொப்பமிடவும்

யாழ். மாவட்டத்தில் தற்காலிக இணைப்புப் பெற்றுக் கடமையாற்றும் கிளிநொச்சி வலயத்தின் ஆனி மாதச் சம்பளக் கொடுப்பனவுப் பட்டியல் வந்துசேர்ந்துள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆசிரியர்கள் இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ். மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் பணிமனைக்கு வந்து சம்பளப்பட்டியலில் கையொப்பமிடுமாறும், இதன்போது ஆசிரியர்கள் ஆனி மாதத்துக்கான தமது விடுமுறை விவரத்தையும் கொண்டு வரும்படியும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-10)

## ஆயுதக் கொள்வனவு மோசடி வழக்கு:

# பொன்சேகாவை நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஜூன் 17

ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான ஆயுதக் கொள்வனவு மோசடி வழக்கு தொடர்பாக பொன்சேகாவை இந்த மாதம் 23ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதம நீதிமன்ற நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

இந்த வழக்கு தொடர்பாக சரத் பொன்சேகாவின் பெயரை சந்தேக நபர்கள் பட்டியலில் உள்ளடக்க அனுமதி வழங்குமாறு இரகசியப் பொலிஸார் நேற்று நீதிவானிடம் கோரினர். அவரின் பெயரை இந்த வழக்கின் மூன்றாவது சந்தேக நபராக அவர்கள் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

இந்தக் கோரிக்கைக்கு அனுமதி வழங்கிய நீதிவான் இந்த வழக்கை இந்த மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்றைய தினம் பொன்சேகாவை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரத்ன இந்த வழக்கின் முதலாவது சந்தேகநபராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## மக்கள் வங்கியின் ஊழியர்களுக்கான இருநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். குடாநாட்டில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்குமான கருத்தரங்கு நாளை மறுதினம் 19ஆம் திகதியும், மறுநாள் 20ஆம் திகதியும் மக்கள் வங்கியின் பிரதேச தலைமை அலுவலகத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ''முன்நிலைக் கடமைகள், வாடிக் கையாளர் திருப்தி, சேவைத்திறன் விருத்தி'' ஆகிய தலைப்புக்களில் கருத்தரங்கு நடைபெறவுள்ளன.

இருநாள் கருத்தரங்கிலும் கலாநிதி க. குகதாசன் வளவாளராகக் கடமையாற்றுவார். (ஒ-க)

## ஒருங்கிணைப்புக் குழு விவசாயக் கூட்டங்கள்

நவாலி, ஜூன் 17

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமும் விவசாயக் கூட்டமும் இன்று வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

விவசாயக் கூட்டம் காலை 10 மணிக்கும், ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் முற்பகல் 11 மணிக்கும் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)

# புலிகளின் முக்கிய தளமாகத் தற்போது மலேசியா பயன்படுத்தப்படுகின்றது

## அந்த நாட்டு அமைச்சரே கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 17

விடுதலைப் புலிகள் தமது செயற்பாடுகளுக்கான முக்கிய தளமாக மலேசியாவைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று அந்நாட்டு உள்விவகார அமைச்சர் ஹிஸாமுதீன்ஹுஸைன் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் உள்ளிட்ட வெளிநாட்டுப் போராளிகள் மலேசியாவைத் தமது முக்கிய தளமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.முஸ்லிம் போராளிகளும் இவர்களுள் அடங்குகின்றனர்.

இந்தக் குழுக்கள் தெற்காசிய நாடுகளை நிதி மற்றும் தகவல் பரிமாற்றத்துக்கும், ஆள்சேர்ப்புக்கும் பயன்படுத்துகின்றன. உள்ளூர் உயர் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களை இந்த ஆயுதக்குழுக்கள் ஆள்சேர்ப்புக்காகக் குறிவைக்கின்றன.

மலேசியாவுக்குள் நுழையும் வெளிநாட்டவர்கள் தொடர்பாகவும் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதற்காக எமது அமைச்சு சர்வதேச புலனாய்வு முகவர்களுடன் நெருங்கிச் செயலாற்றுகின்றது -என்றார்.

அதேசமயம், புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் பலர் மலேசியாவில் இருந்துகொண்டு இந்நாட்டை அவர்களின் செயற்பாடுகளுக்கான தளமாகப் பயன்படுத்துகின்றனர் என தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று மலேசிய பொலிஸ்மா அதிபர் மூஸாஹஸன் தெரிவித்துள்ளார்.

'பெர்னாமா' என்ற மலேசிய செய்தி முகவர் நிலையம் ஒன்று இந்தச் செய்தியைத் தெரிவித்துள்ளது.

# 12,000 முன்னாள் போராளிகளின் விவரத்தை வெளியிடுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

## புலம்பெயர் தமிழருக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 17

அரச படையினரால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் 12 ஆயிரம் பேரின் விவரங்களை வெளியிடுமாறு இலங்கை அரசுக்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நிலையம் கூறியுள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி இந்த அமைப்பு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

படையினரால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் 12 ஆயிரம் பேர் தொடர்பான தகவல்களை இலங்கை அரசு கட்டாயம் வெளியிட வேண்டும். இந்த விடயத்தில் அரசு மௌனத்தைக் கலைத்துவிட வேண்டும்.

இலங்கை அரசின் மௌனத்தைக் கலைப்பதற்கு மனித உரிமைகள் அமைப்புகளும், புலம்பெயர் தமிழர்களும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண் டும். இந்த இளைஞர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களை வெளியிட அரசு தொடர்ந்தும் மறுத்து வருகிறது.

இவ்வாறு செய்வது கைதிகள் மீதான உரிமை மீறலாக அமையும். இதனால் அவர்களின் சார்பில் நீதிமன்றில் சட்டத்தரணிகள் ஆஜராகி வாதாடுகின்றமைக்கான சந்தர்ப்பம் இழக்கப்படுகிறது.

குடும்பத்தினர் கைதிகளைச் சந்திக்க வழியில்லை.மருத்துவ வசதிகள் கைதிகளுக்கு வழங்கப்படுவதும் இல்லை. இவை படையினரால் கைதிகள் மீது பிரயோ கிக்கப்படுகின்ற அழுத்தங்கள் ஆகும்.

இந்தக் கைதிகளில் சிலரை மாத்தி ரமே பார்க்க முடிந்ததாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு முறைப்பாடு செய்துள்ளது.தமிழ் மக்களின் ஆத்திரத்தைத் தணிப்பதற்காகச் சில கைதிகளை அரசு அண்மையில் விடுவித்துள்ளது.

இந்த இரகசியத் தடுத்துவைப்புக்கள் தமிழ்க் கைதிகளின் வாழ்வாதாரத் தைப் பாதிக்கின்றன. அவர்கள் சித்திர வதை செய்யப்படுகின்றனர். மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுகின்றனர்.

அவசரகால சட்டத்தின் நடைமுறை காரணமாக நீண்ட காலத் தடுத்துவைப்புக்கள் தொடர்கின்றன. சித்திரவதைகள், காணாமல் போதல்கள் நீதிக்குப் புறம்பான கொலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே, அரசு இரகசிய தடுப்புக்காவல்களுக்கு முடிவுகட்ட வேண்டும். எல்லாக் கைதிகளும் சட்டப் பிரதிநிதிகளைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்படுவர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசினால் வழிகாட்டல் குறிப்புகள் வெளியிடப்படுதல் வேண்டும்.

பிள்ளைகள் எங்கே?கணவன் எங்கே? கண்டு பிடித்துச் சொல்லுங்கள் என ஏராளமான பெற்றோரும், பெண்களும் எம்மிடம் வினவிக் கொண்டே இருக்கின்றார்கள். அவர்கள் கொல்லப்பட்டு விட்டால் அரசு அதை உறுதிப்படுத்தவேண்டும் என்று அவர்கள் கோரி உள்ளார்கள்.

எனவே, இலங்கையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் எம்மோடு இணையுங்கள் என மனித உரிமைகள் அமைப்புகளுக்கும், புலம்பெயர் தமிழர்களுக்கும் அழைப்பு விடுக்கிறோம். - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாமல் ராஜபக்ஷவின் ' நீலப் படையணியைச் சேர்ந்த' 25 பேர் கொண்ட குழுவினர் உதயனுக்கு நேற்று விஜயம் செய்தனர். அதன் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
(படங்கள்: தேவா, உமா)

# இலங்கையில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்களுக்காகவே ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை இடைநிறுத்தப்பட்டது

## பிரிட்டன் நாடாளுமன்றில் தெரிவிப்பு

லண்டன், ஜூன் 17

''இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்களுக்காகவே ஜி. எஸ். பி. பிளஸ் வரிச்சலுகை இடைநிறுத்தப்பட்டது''

-இவ்வாறு பிரிட்டிஷ் தொழிற் கட்சியைச் சேர்ந்த சியோ பைன் மெக்டொனா தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இலங்கை நிலைமை தொடர்பாக நேற்று விவாதம் ஒன்று இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சியோ பைன் மெக்டொனா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு கூறியவை வருமாறு:-

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை நிலைவரம் தொடர்பாக நன்றாக ஆராய்ந்த பின்னரே இலங்கைக்கான ஜி.எஸ்.பி வரிச்சலுகையைத் தடைசெய்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை அடிப்படையாக வைத்தே இலங்கையில் நடைபெறவிருந்த பொதுநலவாய நாடுகளின் மாநாடு நிறுத்தப்பட்டது. எனினும் இலங்கையின் தமிழருக்கு எதிரான செயற்பாடுகள் 1972 ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டன.

எனவே, இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் பிரிட்டன் முன்னின்று நடத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

## இந்தியா வெற்றி!

கொழும்பு, ஜூன் 17

பங்களாதேஷ் அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

இலங்கையில் நடைபெற்றுவரும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இரண்டாம் நாளான நேற்று, இந்தியா-பங்களாதேஷ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 34.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக துடுப்பாட்டத்தில் இம்ருல் கெய் ஆகக் கூடுதலாக 37 ஓட்டங்களைச் சேர்த்தார். இந்திய அணியின் பந்துவீச்சில் ஷேவாக் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பின்னர், 168 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 30.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 168 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் சிறப்பாக ஆடி, 88 ஓட்டங்களைச் சேர்த்த கம்பீர் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## கிளிநொச்சியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மின்சார சபையின் மக்கள் சேவை நிலையம் திறத்தல், தேசிய தொழிற்பயிற்சி அலுவலகத்தைத் திறத்தல், போக்குவரத்துச் சபை கிளிநொச்சி சாலைக்கு மூன்று பஸ்கள் கையளித்தல், இளைஞர் - யுவதிகளுக்கு தொழிற் பயிற்சியை ஆரம்பித்தல், கூ.மொ.வி. (சதோச) கிளை திறத்தல், கனகபுரத்தில் மருத்துவ முகாமை ஆரம்பித்தல், தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலகம் திறத் தல், கரபந்தாட்டப்போட்டி ஆகிய நிகழ்வுகளில் நாமல் ராஜபக்ஷ பங்குபற்றுகிறார். அத்துடன் அங்கு ஏற்பாடாகி இருக்கும் கலாசார நிகழ்வுகளிலும் அவர் பங்குபற்றுவார். (ஒ-1-405)

**தங்குமிடவசதி**

சுற்றுலாப் பிரயாணிகளுக்குரிய சகல வசதிகளுடனான தங்குமிட வசதிகள் கொக்குவிலில் உண்டு. உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்பு கொள்ளவும். தொ.பே.: 0774160757

**தேவை**

கொம்பியூட்டர் ரைப்செற்றிங், புத்தகம்கட்ட, பான்சிக் கடைக்கு வேலையாள்கள் தேவை.
ராஜ் கொம்பியூட்டர் பிறின்டிங் சென்றர்
இராமநாதன் வீதி (கர்பன்ஸ் றோட்) பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

## நீங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்தோரின் குடியமர்வு ஆகியவற்றின் நிலைமைகளைக் கண்டறியும் பொருட்டு இலங்கை வந்துள்ளார்.

லியன் பாஸ்கோ நேற்றுக்காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார். வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோரும் பேச்சுக்களின் போது பிரசன்னமாகி இருந்தனர்.

அவர் இன்று எதிர்க்கட்சித் தலைவர்கள், தமிழ்க்கட்சித் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் பத்திரிகை ஆசிரியர்களையும் சந்தித்துப்பேசவுள்ளார்.

முல்லைத்தீவுக்கு நேற்றுப் பிற்பகல் சென்ற பாஸ்கோ அங்கு நடைபெறுகின்ற அபிவிருத்திவேலைகள், புனரமைப்புப் பணிகள் என்பவை தொடர்பாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்துள்ளார்.

மாவட்ட அரசாங்க அதிபர் எமில்டா சுகுமார், போருக்கு பிறகு முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்றம் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக அவருக்கு விளக்கியுள்ளார்.

வற்றாப்பளை, குமாரபுரம் பகுதிகளுக்குச் சென்று மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நிலைமைகளையும் கண்ணிவெடி அகற்றும் பணிகளின் நிலைமைகளையும் நேரடியாக லியன் பாஸ்கோ பார்த்து அறிந்துள்ளார்.

வற்றாப்பளைப் பகுதியில் பொதுமக்களைச் சந்தித்த அவர் அவர்களது குறைநிறைகளைக் கேட்டறிந்ததுடன் குமாரபுரம் பகுதியில் இடம்பெறுகின்ற கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்பாக இராணுவ அதிகாரிகளிடமும் எவ்.எஸ்.டி. கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினரிடமும் கேட்டறிந்துகொண்டார்.

தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என அவரிடம் கோரிக்கை விடுத்த பொதுமக்கள் அழிவுக் குள்ளாகிய தமது வீடுகளைத் திருத்தவும் வீடில்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும் வேண்டும் என்றும் கோரியுள்ளனர். முல்லைத்தீவு பகுதிகளின் மீள் குடியேற்ற அபிவிருத்தி நடவடிக்கை களைத் தாங்கள் தொடர்சி யாகக் கவனித்து வருவதாகவும் தேவை யான உதவிகளை அரசாங்கத்தின் ஊடாக வழங்கவுள்ளதா கவும் லியன் பாஸ்கோ அந்த மக்களிடம் தெரிவித்துள்ளார். (அ)

**யாழ். நகரில் மீண்டும்.....**

கணக்கீட்டு புகழ்
திரு. பாலவாசன் (B.B.A.(F.M.Spl.)
ஆரம்பம் : 19.06.2010 சனி ஒரு மணி
(சனி, ஞாயிறு 1-3 மணிவரை நடைபெறும்)
இடம் : - BEACON யாழ்.நகர்.
(பெருமாள் கோயில் அருகில்)
அனுமதி - இலவசம்
A/L 2011 மாணவர்களும் பங்குபற்றலாம்.
அனுமதியினை 18.06.2010 இற்கு முன்னர்
BEACON கல்வி நிலையத்தில்
மேற்கொள்ளவும்.
குறிப்பு : அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளது.
கருத்தரங்கு கையேடு ரூபா 50 மட்டும்.

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கிளிநொச்சியில் பல வைபவங்களில் கலந்துகொள்கிறார். குறிப்பாக இளைஞர் வேலைகள் மன்றக் கிளை இன்று கிளிநொச்சியில் நாமல் ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படுகிறது. இந்த வைபவத்துக்கும் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் சிறிதரன் எம்.பி. கூறினார்.

(ஒ-சி)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் இரண்டு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து அந்த உணவகத்திற்கு அருகில் உள்ள ரயில் நிலையத்தில் இரண்டு தரப்பினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இதில் இலங்கை தூதரகத்தில் பணியாற்றும் சிற்றுழியர் ஒருவரும் நோர்வே சென்றிருந்த முஸ்லிம் நபர் ஒருவரும் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த மோதல்கள் குறித்து பொய்யான பல தகவல்கள் பரவியுள்ள போதிலும் தனிப்பட்ட விடயமே இந்த மோதலுக்கான காரணம் என இலங்கைத் தூதரகம் கூறியுள்ளது.

இந்தச் சம்பவத்தினால் இலங்கை தூதரகத்திற்கோ, தூதரக அதிகாரிகளுகோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது. எவ்வாறாயினும் இந்த சம்பவம் குறித்து ஒஸ்லோ பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ஒ-11)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியுதவியாக வழங்கத் தீர்மானித்துள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 39 பில்லியன் நிதி வடக்கு, கிழக்கு மற்றும் தென் மத்திய மாகாணங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ள தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் - என்றார்.

20 ஆவது தடவையாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் யசூசி அகாஷி தொடர்ந்து கூறுகையில் -

சர்வதேச அமைப்புகள் இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்கக்கூடாது. ஜப்பான், இலங்கைக்கு நிதியுதவி வழங்கி வருகின்றபோதும் எதுவித அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை - என்றார்.

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக செய்தியாளர் ஒருவர் அகாஷியிடம் கருத்துக் கேட்டபோது, நாட்டு நலன்கருதி இலங்கை இது விடயத்தில் முறையான வழி முறையைப் பின்பற்றும் எனத் தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் நல்லிணக்க நடைமுறை குறித்து ஐ.நா.சபை எவ்வாறு உதவ முடியும் என்பது பற்றியும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் தாம் பேச்சு நடத்தியதாகவும் அகாஷி கூறினார். (அ-சி)

**உடனடி வேலை வாய்ப்பு**

சவுதி அரேபியாவில் விமானநிலையம், வைத்தியசாலையில் கிளீனராகக் கடமைபுரிவதற்கு 400 தொழிலாளர்கள் உடன் தேவை. இரு வாரங்களில் பயணம் மேற்கொள்ளலாம். ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் 600 SR. மேலதிக நேரவேலை உண்டு. கல்வித்தகைமை அவசியமில்லை. உணவு தங்குமிடம் இலவசம்.

தொ.பே. :- 0775253191 / 0773825226 / 0774330821

விபரங்களுக்கு :-
PRECIOUS LANKA
பொன்னாலை வீதி, மானிப்பாய்.
(MPCS அருகில்)

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

2001ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 13 ஆவது குடிசன மதிப்பீடு, யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலேயே நடத்தப்பட்டது.

மூன்று பிரதான கட்டங்களாக புதிய கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது என்றும் இதன் மூலம் இடம்பெயர்ந்தவர்களின் திட்டவட்டமான எண்ணிக்கையையும் அறிந்துகொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மீளக்குடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் விடுதலை முன்னணியினர் யாழ்ப்பாணத்திற்கு முன்னர் மூன்று தட வைகள் வருகைதந்திருந்தனர். தற்போது யுத்தம் முடிவடைந்த நிலையில் முதன் முதலாக வடபகுதிக்கு விஜயம் செய்திருக்கிறோம்.

வன்னியில் மீள்குடியேறிய தமிழ் மக்களின் நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டோம். உண்மையிலேயே அவர்களுடைய நிலைமை பரிதாபகரமாகவே உள்ளது.

மஹிந்த அரசாங்கம் அங்கு மீள்குடியேறிய மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட இன்னும் பூர்த்திசெய்ய வில்லை. அத்துடன் அவர்களின் வாழ்வியலை மேம்படுத்தக்கூடிய திட்டங்களேனும் அரசாங்கத்திடம் இதுவரை இல்லையென்றுதான் சொல்லலாம்.

மக்களின் வாழ்வாதாரத்தை - மேம்படுத்தவும் பொருளாதார ரீதியாக வளப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதைவிட்டு அரசாங்கம் பாதுகாப்புக்கென வரவு - செலவுத்திட்டத்தில் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

யுத்தம் முடிவடைந்து ஆறுமாத காலத்துக்குள் தமிழ்மக்களின் சகல பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்று அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. இருப்பினும் 13 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அடிப்படைத் தேவைகள் கூட இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுதான் உண்மையாகும்.

வடபகுதியில் காணாமற்போனவர்களின் விவரங்களைக்கூட அறிக்கையாக வெளியிடமுடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது.

அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர் என்று நாம் அறிகிறோம்.

தடுப்பு முகாம்களில் உள்ள இளைஞர், யுவதிகளை விசாரணைக்குட்படுத்தி நீதிமன்றில் ஆஜர்செய்து குற்றம் செய்யாதவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று எமது கட்சி பலமுறை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

மக்களிடையே நல்லிணக்கத்தை கட்டியெழுப்பவேண்டும் என்று அரசாங்கம் பேச்சளவில் சொல்லிக்கொண்டிருக்கிறதே தவிர செயலளவில் அதற்கு முரணாகவே நடந்துவருகிறது.

எல்லாவற்றையும் இழந்து நிற்கும் வன்னி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

இந்த நாட்டில் சகல மக்களும் சமத்துவத்தோடும் சம உரிமையோடும் வாழுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டாலே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு ஏற்படும்.

பிரச்சினைக்கான தீர்வு உரிய காலத்தில் காணப்படாது விட்டால் வெளிநாடுகளின் தலையீடு மேலும் அதிகரிக்கும் - என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜிதஹேரத், அனுரகுமார திஸநாயக்க, விமல் ரத்ன நாயக்கா, முத்துபண்டார ஐயக்கோன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய இ.சந்திரசேகரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் மருந்தன் மோகன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஒ-9)

அநேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க
இரசாயனவியல் G.Beno Rajothayan
Thu., Fri. - 6 p.m.

PHYSICS - (Eng. Medium) - Sat., Sun.
BY: M.KARUNANITHY
2011 (A/L) - Heat 6 p.m.
2012 (A/L) Mechanics - 4 p.m.
N.E.W. Anaippanthi

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org